யட்சன்

சுபா

ஓவியம் : ஸ்யாம்

மொட்டை மாடியில் கால் வைத்ததும், காற்று அள்ளிக்கொண்டு போனது. தரையில் ஓடிய நீல நிற பி.வி.சி. பைப்களை மிதிக்காமல் கவனமாக செந்தில் காலெடுத்து வைத்தான். கொடிகளில் படபடத்துக்கொண்டு இருந்த ஜட்டிகளிலும், பனியன்களிலும் தலைமுடி கலையாமல் குனிந்து வெளியே வந்தான்.

இருள் உதிர்ந்து, வெளிச்சம் பூக்கத் துவங்கிஇருந்த மிக அதிகாலை. திருவல்லிக்கேணியின் அந்த மேன்ஷனின் மொட்டை மாடியில் இருந்து அரை கி.மீ. தொலைவில் கடற்கரை. கடலுக்குள் இருந்து கொக்கி போட்டு இழுப்பதுபோல் மேலே எழும் சூரியன்.

செந்தில் செல்போனை எடுத்தான். நோக்கியா வின் எண்கள் மேல் தோல் உரிந்திருந்தன. டயல் செய்தான். மறுமுனையில் ஒரு முறை ரிங் கேட்டதும், தொடர்பைத் துண்டித்தான். சில நொடிகளிலேயே அவனுடைய போன், 'வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்...' என்று உரத்துப் பாடியது.

தீபாதான்.

'ஹாய்... குட் மார்னிங்!'

'மார்னிங் தீபா! எழுப்பிட்டேனா..?'

'உன் போனுக்காகத்தான்டா வெயிட் பண்ணிட்டு இருக்கேன்.'

செந்திலுக்குக் குரல் சிக்கியது, 'ஸாரி தீபா...'

'எதுக்குடா?'

'இன்னும் எத்தனை நாளைக்குதான் உனக்கு மிஸ்டு கால் குடுத்துட்டுக் காத்திருக்கிறது? நீ அனுப்பற பணத்துல மேன்ஷன் வாடகை, மெஸ் பில்லுனு செட்டில் பண்ணிக்கிட்டு... வெக்கமா இருக்கு.'

'செந்தில்ல்ல்ல்...'

'அதுக்கு இல்ல தீபா...'

'எதுவும் சொல்லாத... இன்னிக்கு முக்கியமான ஒரு விஷயத்துக்குப் போற... மூட் அவுட் பண்ணிக்காத. நீ சிரிக்கறப்ப உன் கண்ல ரெண்டு பல்ப் போட்ட மாதிரி பளிச்னு இருக்கும்டா. அதுதான்டா உன் ப்ளஸ் பாயின்ட். அதை மிஸ் பண்ணிராத!'

செந்திலின் கண்களைச் சற்று உற்றுநோக்கினால், இப்போதுகூடப் பூத்திருந்த கண்ணீரில் சூரிய வெளிச்சம் பளிச்சென்று விளக்குப் போட்டாற்போல்தான் நெளிந்தது.

'ஷேவ் பண்ணியா?'

'பண்ணேன்...' செந்திலுடைய விரல், கன்னத்தில் இருந்த பென்சில் கோடு வெட்டுக் காயத்தை வருடிப் பார்த்தது.

'ரெடியாயிட்டியா?'

'கிட்டத்தட்ட...'

'அதே பிரவுன் கலர் ஷர்ட்டா?'

'ஆமா.'

'முட்டாள்... புதுசா எதுக்கு வாங்கின? அதைப் போட்டுக்கலாம்ல?''

'இல்ல தீபா... இன்னிக்கு எடுக்கப்போறது கோபிசந்த். பெரிய கேமராமேன்கிட்ட அசிஸ்டென்ட். பீச் பின்னணி. வேற கேமரா. வேற லைட்டிங். சட்டை மட்டும் நீ வாங்கிக் கொடுத்தது. என்னோட அந்த சென்டிமென்ட்டை மாத்தாத... ப்ளீஸ் விட்டுரு!'

சற்றுத் தயங்கி, 'செந்தில், நேத்து உங்க அம்மாவைக் கோயில்ல பாத்தேன்டா!' என்றாள்.

'என்ன சொன்னாங்க?'

'சொன்னாங்களா..? கொல்லாம விட்டதே பெரிய விஷயம். என்னைப் பாத்ததும், சாமிகூடக் கும்பிடல... விருட்டுனு திரும்பிப் போயிட்டாங்க!'

செந்தில் கண்களை மூடினான். பெருமூச்சுவிட்டான்.

'தீபா, உன் பேலன்ஸ் தீர்ந்துரப்போவுது. எனக்கு உன் லிப்ஸால ஒரு ஆல் த பெஸ்ட் சொல்லு!'

'ப்ப்ச்ச்ச்... போதுமா? ஆல் தி பெஸ்ட். நீ ஜெயிப்படா. இன்னும் ரெண்டு மாசத்துக்குள்ள போஸ்டர் போஸ்டரா சிரிச்சுட்டு இருப்ப. உன் மூஞ்சி பேப்பர் பேப்பரா வரும்... பாரேன்...'

வழக்கம்போல் அவனுக்குள் அவள் ஆக்சிஜன் செலுத்தினாள். செந்தில் போன் தொடர்பைத் துண்டித்தான்.

தமிழகத்தின் வெவ்வேறு மூலைகளில் இருந்தும் சென்னையை நோக்கிப் பயணப்படும் கனவுகள் நிறைந்த பல ஆயிரம் இளைஞர்களில், செந்திலும் ஒருவன். ஊரில் மன்னார் ஸ்டுடியோவில் எடுத்த புகைப்படத்தின் பின்னால் செல்போன் நம்பரை எழுதி, எத்தனையோ சினிமா கம்பெனிகளில் எத்தனையோ அசிஸ்டென்ட் டைரக்டர்களிடம் கொடுத்துவிட்டு, ஒவ்வொரு முறை போன் ஒலிக்கும்போதும் நம்பிக்கையோடு ஏமாந்திருக்கிறான். அவனுடைய முன்கதைக்கு இதற்கு மேல் இங்கே நேரம் இல்லை.

செந்தில் போனை பாக்கெட் டில் போட்டுக்கொண்டு

மேன்ஷனின் மூன்றாவது மாடிக்கு இறங்கினான். மூன்றடி அகலக் குறுகலான காரிடாரில் நடந்தான். ஆறாம் நம்பர் கதவை இரண்டு முறை குட்டி னான். திறக்கவில்லை. மறுபடி தட்டுவதற்காகக் கை வைத்தபோது, கதவு தானாகத் திறந்துகொண்டது.

'கோபி...' என்று சன்னமாகக் குரல் கொடுத்தான். பதில் இல்லை. எட்டிப்பார்த்தான். சுவரில், விதவிதமான போஸ்டர்களில் சூப்பர் ஸ்டார் யோசித்தார், தலையைக் கோதினார், நரைத்த வழுக்கையுடன் இடுங்கிய கண்களால் மலர்ந்து சிரித்தார்.

கோபியைக் காணவில்லை. செந்தில் அறைக்குள் நுழைந்தான். ஒற்றைக் கட்டில். சுத்தமான படுக்கை விரிப்பு. சுகந்தமான ஒரு வாசம். டால்கம் பவுடர், டியோடரன்ட், பெர்ஃப்யூம்...

சௌந்தரிடம் ஆறாவது உதவியாளனாக இருப்பதாகத்தானே கோபிசந்த் சொன்னான். அட்டாச்டு டாய்லெட்டுடன் சிங்கிள் ரூம் எடுத்துக்கொள்கிற அளவுக்கு வசதியானவனா..? ('சொந்தமா கேமரா இல்ல, பிரதர். சீனியர்கிட்ட கேட்டிருக்கேன்.')

குளிக்கிறானா? பாத்ரூமை நெருங்கினான்.

திடீரென்று காற்றில் ஓர் அசைவு. என்ன என்று உணரும் முன், பின்னால் இருந்து வலுவான ஒரு கை செந்திலைப் பிடித்து இழுத்தது. வாயையும் மூக்கையும் சேர்த்து நீளமான, உறுதியான விரல்கள் அழுத்தின.

'அசைஞ்சே... சீவிருவேன்!' என்று காதில் குரல் அதட்டியது. கழுத்தில் சிலீரென்று கூரான கத்தி முனை பதிந்தது. செந்தில் உறைந்தான்!

-தடதடக்கும்...

# யட்சன்

சுபா


ஓவியம் : ஸ்யாம்

செந்திலுடைய இதயம் எக்ஸ்பிரஸ் வேகத்தில் துடித்தது.

''கோ... கோ... கோ...பி...'' என்று முனகினான். பின்னால் இருந்து பிடித்திருந்தவன், நிலைக்கண்ணாடிக்கு எதிரே அவனை அப்படியே சற்று நகர்த்தினான். இருவருடைய பிம்பங்களும் தெரிந்தன. தன்னுடைய முகம் இவ்வளவு கோரமாக மாறும் என்று செந்தில் நினைத்ததே இல்லை.

பின்னால் இருந்தவன், இவனைவிட ஆறு அங்குலமாவது உயரமாக இருந்தான். சற்றே அகலமான நெற்றி. அடர்ந்த புருவங்கள். ஒளிரும் விழிகள். நேரான நாசி. குறைந்தது ஒரு வாரமாவது ஷேவ் செய்யப்படாத மீசை, முள்தாடி. அதற்கு மேல் கவனிக்க நேரம் கொடுக்காமல், அவன் சட்டென்று பிடிப்பைத் தளர்த்தினான்.

"ஸாரி பிரதர்... என் லவ்வரோட அண்ணன் மெரட்ட ஆள் அனுப்பியிருக்கான்னு நினைச்சுட்டேன்" என்று கத்தியை விலக்கிக்கொண்டான். ஒலிபரப்பாளர்களைப் பொறாமைகொள்ளவைக்கும் உறுதியான குரல். அச்சத்தில் இருந்து முழுமையாக விடுபடாமல், செந்திலுடைய மார்பு பொங்கிப் பொங்கித் தழைந்தது.
"கோ... கோபி இல்ல?"
"நீங்க ரூம் மாறி வந்துட்டு, என்னைக் கேள்வி கேக்கறீங்க? இங்க என்னைத் தவிர எவனும் இல்ல."



உதறும் விரல்களைக் கட்டுப்படுத்தி "என் பேரு செந்தில்..." என்று இவன் நட்பு டன் கை நீட்டினான்.
"நான் கேக்கலியே..!" என்று தோளில் சற்று அழுத்தமாகவே கை வைத்து அறைக்கு வெளியே அனுப்பி, கதவை அவன் பட்டென்று அறைந்து சாத்தினான்.
கசங்கிய சட்டையை நீவிவிட்ட படி செந்தில் திகைத்து நின்றான். என்ன ஆள் இவன்..? தப்பான கழுத்தில் கத்தி வைத்துவிட்டோமே என்ற குற்ற உணர்வுகூடவா இல்லை? சுதாரித்து, கோபிசந்தின் எண்ணுக்கு டயல் செய்தான். இரண்டு கதவுகள் தள்ளி, போன் ஒலித்தது. அந்தக் கதவு திறந்தே இருந்தது. கேமரா லென்ஸை டிஷ்யூ பேப்பரால் துடைத்துக்கொண்டே, கோபிசந்த் நிமிர்ந்தான்.
"வாங்க செந்தில்..."
கோபிசந்த் ஓர் உற்சாகப் பந்து. அவனும் மதுரைப் பக்கம் ஏதோ ஒரு கிராமம். அடர்த்தியான கறுப்பு. சிரிக்கையில் பல் வரிசை பளீரென்று மின்னலாகத் தாக்கும். கண்களில் உயிர் இருக்கும். எப்போதும் காலர் வைக்காத டி ஷர்ட்தான்.
"நீங்க நாலுன்னு சொன்னத ஆறுன்னு நெனைச்சி, தெரியாம எதிர் ரூமுக்குள்ள போயிட்டேன்."
"ஐயோ, அது சிங்கிள் ரூம். அவ்வளவு வாடகை நமக்குத் தாங்காது. அட்டாச்டு டாய்லெட் வேற. யார் க்ளீன் பண்றது? காமன் டாய்லெட்னா, தெனம் சுத்தம் பண்ணிடறாங்க. பிரச்னை இல்ல."
"கத்திலாம் வெச்சிருக்கான் கோபி... யார் அது?"
"மூஞ்சியே பாத்ததில்ல... ரெண்டு வாரம் முன்னாடிதான் வந்தான். எப்ப வரான், எப்ப போறான்னு புரியல. ரூம்லேர்ந்து ரஜினி பாட்டு கத்திட்டு இருந்தா, இருக்கான்னு அர்த்தம்."
கோபிசந்த் கேமராவை எடுத்துக்கொண்டான். "போலாமா..?"
ஆழமான படிகளில் இறங்கினார்கள். மேன்ஷன் இருந்தது ஒரு குறுகலான சந்து. இரண்டு மோட்டார் சைக்கிள்கள் தேய்த்துக்கொள்ளாமல் எதிரெதிரே கடப்பதே சாமர்த் தியம்.
கோபிசந்த், தன் பைக்கை உதைத்துக் கிளப்பினான்... "ஏறுங்க..!"
கடற்கரை.
கரையோரப் படகு. குவித்துவைத்த நைலான் வலைகள். பரந்துவிரிந்த மணல்வெளி. ஆரஞ்சு வானம். வெவ்வேறு பின்னணியில் கோபிசந்த் அவனைக் கிளிக்கினான்.
"கொஞ்சம் லைட் வாங்கிக்கங்க... சின் அப்... லுக் இங்க..."
கிட்டத்தட்ட 40 நிமிடங்களில் 200 டிஜிட்டல் பிம்பங்களில் செந்தில் சிறைபட்டான்.
பைக்கில் ஏறியதும், "மல்லிகா மெஸ்ஸுக்கு விடுங்க" என்றான். திருவல்லிக்கேணி மேன்ஷன்களை நம்பி, பல தனியார் மெஸ்கள் சந்துவாரியாக சிதறிக்கிடந்தன. 'மல்லிகாவுல இட்லி நல்லாயிருக்கும். குபேர்ல ஆனியன் ஊத்தப்பம் சூப்பர். ஜானுவுல சட்னி வீணாப் போயிருக்கும். வேலுல பிரியாணி பின்னும்!' என்று அவ்வப்போது ரூம்வாசிகளால் வாய்வார்த்தையாக ஸ்டேட்டஸ் அப்டேட் ஆகும்.
மல்லிகா மெஸ். முதுகு இல்லாத பழமையான மர பெஞ்ச். வாழையேடு. 'டொக்... டொக்...' என்று ஒலியுடன் வைக்கப்பட்ட டம்ளர்களில், கெட்டில் தும்பிக்கை மூலம் நீர் நிரப்பப்பட்டது.
"செட் தோச, வடகறி ரெண்டு."
இலையில் தண்ணீர் தெளித்துத் துடைத்தபடி, "அப்பா என்ன பண்றாரு செந்தில்?" என்றான் கோபிசந்த்.
"கவர்மென்ட் ஸ்கூல் டீச்சர்."
"மனசு வந்து சினிமாவுக்கு அனுப்பினாரா?"
"ஆளைப் பாத்தீங்களே? 'ரெண்டு தங்கைங்களையும் கரையேத்தறது உன் பொறுப்பு'னு மெரட்டினாரேனு, டிகிரி முடிச்சதும் ஸ்கூட்டர் விக்கற கடையில கொஞ்ச நாளைக்கு சேல்ஸ்மேனா இருந்தேன். அங்கேயே மேனேஜர் லெவலுக்குப் போவேன்னு அவர் கனவு

கண்டாரு. என் கனவு சென்னை. சினிமா. ஹீரோ. சொன்னதும் கோவத்துல பாதி சாப்பாட்டுல எழுந்து போயிட்டாரு. அம்மாவுக்கும் பிடிக்கல. தெனம் வீட்ல சண்டைதான். வீட்டுக்குச் சொல்லாமதான் ஓடி வந்திருக்கேன்."

"இப்போ, லாட்ஜுக்கு வாடகையெல்லாம் எப்படிக் கொடுக்கறீங்க?"

அதற்குப் பதில் சொல்வதற்குள், செந்திலின் பார்வையில் அவன் வந்தான். செந்தில் குரலைச் சற்றே குறைத்துக்கொண்டு, "உடனே திரும்பிப் பாக்காதீங்க. கத்தியைக் காட்டி மெரட்டினான்னு சொன்னேனே, ஆறாம் நம்பர் ரூமு... அவன் இங்க வந்திருக்கான்" என்றான்.

-தடதடக்கும்...

## யட்சன்

**சுபா**


ஓவியம் : ஸ்யாம்

தன் அறைக்குள் தடாலடியாக நுழைந்து செந்தில் என்று அறிமுகம் செய்துகொண்டவன், மெஸ்ஸில் அமர்ந்திருப் பதை பாரியின் தேர்ந்த கண் கள் கவனித்தன. தன்னைக் காட்டி அடுத்தவனிடம் அவன் பேசியதை அலட்சியம் செய்து வெளியே நடந்தான்.

பாரிக்குப் பிறப்புச் சான்றிதழ் கிடையாது.

அம்மா? அப்பா? பிறந்த இடம்? பிறந்த தேதி? எதுவும் அறியான்.

ஐந்தாறு நாள் குழந்தையாய், கோவை மருத்துவமனை அருகில் குப்பைத் தொட்டியில் கண்டெடுக்கப்பட்டவன். அங்கிருந்து கேரளா வழியாக சென்னைக்குப் பயணம். மாநகரில் வெவ்வேறு அம்மாக்களின் தோள்களிலும், மடிகளிலும் அரைமயக்க நிலையிலேயே போக்குவரத்து சிக்னல்களிலும், கோயில் வாயில்களிலும் பிச்சை எடுக்கப் பயன்பட்டவன். 'குமாரு', 'குட்டி', 'வெளுத்தவன்' என்று வெவ்வேறு உத்தேசப் பெயர்களுடன் கைமாறியவன்.



ஏழு வயதில், சக பிச்சைத் தோழனுடன் தப்பித்து, ஏதோ பஸ் பிடித்து, இறங்கிய இடம் புதுச்சேரி. அங்கே, நேரு வீதியில் பிரிட்டிஷ் பெயர்கொண்ட லாட்ஜில் ரூம்பாய் வேலை. அங்குதான் பாரி என்ற பெயர் நிரந்தரமானது. 40 சுருக்கமான அறைகளில் தங்கிய வாடிக்கையாளர்கள் அனைவரும் அவனையே கோரினர். பகல்களில் ஸ்பெஷல் காபி, மாலைகளில் சில்லிட்ட பீர், இரவுகளில் நிரோத் என்று வாங்கி வர... களைப்பு இல்லாமல் ஓடிக் கொண்டு இருப்பான். மூடு இருந்தால், மேனேஜர் இரவுக் காட்சி சினிமாவுக்கு அழைத்துப் போவார். அப்படித்தான் சூப்பர் ஸ்டாரின் உபாசகன் ஆனான்.

மற்றபடி, நிராகரிக்கப்பட்ட, பல ரகசியக் கறைகளைக்கொண்ட மெத்தை மீது வாசலை ஒட்டிப் படுப்பான். போலீஸ் ரெய்டு வந்தால், அறைக் கதவுகளைத் தட்டி எச்சரிக்க ஓடுவான்.

வந்து போகும் அக்காக்கள் விடிகாலைகளில் ஐந்தும், பத்துமாக டிப்ஸ் கொடுத்துவிட்டுப் போவார்கள்.

சாவித்திரி அக்கா மட்டும் ஜிப் வைத்த அரை டிராயர்கள், கை வைக்காத கலர் பனியன்கள் என்று வாங்கித் தருவாள். வாடிக்கை இல்லாத நாட்களில், கூப்பிட்டு மடியில் படுக்கவைத்துக்கொள்வாள். மீசை துளிர்விட்ட வயதில், அவன் பனியனுக்குள் அவள் கைவிட்டபோது, 'வேணாங்க்கா' என்று விலகினான். அவளைத் தவிர்க்க ஆரம்பித்தான்.

பதின்மூன்றாவது வயதில், அவளால் வாழ்க்கையில் திடீர் திருப்பம். தனபால் அறிமுகமானார்.

'பெரிசா வரவேண்டியவன். இங்கியே இருந்தா, மாமா வேலை பார்த்தே வீணாப் போயிடுவான். இவனுக்கு ஏதாவது வழி காட்டுய்யா...' என்று சாவித்திரி அக்கா கொஞ்சலாகச் சொன்னாள்.

'என்கூட மதுரைக்கு வந்துருடா...' என்றார். சந்தோஷமாகத் தலையசைத்தான் பாரி.

மதுரை.

புதிய மனிதர்கள். புதிய சட்டங்கள்.

தனபாலுக்கு வெளிப்படையாக மரக்கடை வியாபாரம். மறைவில், அவரிடம் ஒரு குழுவே வேலை பார்த்தது. அதில் ஒருவனிடம் பாரியை ஒப்படைத்தார்.

'மலையப்பா, இவனைத் தயார் பண்ணுடா...'

தண்டால் எடுக்கவும், கர்லா சுற்றவும், மற்ற உடற்பயிற்சிகள் செய்யவும் பாரிக்குப் பிடித்து இருந்தது. குறைவில்லாமல் சாப்பாடு. 16 வயதில், நான்கு அங்குல சிறுகத்தி ஒன்றைக் கொடுத்தான் மலையப்பன். வரிவரியாகச் சுருண்டிருந்த அதன் திருகாணி முனையை எப்படிச் செருகி, எப்படி இழுத்தால் எதிரியின் குடல் வெளியே வரும் என்று கற்பித் தான்.

முழுப் பூசணியில் எக்ஸ் குறிகள் போட்டு, புள்ளி பிசகா மல் குத்தியெடுத்துக் காட்டியதும், பாரி களம் இறக்கப்பட்டான்.

கடைசிக் காட்சி முடிந்து மக்கள் வீடு திரும்பும் நேரம்... மாநகராட்சி விளக்குகள் மாய்ந்துபோன தெருவில், ஒரு பழவண்டியின் பின்னால் இருளில் ஒளிந்திருந்தார்கள்.

காலடிச் சத்தம் கேட்டதும் மலையப்பன், பாரியின் தோளில் தட்டினான்.

'அந்த பச்சை சட்டை... முகத்தைக் காட்டிராத...' என்றான்.

பாரி பதுங்கி ஓடினான். செயல்பட்டான். அந்த ஆள் நடந்ததை உணர்ந்து, இடுப்பில் கையை அழுத்தி, விரல் இடுக் குகள் வழியே கசியும் ரத்தம் கவனித்து, அலறும் முன், ஓடி வந்துவிட்டான்.

அந்தக் கணம் பாரி விநோதமான ஓர் உணர்வை அனுபவித்தான். பெருமையா..? பரிதவிப்பா..? போதைக் கிளர்ச்சியா? புரியவில்லை. அதற்கப்புறம், இரண்டு வருடங்களில் நான்கே சம்பவங்கள். பாரியை யாரும் நினைவில் பதிவுசெய்துகொள்ளவில்லை.

திடீரென்று தனபால் நாட்டுத் துப்பாக்கியால் சுடப்பட்டு, இரண்டு நாட்கள் கண்ணீர் அஞ்சலி சுவரொட்டிகளில் வாழ்ந்து மறைந்தார். குழு சிதறியது.

பாரி தனியனானான். ஓரிடத்தில் தங்காமல், கையிருப்புக்குத் தக்கபடி வெவ்வேறு லாட்ஜ்களிலும் ஹோட்டல்களிலும் வாழ்ந்தான். எந்தக் குறிப்பிட்ட குழுவையும் சாரா மல், யார் கூப்பிட்டாலும் போனான். பிடித்தால், கொடுத்த கூலிக்குப் போய் மிரட்டினான். அடித்தான்.

ஒரே ஒரு நிபந்தனைதான். சூப்பர் ஸ்டார் ரஜினியின் புதுப் படம் ரிலீஸ் என்றால், கோடி ரூபாய் கொடுத்தாலும், அன்றைய தினம் வேறு எந்த வேலையும் எடுத்துக்கொள்ள மாட்டான்.

அன்றன்றைக்குக் கிடைத்த பணத்தைத் தாராளமாகச் செலவுசெய்து சந்தோஷமாக இருந்தான். அடுத்த நாள்பற்றிக் கவலைப்படத் தேவை இன்றித் தொழிலும் பணமும் புழங்கியது.

சென்ற மாதம் திடீரென்று சூப்பர் ஸ்டாரால் அதற்கு எதிர்பாராத முடிவு வந்தது.

- தடதடக்கும்...

யட்சன்

சுபா ஓவியம்: ஸ்யாம்

எக்ஸ்பிரஸ் தொடர்

சென்ற மாதம் வரை, மதுரையை விட்டு வெளியேறும் எண்ணம் பாரிக்கு இல்லை. அவசியத்தை உண்டுபண்ணியவன் மலையப்பன்.

'பாரி, ஒனக்கு ஒரு சூப்பர் வேலை காத்துட்டு இருக்கு... வா... சரக்கடிச்சிட்டே பேசுவோம்' என்று அழைத்தான்.

என்ன வேலை என்பதைச் சொல்லாமல் தனக்குள் கழுதைப் புலிபோல் சிரித்துக்கொண்டு இருந்தான். நான்கு லார்ஜ் ஏறியதும், 'பாரி, இன்னிக்கு வீரபாகுவப் போட்டுட்டாங்கடா...' என்று அவனை அணைத்துக்கொண்டான்.

'தெரியுண்ணே...'

'இன்னிலேர்ந்து இங்க நான்தாண்டா சூப்பர் ஸ்டாரு...'

பாரி அவனிடம் இருந்து உதறி விலகினான்.

"வேற பேரு வெச்சுக்கண்ணே... இந்தியால ஒரு சூப்பர் ஸ்டாருதான். அது எங்க தலைவர் ரஜினிதான்.'

'அவர என்னோட ஒத்தைக்கு ஒத்தை வரச்சொல்றா... யார் சூப்பர் ஸ்டாருன்னு பாப்பம்...' என்று உள்ளே போன சரக்கு மலையப்பனைக் கெக்கலிக்கவைத்தது.

அந்தக் கணம் பாரி நிலையிழந்தான். மலையப்பனைக் கோபமாகப் பிடித்துப் பின்னால் தள்ளினான்.

மூன்றாவது மாடியில் இருந்து தலைகுப்புற விழுந்து, உயிர் பிழைக்கும் அதிர்ஷ்டம் மலையப்பனுக்கு இல்லை. அங்கு நடந்ததை யாரும் கவனிக்காத அதிர்ஷ்டம் பாரிக்கு இருந்தது.

அவர்களுடைய இந்தக் கடைசிச் சந்திப்பு யாருக்கும் தெரியாது என்பதால், இரவோடு இரவாக சென்னைக்கு பஸ் ஏறிவிட்டான்.



சென்னையில் மேன்ஷன் அறை எடுத்து எல்லாவற்றையும் மறந்து நிம்மதியாக இருந்தான். அதைக் கெடுப்பதுபோல், மூன்று நாட்களாக எவனோ பின்னாலேயே இடைவெளிவிட்டுத் தொடர்ந்துகொண்டு இருந்தான்.

அவன்தான் அறைக்குள் நுழைந்துவிட்டான் என்று நினைத்து, அவசரப்பட்டு மடக்கிவிட்டான். கத்தியைக் கண்டு செந்தில் மிரண்டதை நினைத்து, பாரி தனக்குள் சிரித்துக்கொண்டு நிமிர்ந்தான். அவன் பார்வை கூர்மையானது.

மூன்று நாட்களாக அவனைப் பின்தொடர்பவன் இந்த அதிகாலையிலேயே எதிர்ப்புறம் தென்பட்டான். இன்றைக்கு இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்.

பாரி, மேன்ஷன் இருந்த சந்தில் நுழையாமல் தவிர்த்து, நேராக மெள்ள நடந்தான். பெல்ஸ் ரோடு போக்குவரத்து சூடுபிடிக்க ஆரம்பித்து இருந்தது. இஸ்திரி போட்டுக் காலம் தள்ளும் தள்ளுவண்டிகள் நடைபாதையில் ஏற்றப்பட்டுக்கொண்டு இருந்தன. கரித்
துண்டு பிரமிட்கள் மண்ணெண்ணெயால் குளிர்விக்கப்பட்டு, தீக்குச்சிகளால் பற்றவைக்கப்பட்டன. நடைபாதைக் கோயிலில் அம்மனைக் கூவி அழைக்க ஒலிபெருக்கி விளக்குக் கம்பத்தில் ஏறிக்கொண்டு இருந்தது.

பாரி, சாலையைக் கடந்து வலதுபுறம் இருந்த சந்துக்குள் நுழைந்தான். மூன்று தெருக்கள் சந்திக்கும் சந்திப்பு வந்ததும், ஒரு நகை ஆசாரி யின் மூடப்பட்டு இருந்த கடை நிழலில் ஒதுங் கினான். பதுங்கினான். பாக்கெட்டில் இருந்து பர்ஸை எடுத்தான்.

பர்ஸில் ஒரு பக்கம் சூப்பர் ஸ்டாரின் புகைப்படம். இன்னொரு பக்கம் நான்கு விரற்கடை அகலம் உள்ள முகம் பார்க்கும் கண்ணாடித் துண்டு. பின்னால் வருபவர்களைக் கவனிப்பதற்காகவே எப்போதும் பர்ஸில் இருக்கும். மலையப்பன் கற்றுத்தந்த பாலபாடம்.

பதுங்கி இருந்த இடத்தில் இருந்து கையை மட்டும் சற்றே வெளியே நீட்டியதும், தொடர்பவன் அந்தக் கண்ணாடியில் தென்பட்டான். அந்தச் சந்திப்பில் நுழைந்து, அங்கும் இங்கும் கண்களால் தேடியபடி மெள்ள பாரியின் மறை விடத்தை நெருங்கினான்.

தான் ஒளிந்திருந்த இடத்தைக் கடக்கவிட்டு, பாரி சட்டென்று பின்னால் போய் அவனை மடக்கினான்.

அவன் கழுத்தில் இரண்டு விரல்களால் அழுத்தி, 'யார்றா நீ..? எதுக்கு என்னை வேவு பார்க்கற..?' என்று உறுமினான்.

அந்த ஆளின் தொண்டையில் க்ளக் என்று எச்சில் அச்சத் தாண்ட வம் ஆடியது. இரு கைகளையும் மேலே தூக்கிக் கும்பிட்டான்.

'பிரதர், நான் எதிரி இல்ல...' என்ற வார்த்தை களை உதிர்ப்பதற்குள் அவனுக்கு உயிர் போய் உயிர் வந்தது.

பாரி, அவனுடைய தொண்டைக்குழியில் அழுத்தியிருந்த விரல்களை விலக்கினான்.

'அப்ப யாரு..?'

'எம் பேரு பூமணி. நீ பாரிதான..?'

'நான் யாரா இருந்தா உனக்கு என்ன..?'

'மலையப்பன்தான் உன்னைப் பத்தி விவரம் கொடுத்தான்...'

பாரியின் நடுமுதுகில் பனிக்கட்டி சரிந்தது.

'என்ன சொன்னான்?'

'இங்க ஒரு வேலை இருக்கு. செஞ்சு முடிச்சா, கையில பத்து லட்சம். சென்னைக்குப் பழக்கம் இல்லாத புதுமுகம் வேணும்னு கேட்டு இருந்தோம். மலையப்பன் இந்த போட்டோவ அனுப்பினான்.'

அவன் தன் செல்போனை எடுத்துக் காட்டினான். மலையப்பனுடன் பாரி சரக்கு அடித்த வேறொரு தருணத்து செல்போன் புகைப்படம்.

எந்த மலையப்பன் தன் பெயரைச் சிபாரிசு செய்தானோ, அந்த மலையப்பனே இப்போது இல்லை என்பது இவனுக்குத் தெரியுமா?

'வா, டீ சாப்பிட்டுக்கிட்டே பேசுவோம்.'

சேம்சன் பேக்கரி வாசலில் மலாய் டீயைச் சுவைத்தபடி, 'என்ன வேலை?' என்று கேட்டான் பாரி.

'மேஸ்திரி ஆதிமூலத்தைப் போட்டுத் தள்ளணும்' என்றான் பூமணி.

- தடதடக்கும்...




பாரி டீ டம்ளரை பிஸ்கட் பாட்டிலின் மூடி மீது வைத்தான். பூமணியை ஆழமாகப் பார்த்தான்.

'உனக்கும் அந்த ஆதிமூலத்துக்கும் என்ன பகை?'

'அந்த ஆளை நான் பார்த்ததுகூட இல்ல... நான் ஒரு புரோக்கர்... அவ்வளவுதான்.'

'நான் இந்த மேன்ஷன்ல இருக்கேன்னு உனக்கு யார் சொன்னாங்க?'

'உன்கிட்ட வேலையைக் குடுக்கலாம்னு பார்ட்டி முடிவு செஞ்ச நேரம், மலையப்பன் மாடிலேர்ந்து விழுந்து செத்துட்டான்னு தகவல் கிடைச்சது. உன் போட்டோவை அனுப்பினானே தவிர, உன் போன் நம்பரைக்கூட மலையப்பன் குடுக்கல. மதுரைக்குப் போய் விசாரிச்சேன். நீ எங்க இருக்கேனு யாருக்கும் தெரியல. வேற ஆளைத்தான் தேடணும்னு நெனைச்ச நேரம், சென்னை பீச்ல திடீர்னு உன்னைப் பார்த்தேன். விதிதான் விளையாடுதுனு உன் பின்னாலயே வந்தேன்.'

யாரும் கண்டுபிடிக்கப்போவது இல்லை என்று இறுமாந்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். உலகம் இவ்வளவு சின்னதா?

'வேலையைக் கொடுக்கறவங்க யாரு?'

'கைலாசம் க்ரூப். அவங்களுக்கும் ஆதிமூலம் க்ரூப்புக்கும் தீராப் பகை.'

'ஆதிமூலத்தோட போட்டோ, மத்த விவரம்லாம் குடு. ஒரு வாரம் கழிச்சு முடிவு சொல்றேன்.'

'போன் நம்பரைச் சொல்லு?' என்று பூமணி தன் செல்போனை எடுத்தான்.

'யாருக்கும் தெரியாத முகமாவே இங்க இருந்துட்டுப் போறேன். என்னைப் பத்தின விவரம்லாம் வேணாம். உன் நம்பரை எழுதிக் கொடுத்துட்டுப் போ...' என்று பாரி பக்கத்தில் இருந்த தினத்தந்தியை எடுத்து நீட்டினான்.

பூமணி அவனை ஏற இறங்கப் பார்த் தான். செய்தித்தாளின் ஓரத்தில் போன் நம்பரை எழுதி நீட்டினான்.

'ஆதிமூலம் மூஞ்சியப் பாத்துக்க' என்று போனில் புகைப்படம் காட்டினான். விரல் நுனியால் நகர்த்தி அடுத்த புகைப்படத்தைக் காட்டி, 'இது கைலாசம்'' என்றான்.

பாரி உன்னிப்பாகப் பார்த்தான்.

'தேதி, பொருளு எல்லாம் நான்தான் முடிவு பண்ணுவேன். ரெடின்னு சொன்ன தும், பாதிப் பணம் அட்வான்ஸா வந்துரணும். வேலை முடிஞ்சதும் மீதி வந்துரணும். கள்ள நோட்டைக் கலந்து கொடுத்தா, கொடுத்தவன் தலை தப்பாது.'

'ஏம்ப்பா... எடக்குமடக்காப் பேசற?'

'வெண்ண தடவிப் பேசறதுலாம் எனக்குப் பிடிக்காது. நானே கூப்புடற வரைக்கும், இந்த ஏரியாலயே உன் நிழல்கூட விழக் கூடாது. விழுந்தா, கூடவே உன் பொணம் விழும்' என்று சொல்லிவிட்டு, பாரி விருட் டென்று திரும்பி நடந்தான்.



கோபிசந்த் மேன்ஷன் வாசலில் பைக்கை நிறுத்தியதும், செந்தில் இறங்கிக்கொண்டான்.
'ஸாரி கோபி... வேற எங்கியோ பேச்சு திரும்பிடுச்சு. மேன்ஷனுக்கு வாடகை, சாப்பாட்டுச் செலவுக்கு எல்லாம் என்ன பண்றேன்னு கேட்டீங்க... கடவுள் அதுக்காகவே ஒரு தேவதையை அனுப்பியிருக்காரு.'
'ஓ..! லவ் ஸ்டோரி?'
'ஆம்...' என்பதுபோல் செந்தில் தலையை அசைத்தான்.

'எங்க அப்பா வற்புறுத்தினதால இஷ்டம் இல்லாம டிகிரி படிக்கப் போனேன். காலேஜ்லதான் தீபாவைச் சந்திச்சேன். ஆறு மாசத்துக்குள்ள உயிராயிட்டோம். மேட்டர் வீட்டுக்குத் தெரிஞ்சு, கொஞ்சம் சூடாச்சு. வீட்டுக்குக் கூட்டிப்போனேன். எங்க அம்மாவுக்கு மொத பார்வைலயே பிடிச் சுப்போச்சு. அப்பாகிட்ட அவங்களே பேசறதா சொல்லியிருந்தாங்க. ஆனா, அதுல என்னால மண் விழுந்தது. என் கனவைத் தன் கனவா தீபா நெனைச்சா. சென்னைக்குப் போடா, ஜெயிப்பேனு வளையலைக் கழட்டிக்கொடுத்தா. தெரிஞ்சதும், எங்க அம்மாவுக்கு எனிமி ஆயிட்டா. இப்பவும் மொதத் தேதி பணம் அனுப்பறது அவதான்.'

'வேலைல இருக்காங்களா?'

'தனியார் கம்பெனில ரிசப்ஷனிஸ்ட்.'

கோபிசந்த் கேமராவில் இருந்து மெமரி கார்டை உருவி நீட்டினான்.

'நல்லதா செலெக்ட் பண்ணி பிரின்ட் போட்டுக்குங்க... ஆல் தி பெஸ்ட்.'

கைகுலுக்கிவிட்டு, கோபி பைக்கை உதைத்தான். புறப்பட்டான்.

மேன்ஷனை ஒட்டியிருந்த சந்துப் பகுதியில், சுவரைப் பார்த்து நின்று, லுங்கியைத் தூக்கிப் பிடித்திருந்தவனை செந்தில் இங்கிருந்தே அதட்டி னான்.

'ஹலோ... இங்கெல்லாம் அசிங்கம் பண்ணாதீங்க!'

அந்த ஆள் திரும்பிப் பார்த்தான்.

'த்தா... ஒங்கப்பன் வூட்டுச் செவுரா?' என்று பக்கத்தில் துப்பிவிட்டு, துவங்கிய வேலையைத் தொடர்ந்தான்.

அடுத்த கணம் அவன் பின் மண்டையில் ஓர் உள்ளங்கை பதிந்தது. அது தள்ளிய வேகத்தில் அவன் முகம் சுவரில் போய் மோதியது.

'இன்னொரு வாட்டி இங்க பார்த்தேன், ரோட்டையே கழுவவெச்சிருவேன்... ஓட்றா' என்று உறுமும் குரல் கேட்டு, செந்தில் திரும்பினான்.

பாரி..!

அந்த ஆள் குருதி வழியும் மூக்கைப் பொத்தியபடி அங்கிருந்து ஓட்டம் எடுக்க, செந்தில் தன்னிச்சையாக இரண்டடி பின்வாங்கி, பாரியைப் பார்க்காமல் மேன்ஷன் படிகளில் வேகமாக ஏறினான்.

- தடதடக்கும்...

சுபா

ஓவியம்: ஸ்யாம்

யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர்

6

எதிரே உட்கார்ந்திருந்த வழுக்கை மனிதரின் பார்வை போகும் திசையைக் கவனித்து, ஏற்கெனவே ஒழுங்காகப் போர்த்தி இருந்த துப்பட்டாவைத் தேவையின்றி சரிசெய்து கொண்டாள் தீபா.

இன்டர்காம் ஒலித்தது. "சார், நீங்க போலாம்..."


அவ்வளவு அவசரமாக அழைக்கப்பட்டுவிட்ட வருத்தத்தைக் கண்களில் தேக்கி, அநாவசியமாக ஒரு புன்னகையைச் சிந்திவிட்டு அவர் நகர்ந்துபோனார். தீபாவின் அன்றாடத்தில் இது போன்ற ஓரிருவர் தட்டுப்படுவது வாடிக்கை. பார்வையை உயர்த்தி சுவர் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி 3.30. ஏன் இன்னும் செந்திலிடம் இருந்து போன் வரவில்லை..? நிமிடத்துக்குப் 10 தடவை மேஜை இழுப்பறையைத் திறந்து, செல்போனில் மிஸ்டு கால் வந்திருக்கிறதா என்று சரிபார்த்தாள்.

இன்டர்காம் ஒலித்தது. எடுத்தாள். அவளுடைய பாஸ்.

"தீபா, 28-ம் தேதி எவ்ளோ ரூம்ஸ் புக் ஆகியிருக்கு?"

கம்ப்யூட்டரைத் தட்டினாள்... "42 சார். 12 ரூம்தான் வேகன்ட்" என்றாள்.

"அதை பிளாக் பண்ணிரு."



ஒரு கல்யாண மண்டபம், ஒரு லாட்ஜ், இரண்டு ஹோட்டல்கள், ஒரு சினிமா தியேட்டர் எல்லாவற்றுக்கும் ஒரே முதலாளி. அவருக்கு அவள் ஒரே உதவியாளர். எதுவாக இருந்தாலும் 'தீபா... தீபா... தீபா...'

திடீரென்று மேஜையில் மின் அதிர்வு. சைலன்ட் மோடில் செல்போன் சிணுங்கி அடங்கியது. செந்தில்தான். அவளே அழைத்தாள்.

"என்ன ஆச்சு செந்தில்?"

"காலைல 9 மணிக்கு போட்டோவும் பேரும் குடுத்தேன்... இப்பதான் முடிச்சிட்டு வெளில வரேன். பயமா இருக்கு தீபா. ஆடிஷனுக்கு வந்தது 316 பேர்."

"3,000 பேர் வந்தாலும் நீ ஜெயிப்ப செந்தில்."

"ஆறு மாசம்னு சொல்லிட்டு சென்னைக்கு வந்தேன். இது எட்டாவது மாசம்."

"வாய்ப்பு அப்படிலாம் காலண்டர் பார்த்து வராது... டைரக்டர் யாரு?"

"ஷங்கர்கிட்ட அசிஸ்டென்ட்டா இருந்தவராம்."

"அடி சக்கை!"

"எப்படி தீபா உன்னால ஜெயிச்சுட்ட மாதிரியே பேச முடியுது?"

"ஜெயிப்படா! என்ன சொன்னாங்க?"

"என்னைவிட ஆறு அங்குலம் உசரமா, வெள்ளையா, ஹேண்ட்ஸமா குறைஞ்சது 20 பேரைப் பார்த்தேன் தீபா."

"சினிமால ஜெயிச்ச அத்தனை பேரும் ஆணழகனுங்களா செந்தில்? உன் திறமை மேல நம்பிக்கை இருக்குடா. ரிசல்ட் எப்ப தெரியும்?"

"12 பேரைத்தான் மொத ரவுண்டுல செலெக்ட் பண்றாங்க. சாயந்திரம் 6 மணிக்கு யார் யாருன்னு சொல்வாங்க. அதுல நான் இல்லேன்னா ஊருக் குத் திரும்பிடுவேன். எங்கப்பா சொல்ற சைக்கிள் கடைல கணக்கு எழுதிட்டு உட்கார்ந்துடுவேன்."

"நீ போக மாட்டேடா... சென்னைதான் உன் ஊரு."

எதிரில் ஒரு கதர் சட்டையின் நிழலாடியது.

"செந்தில் வேலை வந்துருச்சு... ஈவ்னிங் லிஸ்ட்ல உன் பேரு இருக்கும்... பார்த்துட்டு போன் பண்ணு" என்று தொடர்பைத்துண்டித்தாள்.

"உக்காருங்க ப்ளீஸ்... சார் மீட்டிங்ல இருக் காரு. உங்க பேரு?" என்று புன்னகையைப் பரிமாறினாள்.



செந்திலுக்குச் சாப்பாடு இறங்கவில்லை. தி.நகரில் மாலை வரை அலைந்தான். புடைவை அங்காடி, நகைக் கடை, நடைபாதை உணவு விடுதி என்று எங்கு திரும்பினும் தலைகள். எத்தனை பேர் பரபரப்பாக எதையோசாதித்து விட எங்கேயோ ஓடிக்கொண்டு இருக்கிறார் கள். அவனுக்கு மட்டும் ஏன் நாட்கள் இப்படி வீணாகவே கழிகின்றன? ஆடியோ ரிலீஸ் என்று தெரு நீளத்துக்கு ஒட்டப்பட்டு இருந்த சுவரொட்டி அருகில் சற்று நேரம் ஏக்கத்துடன் நின்றிருந்தான். கல்லூரி விழா வில் அவனுக்குப் பரிசளித்த தரணி, அவன் ஊரில் படப்பிடிப்பு நடத்தியபோது நம்பிக்கை அளித்த ஹரி, தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் அழைப்பு விடுத்த வெங்கட்பிரபு என்று எத்தனை இயக்குநர்களை அவன் விடாமல் துரத்தினான்?

"தட்டிக்கழிக்கறாங்கன்னு சொல்லாதீங்க செந்தில்... ஊக்கம் கொடுக்கறதுக்காகப் பேசினதை நம்பி தினம் 100 பேரு வந்து நின்னா, அவங்க என்னதான் செய்வாங்க?" என்று கோபிசந்த் சொன்னதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனாலும், செந்தில்வெட்டி எடுக்கப்பட்ட அந்த செய்தித்தாள் சதுரத்தை மறுபடி எடுத்துப் பார்த்தான்.

'திறமை உள்ள புதுமுகங்கள் தேவை.'

அவன் திறமை உள்ளவன்தானா என்று மாலையில் தெரிந்துவிடும். பகல் தேய்ந்ததும் பின்னும் கால்களை எடுத்துவைத்து, உஸ்மான் ரோட்டின் விலா எலும்பில் இருந்த அந்தக் கல்யாண மண்டபம் நோக்கி நடந் தான். தெருவை அடைத்துக்கொண்டு இளைஞர்கள். தேர்வு நடந்த அந்த மண்டபத்தின் உள்ளிருந்து உருண்டு திரண்ட ஓர் ஆள் வெளியே வந்தார். அச்ச டித்த காகிதத்தை உயர்த்திக் காட்டினார். சன்னமான குரலில், "கசகசன்னு சத்தம் போடாதீங்க. பேரு படிக்கறவங்க மட்டும் இருங்க. மத்தவங்க போலாம்" என்றார்.

அடுத்த நொடி அங்கே மரண அமைதி.

ஏக்க முகங்களும் நின்றுபோன மூச்சுகளுமாக நிறைந்திருந்தவர்கள் மத்தியில் தேர்வான 12 பெயர்களை அவர் படிக்க ஆரம்பித்தார்....

- தடதடக்கும்...

## சுபா

ஓவியம்; ஸ்யாம்



ஒவ்வொரு பெயராகப் படிக்கப்பட, செந்தில் நம்பிக்கை இழந்துகொண்டே வந்தான். ஏழு பெயர்கள் கடந்ததும், தனக்கு வாய்ப்பு இருக்காது என்று முடிவுசெய்து, தொண்டை அடைத்து நின்றான். எட்டாவது பெயராக கே.செந்தில் என்றுஅழைக்கப்பட்டதும், சாட்டையால் தாக்கப்பட்டதுபோல் நிமிர்ந்தான்.

ஒருவேளை வேறு ஒரு கே.செந்தில் இருந்தால்? பார்வையைச் சுழலவிட்டான். இல்லை. யாரும் போட்டியாகக் கையை உயர்த்தவில்லை.

நானா..? தேர்வாகிவிட்டேனா? அவன் நின்றி ருந்த இடத்தில் மட்டும் திடீரென்று பூ மழை பொழிவதுபோல் ஒரு குளிர்ச்சி. தாங்க முடியாத குதூகலத்தில் இதயம் விம்மியது. பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டவன்போல நெஞ்சை நிமிர்த்தி உள்ளே நடந்தான். உடனே தீபாவிடம் தெரிவிக்க வேண்டும் என்று தவிப்பாக இருந்தது. கட்டுப்படுத்திக்கொண்டான்.

"மத்தவங்கள்லாம் தயவுசெஞ்சு கலைஞ்சு போயிரலாம்..." என்று அறிவிக்கப்பட, ஏமாற்ற மும் தோல்வியும் சுமந்த பல குரல்கள் "சார், ஒரே ஒரு சான்ஸ் கொடுத்தீங்கன்னா..." என்று கெஞ்சின.

கதவைச் சாத்தி உதவியாளர் உள்ளே வந்தார்.

'இன்னொரு ஆடிஷன் இருக்கு... அதுல அடுத்த ரவுண்டுக்கு மூணு பேர் செலெக்ட் ஆவீங்க... காலைல ஆபீஸுக்கு வந்துருங்க.'

பொங்கிய அலை சட்டென்று பூமியில் விழுந்ததுபோல் செந்திலின் கர்வம் மீண்டும் தலையைப் புதைத்துக்கொண்டது. காதுக்குள் 'நீ ஜெயிப்படா!' என்று தீபா மட்டும் கத்திக்கொண்டே இருந்தாள்.

பாரி, ஈரத் தலையைத் துவட்டிக்கொண்டே கட்டிலில் இறைத்திருந்த பணத்தை எண்ணினான். 8,033. கையிருப்பு ஒருபோதும் இவ்வளவு குறைந்தது இல்லை. கவலை எதற்கு? 10 லட்சத்துக்கான வேலை தருவதாக பூமணி சொல்லிஇருக்கிறானே! மதுரையில் அவனுக்குக் கிடைத்த அதிகபட்சக் கூலியே இரண்டு லட்சம்தான். ஒருவேளை இந்த வேலை மிகக் கடினமானதாக இருக்குமோ? இருக்கட்டுமே... சவால்கள் இல்லாத வாழ்க்கையில் என்ன சுவாரஸ்யம்?

சுற்றிலும் இருந்த சூப்பர் ஸ்டாரின் படங்களைப் பார்த்தான். 'தலைவா, நீ கூட இருக்கும்போது நான் தோத்ததேயில்ல...' என்று புன்னகைத்தான். தினத்தந்தியில் ஓரமாக எழுதப்பட்ட எண்ணை மட்டும் கிழித்துக்கொண்டு, மேன்ஷ னுக்கு வெளியே வந்தான். எதிர் வரிசையில் இருந்த பொதுத் தொலைபேசியில் பூமணியின் எண்ணுக்கு டயல் செய்தான்.



மறுநாள்...

பட்டினப்பாக்கம். அரசாங்கம் கட்டிக்கொடுத்த வீடுகள் கடற்காற்றினாலோ, மாறி மாறித் தாக்கிய பருவங்களாலோ களையிழந்து, சோகையாகக் காட்சியளித்தன. சிறு கற்களும் குப்பைகளும் சேர்ந்துவிட்ட மணல் பகுதியில் பூமணியுடன் அமர்ந்திருந்தான் பாரி. மூன்று நாய்கள் குப்பைகளைக் கிளறிக்கொண்டு இருந்தன.

'கைலாசம் குரூப்ல பொறுப்பா இருக்கறவங் களைப் பாக்கப்போறோம்னு சொல்லிட்டு இங்க உக்காரவெச்சிருக்க?' என்று பொறுமை இழந்து கேட்டான் பாரி.

''கிருபாவப் பாக்கறது அவ்வளவு சுலபம் இல்ல... சிக்னல் வரும். அது வரைக்கும் வெயிட் பண்ணணும்.'

'யார் அந்த கிருபா?'

'கைலாசத்தோட முதுகெலும்பு. ஆதிமூலம் பத்தின அத்தனை விவரமும் அவன் குடுப்பான்.'

20 நிமிடங்கள் கழித்து, பூமணியின் போனில் அழைப்பு வந்தது. 'வா...'

தெருவைக் கடந்து, பழமையான ஒரு ஹோட்டலுக்குள் அழைத்துப்போனான் பூமணி. அரைக்கதவு வைத்த வரிசையான அறைகளில் ஒன்றைத் திறந்து பாரியை உள்ளே அனுப்பிவிட்டு, பூமணி வெளியிலேயே நின்றுவிட்டான்.

பாலீஷ் தேய்ந்துபோன மர மேஜையில் கை ஊன்றி உட்கார்ந்து இருந்தான் கிருபா. ஒல்லி. உயரம். வெள்ளை பேன்ட். முழங்கை வரை மடித்துவிட்ட கறுப்பு முழுக்கைச் சட்டை. வலது கையில் இரண்டு மோதிரங்கள். பேப்பர் வெயிட்போல வாட்ச். பார்த்தவுடன் அச்சம் ஏற்படுத்தும்படியான தோற்றம் இல்லை. ஆனால், குத்திக்கிழிக்கும் பார்வை. ஏராள இரைச்சலோடு மின்விசிறி காற்றை வீசியடித்தது.

'பூமணி சொன்னான். வேலை கச்சிதமா இருக்கணும். நாம தாக்கி, அவங்க தப்பிச்சா, நம்ம அத்தனை பேரையும் கொத்துப் பரோட்டா போட்ருவாங்க...' என்று பேசியபோது குரல் சற்றே பெண்மை கலந்து இருந்தது.

'ஆதிமூலத்தைப் பத்தி முழு விவரம் வேணும்.'

'ஒருகாலத்துல ஒண்ணா இருந்தவங்கதான் நாங்க. அவன் அரசியலுக்குப் போனதும், கட்சிக்காரனுக்காக, கைலாசத்தோட தம்பிய நண்பன்னுகூடப் பாக்காமப் போட்டுட்டான். அதுலேர்ந்து மொத எதிரி ஆயிட்டான்' என்று தொடங்கி, பாரியின் கேள்விகளுக்கு கிருபா பதில் சொல்லச் சொல்ல... மனதில் குறித்துக்கொண்டான். கடைசியில் கிருபா ஒரு கவரை பாரியிடம் நீட்டினான். 'இதுல அவங்க அத்தனை பேர் போட்டோவும் இருக்கு. 10 நாள்ல, ஆதிமூலத்தோட குலதெய்வம் அங்கயற்கண்ணி கோயில்ல திருவிழா. அப்ப வேற மூடுல இருப்பான். அட்டாக் பண்ண சரியான நேரம்.'

காரணம் புரியாமல், திடீரென்று பாரி மனதில் ஓர் எச்சரிக்கைக் கூச்சல் கேட்டது... 'வேண்டாம், இந்த வேலையை எடுத்துக்கொள்ளாதே!'

- தடதடக்கும்...




கவரைத் திறந்து கிருபா கொடுத்த புகைப்படங்களை ஒவ்வொன்றாகப் புரட்டினான் பாரி. மூன்றாவது புகைப்படத்தை எடுத்ததும் அவன் கண்களில் திடீர் வெறி.

'இது... இது யாரு?' என்று கேட்டான்.

'இவன் ஆதிமூலத்தோட வலது கை. பேரு நாகு. ஏன் கேக்கற?'

'பாண்டிச்சேரில ரூம் பாயாக் கிடந்த என்னை மதுரைக்கு அழைச்சிட்டுப் போய் உருவாக்கினவரு தனபாலு. அவரை சுட்டுக் கொன்னவன் இவன். வெளியூர்ல இருந்து வந்து போட்டுட்டுப் போயிட்டான்னு சொன்னாங்க. ரொம்ப நாள் கழிச்சு, இவன் மூஞ்சியை மலையப்பன் காட்டினான்.'

'நாகு, லோகுனு அண்ணன் தம்பியாச் சேர்ந்துதான் தொழில்ல இறங்குவாங்க. இவங்க ரெண்டு பேரைத் தாண்டி ஆதிமூலத்தை நெருங்கறது அத்தனை சுலபமில்ல' என்றான் கிருபா.

'தேதி முடிவானதும், எனக்கு ஒரு கார் வேணும். சென்னைய முழுசாத் தெரிஞ்ச ஒரு டிரைவர் வேணும்.'


'அனுப்பறேன்...'

'பேசுன பணம் ஆதிமூலத்துக்கு... நாகுவும் லோகுவும் இலவசம்!' என்று கழுத்தைச் சீவுவதுபோல் காட்டிவிட்டு, பாரி எழுந்தான்.

திருமலைப் பிள்ளை சாலையிலிருந்து வெட்டிப் பிரிந்தது, அந்தக் குறுகிய தெரு. 17 கார்கள் நிறுத்தப்பட்டிருந்த ஒரு பங்களாவின் பின்புற அவுட் ஹவுஸில் ஆடிஷன். பக்கத்து காம்பவுண்டின் தென்னை மரங்கள் இங்கே நடப்பதை எட்டிப்பார்த்தன. பின்னணியில் சிறு இரைச்சலுடன் இடுப்பு உயர டிபன் கேரியர்கள் கழுவப்பட்டுக்கொண்டு இருக்க.. செந்தில் வியர்த்த முகத்தைத் துடைத்துக்கொண்டு, தயாரானான்.

'என் பேரு குணா. அசோஸியேட் டைரக்டர்...' என்று அறிமுகம் செய்துகொண்டவன் கல்லூரி மாணவன்போல் இருந்தான். காட்சியை விளக்கினான்.

'உங்க பல வருஷக் கனவு நிறைவேறிடுச்சு... அந்த சந்தோஷமான சேதியை அம்மாகிட்ட சொல்றதுக்காக வீட்டுக்கு ஓடறீங்க... கதவைத் திறந்தா, கூடத்துல அம்மா பொணமாப் படுத்திருக்காங்க. சுத்தி உறவுக்காரங்க... அக்கம்பக்கத்து ஜனங்க... திகைச்சுப் போய்ப் பார்க்கறீங்க... சந்தோஷம் கரைஞ்சு, துக்கம் அழுத்துது... அப்படியே உடைஞ்சு அழறீங்க... இதான் சீன். ரெண்டு நிமிஷம் மனசுக்குள்ள ஒத்திகை பார்த்துக்குங்க.. டயலாக் கிடையாது. உணர்ச்சியை மட்டும் ஒழுங்காக் காட்டினாப் போதும்.'



செந்தில் கண்களை மூடி, தனக்குள் காட்சியை ஓடவிட்டான். முதல் படத்துக்கு ஒப்பந்தமாகி, அந்த மகிழ்ச்சியைச் சுமந்துகொண்டு தன் வீட்டுக்குள் ஓடுவதாகவும், அங்கே பாய் விரித்து அம்மாவைக் கிடத்தியிருப்பதாகவும் கற்பனை செய்ததும், உணர்ச்சி கொந்தளித்து வெளியில் பாய்ந்தது.

'கட்..!' என்று சொல்லப்பட்டபோது,ஹேண்டி கேமில் பதிவுசெய்த இளைஞன், பிரமிப்பில் இருந்து விடுபட்டு, 'சூப்பராப் பண்ணீங்க!' என்றான். செந்திலின் கன்னங்களை நனைத்து நிஜக் கண்ணீர் வழிந்துகொண்டு இருந்தது.

'தேங்க்ஸ்!'

'தமிழ் சினிமாவுல ஏற்கெனவே ஒரு செந்தில் இருக்காரு. செலெக்ட் ஆனா பேரை மாத்திப்பீங்களா..?'

'நிச்சயமா...' என்று செந்தில் அவசரமாகத் தலையசைத்தான். 'செலெக்ட் ஆயிட்டேனா?'

'மூணு பேர்ல நீங்க இருக்கீங்க... புக் ஆயிட்டா, தொடர்ந்து முப்பது நாள் அவுட்டோர்ல தங்க வேண்டியிருக்கும்.'

குணா பேசப் பேச... வெற்றி பெற்றுவிட்ட சந்தோஷம் செந்திலைத் தொற்றிக்கொண்டது.

'போனை எப்பவும் சார்ஜ் போட்டு, ஆன்லயே வெச்சிருங்க.. ஃபுட்டேஜை டைரக்டர் பார்த்துட்டு முடிவு சொல்வாரு. கால் வரும்... சென்னைலதான இருப்பீங்க?'

'ஆமா, மிட்நைட் போன் பண்ணாக்கூட, ஓடி வந்துருவேன்.'

செந்தில் வெளியே வந்தான். உடனே தீபாவுக்கு போன் செய்தான்.

'தீபா... கனவு நிறைவேறப்போவுது!'

'சொன்னேன்ல?'

'இரு, அதுக்குள்ள வாழ்த்து சொல்லாத. இன்னும் ஒரு கட்டம் தாண்டணும்.'

'தாண்டிடுவடா!' என்று தீபா ரிசீவர் வழியே அழுத்தமாக முத்தமிட்டாள்.

மேற்கு மாம்பலத்தில், ரயில்வே பாலத்தை ஒட்டியிருந்த ஒரு குறுக்குத் தெரு. அரைகுறையாக நின்ற ஒரு சுவர் மீது பாரி அமர்ந்திருந்தான். எதிரில் பெரிய மைதானம். ஒரு பக்கம் கட்டுப் பாடு இன்றி வளர்ந்திருந்த காட்டுச் செடிகள். இன்னொரு பக்கம் சமப்படுத்தப்பட்டு புழுதி பறக்கும் கிரிக்கெட் பிட்ச். அதில் ஆறு இளைஞர் கள். மைதானத்தின் இன்னொரு மூலையில் சுண்ணாம்பு அடித்த ஒற்றைப் பெரிய அறை.

'மாநகராட்சி இளைஞர் உடற்பயிற்சி மையம்' என்று தகர போர்டு. திடகாத்திரமான சிலர், இன்னும் அதிரடி பலம் பெற, தண்டால் எடுத்தார்கள். புல்அப்ஸ் செய்தார்கள். பளு தூக்கினார்கள்.  பாரியின் தேர்ந்த கண்கள், அவர்களில் நாகுவைச் சுலபமாக அடையாளம் கண்டுகொண்டன. மார்பை விரித்து விரித்து அவன் உடற்பயிற்சி செய்து முடித்ததும், டவலை நீட்டினான் அவனுடைய தம்பி லோகு.
பாரி தன் பாக்கெட்டில் கைவிட்டு, சுருள்கத்தியைத் தொட்டுப் பார்த்தான்.
- தடதடக்கும்...




நாகு பற்றி கிருபா சொன்னது நினைவில் புரண்டது. கத்தி வீசுவதிலும் வெடிகுண்டு வைப்பதிலும் ஒலிம்பிக் தேர்ச்சி. 27 கொலைகள் பண்ணியதாக வரலாறு. எனவே, 'நாக் அவுட் நாகு' என்ற பட்டப் பெயர். எந்தக் காவல் நிலையத்திலும் அவன் மீது எந்தக் குற்றப்பத்திரிகையும் இல்லை. அவ்வளவு அரசியல் செல்வாக்கு.
 ஆதிமூலத்துக்கு நாகு செக்யூரிட்டி என்றால், நாகுவின் தம்பி அவனுக்கு ஒரு பாதுகாப்பு. அவனும் ஒரு டஜன் தலைகள் வாங்கியவன். நாகுவை இன்னும் நெருக்கமாகப் பார்க்க விரும்பி, பாரி தெருவைக் கடக்க முதல் அடி எடுத்துவைத்ததும், அந்தப் பேரொலி கேட்டது. இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய தொமேல் ஓசை!
திரும்பிப் பார்த்தான். தெருத் திருப்பத்தில், ஒரு ஸ்கூட்டி சரிந்திருந்தது. அதன் அடியில் இருந்து சுரிதார் போட்ட கால் நீண்டிருந்தது. கீழே கிடந்த இளம்பெண் கைகளை ஊன்றி எழுந்திருக்க முயல, அவள் மீது விழுந்திருந்த ஸ்கூட்டியின் பாரம் அவளைத் தடுத்தது. பக்கத்தில் மோதிய ஆட்டோ. அவளிடம் ஓட்டுனர் இளைஞன் கத்திக்கொண்டு இருந்தான்.
'கண்ணு தெரியல..? டர்னிங்ல இவ்ளோ வேகமா வர்ற? பாரு, பாடி எப்படி நசுங்கிப்போச்சுனு. சேட்டு என்னை இல்ல தாளிப்பான்! உங்கப்பனா குடுப்பான் துட்டு..?'
பாரி ஒரே எட்டில் அந்த இடத்தை அடைந்தான். ஆட்டோ டிரைவரின் சட்டையைப் பிடித்து உலுக்கினான்.
'அறிவிருக்காய்யா உனக்கு..? விழுந்துகிடக்கறவங்களைத் தூக்காம வெசவு பாடிட்டு இருக்க?'
குனிந்து ஸ்கூட்டியை நிமிர்த்தினான். முகத்தில் வலிச் சுழிப்புடன் அவள் கையூன்றி எழுந்தாள். தார் ரோட்டில் உராய்ந்து, ஆடை அங்கங்கே கிழிந்திருந்தது. சிராய்ப்பும் ரத்தக் கோடுகளும் தென்பட்டன.



'த பார்றா... வன்ட்டாரு ஹீரோ! அப்ப நீ குடு துட்டு...' என்று ஆட்டோ இளைஞன் நெஞ்சை நிமிர்த்த, பாரி பொளேரென்று அவன் கன்னத்தில் அடித்தான்.

'தாறுமாறா ஓட்டிட்டு வந்தவன் நீ. ஸ்கூட்டியை ரிப்பேர் பண்ண நீ கொடுக்கணும் காசு. மவனே, நிக்காம ஓடிப்போ.'

உடற்பயிற்சி மையத்தில் இருந்த இளைஞர்கள் ஒன்றிரண்டு பேர், வாக்குவாதத்தைக் கவனித்து, 'என்னா பிராப்ளம்..?' என்று அங்கிருந்தே குரல் கொடுக்க...

'கூட்டமா வந்துருவானுங்க, நாயம் பேசினு...' என்று முணுமுணுத்துக்கொண்டே, ஆட்டோ சரக் என்று கிளம்பிப்போனது.

இப்போதுதான் பாரி அந்தப் பெண்ணை முழுமையாகப் பார்த் தான். அவனுடைய தோளுயரம் இருந்தாள். அழகான, திருத்தமான முகம். புருவங்களைச் செதுக்கி, வடிவமைத்து இருந்தாள். நேரான நாசி. ஆரஞ்சுச் சுளை உதடுகள். கட்டான உடலமைப்பு. கழுத்து நீளம் மட்டும் சற்றுக் குறைவாக இருந்திருக்கலாம். நிமிர்த்திய ஸ்கூட்டியை அவனிடம் இருந்து வாங்கிக்கொண்டாள்.

'தேங்க்ஸ்...' என்றாள். 'பக்கத்துலதான் மெக்கானிக் ஷாப். விட்டுட்டு வீட்டுக்குப் போயிருவேன்...' என்று வண்டியைத் தள்ளப்பார்த்தாள். அது நகரவில்லை.

'ஹேண்டில்பார் பெண்டு ஆயிருச்சு... நான் தள்ளிட்டு வரேன்' என்று பாரி பொறுப்பெடுத்துக்கொண்டான். ஸ்கூட்டியைச் சற்று சாய்த்தவாறு தள்ளியபடி அவளுடன் நடந்தான். அவள் சற்றே விந்தினாள்.

'ரொம்ப அடிபட்டுருச்சா..? ஒரு ஆட்டோ பிடிக்கவா..?'

'வேணாம்... சின்ன சிராய்ப்புதான்... பக்கத்துல தான் வீடு... போய்டலாம்.'

ஒலிபரப்புகளிலும் தானியங்கித் தொலைபேசி அறிவிப்புகளிலும் கேட்டால் சுகமாக இருக்கக்கூடிய குரலாக, அவளுடைய குரல் வசீகரமாக இருந்தது. 'நீங்க இந்த ஏரியாவா..?'

'இல்ல... ஒரு ஃப்ரெண்டைப் பார்க்க வந்தேன்' என்ற பாரி, 'உங்களை எங்கியோ பார்த்த மாதிரி இருக்கு?' என்றான்.

'பார்த்திருப்பீங்க... நிறைய சினிமால பார்த் திருப்பீங்க.'

'ஓ... நடிக்கறவங்களா?'

'நடிகையா இருந்தா பேரோட ஞாபகம் வெச்சிருப்பீங்களே? கதாநாயகிக்குக் கனவு வந்தா, எங்களைப் பாக்கலாம்... க்ரூப் டான்ஸர்.'

'சூப்பர் ஸ்டார் கூட ஆடி இருக்கீங்களா?'

' 'சந்திரமுகி', 'சிவாஜி', 'எந்திரன்'...'


'ரொம்ப லக்கி நீங்க...'

போக்குவரத்து இரைச்சலாக அவர்களைக் கடந்துசென்றது.
'என் பேரு தேவி.'
அந்தக் கணத்தில் பாரியின் இதயத்தில் ஒரு தேனூற்று பீறிட்டது.
'என் பேரு பாரி...' என்று முணுமுணுத்தான்.
சட்டென்று அவளை விட்டுப் பிரிந்துபோக மனம் வரவில்லை. எத்தனையோ வலிமையான ஆண்களைத் தைரியமாக எதிர்கொண்ட அவன் கண்கள் தழைந்தே இருந்தன.
'உங்களுக்குக் கால்ல அடிபட்டு இருக்கு... வீட்ல விட்டுட்டுப் போறேன்.'
'நீங்க ஐ.டி. கம்பெனி... கரெக்ட்?'
பாரி திடுக்கிட்டான். 'எதைவெச்சு சொல்றீங்க..?'
'உங்க லுக். முகத்துக் களை. நீங்க போட்டிருக்கற டிரெஸ். பெரிய படிப்பு முடிச்சிட்டு...'
பாரி புன்னகைத்தான். 'தப்பு... நான் காலேஜ்லாம் படிக்கல.'
'பின்ன..?'
'தொழில் செய்றேன்.'
'தொழில்னா..?'
என்ன பதில் சொல்வது என்று பாரி திகைத்தான்.

- தடதடக்கும்...




சற்றுத் தடுமாறிவிட்டு, பாரி சுதாரித்தான். 'இந்தக் கைலேர்ந்து அந்தக் கைக்கு மாத்தற தொழில்... கமிஷன் பிசினஸ்' என்றான்.
தேவி அடுத்த கேள்வி கேட்பதற்குள், மெக்கானிக் கடை வந்துவிட்டது.
'மணீ...' என்று அழைத்தாள்.
பெட்ரோலில் மோட்டார்சைக்கிள் செயினைக் கழுவிக்கொண்டு இருந்த 40 வயது மணி, க்ரீஸ் பனியனும் காக்கி டிராயருமாக எழுந்து வந்தார்.
'என்னாச்சி கண்ணு?'
'ஆட்டோக்காரன் மோதிட்டான்.'
'த்சு... த்சு... டெய்ல் லேம்ப் காலி... சைடெல்லாம் அடி வாங்கிருக்குது... ரெண்டு நாளாவது ஆவுமே கண்ணு.'
'இருக்கட்டும்...' என்றாள். ஸ்கூட்டியை ஒப்படைத்த பாரியின் கையைப் பார்த்தாள்.
'ஐயோ... கையெல்லாம் அழுக்கு. வீடு பக்கம்தான். க்ளீன் பண்ணிக்கிட்டு, ஒரு காபி சாப்ட்டுட்டுப் போலாம் வாங்க.'
மறுக்க மனம் இல்லாமல் அவளுடன் நடந்தான். அஞ்சலகம் அருகில் திரும்பிய சந்தில் நுழைந்து, ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த ஒரு சிறு வீட்டை அடைந்து... இரண்டு படியேறி, கதவு திறந்து, 'உள்ள வாங்க...' என்றாள்.
தலையைத் தழைத்து, உள்ளே நுழைந்தான். சிறியதாக இருந்தாலும் வீடு பொலிவுடன் இருந்தது.
'அம்மா..!' என்று குரல் கொடுத்தாள்.
'என்னா தேவி இவ்வளவு நேரம்..?' என்று கேட்டபடி உள்ளிருந்து வெளிப்பட்ட அவளுடைய அம்மா பதறிப்போனாள்.



'என்னாச்சி தேவி..?'
'ப்ச்... சின்ன விபத்து. செராய்ச்சிக்கிச்சி... அவ்வளவுதான். இவர்தான் ஹெல்ப் பண்ணாரு... பாரி, இதான் எங்கம்மா!'
பாரி திகைப்பு நீங்காமலேயே, 'அக்கா, என்னைத் தெரில..?' என்று கேட்டான்.
அவள் கண்களைச் சுருக்கிப் பார்த்தாள். 'நீ..? நீங்க..?'
'பாரிய மறந்துட்டியாக்கா..?'
அவனை அடையாளம் கண்டுகொண்டதும், சாவித்திரி அக்கா முகத்தில் உற்சாகம் ஊற்றெடுக்கும் என்று எதிர்பார்த்தான். ஏமாந்தான். பொய்யான புன்னகையுடன், 'பாரியா நீ..? பன்னெண்டு வருஷத்துல ஆள் அடையாளமே தெரியாம மாறிட்ட..?' என்றாள்.
'ஒனக்கு ஒரு பொண்ணு இருக்கறதே எனக்குத் தெரியாதேக்கா..?'
'நாம வேலை பார்த்த லாயர் வீட்டுல,
உட்கார்ந்து பேச எங்க நேரம் கிடைச்சது? ராவெல்லாம் நான் டைப் அடிச்சுட்டு இருப்பேன்... நீ டீ வாங்கிட்டு வர ஓடிட்டு இருப்ப.'
பாரி புரிந்துகொண்டான். மகள் எதிரில், பாண்டிச்சேரியில் என்ன தொழிலில் ஈடுபட்டு இருந்தாள் என்று அவன் உளறிவிடப்போகி றானோ என்ற பதற்றம் சாவித்திரி அக்காவுக்கு. தேவி முகத்தில் ஆச்சர்யம்.
'ஓ... முன்னாடியே பழக்கமா? பேசிட்டு இருங்க... வந்துடறேன்' என்று உள்ளே போனாள்.
சாவித்திரி அக்கா நெருங்கி வந்தாள். அவன் கன்னத்தை ஆதூரத்துடன் தடவிக்கொடுத்தாள். உள்ளே திரும்பிப் பார்த்தபடி...
'தேவிக்கு என் பொழப்பு தெரியாது. எப்படி நெடுநெடுனு வளர்ந்துட்ட!' என்றாள்.
'எப்பக்கா சென்னைக்கு வந்தே?'
'அதாவுது பத்து வருஷம்... பாண்டில லாட்ஜை இடிச்சு, ஏதோ துணிக்கடை கட்டினாங்க. போலீஸ் கெடுபிடியும் அதிகமாச்சு. தேவியைத் தூக்கிக்கிட்டு, இங்க வந்துட்டேன். டைப்பிங் கத்துக்கிட்டது சமயத்துல கை கொடுத்துச்சு. கோர்ட் வாசல்லயும் ரெஜிஸ்திரார் ஆபீஸ் வாசல்லயும் பொழப்பு ஓடிட்டு இருக்கு. தேவியப் படிக்கவெச்சு, பெரிய ஆளா ஆக்கணும்னு ஆசை. நல்லாதான் படிச்சிட்டு இருந்தா... எவனோ ஒருத்தன் 'இவ்வளவு அழகா இருக்க... சினிமால பெரிய லெவலுக்கு வரலாம்'னு ஆசை காட்டி இழுத்துட்டுப் போயிட்டான். கடைசில டான்ஸராயிட்டா... போவட்டும்... உன்னப் பத்திச் சொல்லு?'
'ஹேண்டில்பாரை விட்டுட்டு சைக்கிள் ஓட்றப்ப, சின்னச் சின்ன கல்லுல மோதுற போக்குக்கு டயர் தானா திரும்புமே, அப்படி என் வாழ்க்கை அங்க இங்க மோதி, இப்ப சென்னைக்குக் கொண்டுவந்திருக்குக்கா.'
நைட்டிக்கு மாறி, ஈர முகத்தைத் துடைத்துக்கொண்டே தேவி எட்டிப் பார்த்தாள்.

'பாரி... இந்தாங்க சோப்... கையக் கழுவிக்குங்க.'
'உலகம் ரொம்ப சின்னது இல்ல?' என்றபடி பாரி உள்ளே போனான்.
'அம்மா சூப்பரா ஒரு காபி குடு பார்க்கலாம்.'
கைகளைச் சுத்தம் செய்து காபியை உறிஞ்சியபோது, 'ஃப்ரெண்டைப் பார்க்கப் போயிட்டு இருந்தீங்க... என்னால தொந்தரவு' என்றாள் தேவி.
'அப்படிலாம் இல்ல...'
'இப்பதான் வீடு தெரிஞ்சுடுச்சு இல்ல..? அடிக்கடி வந்து போயிட்டுரு!' என்றாள் சாவித்திரி.
விடைபெற்று வெளியே வந்த பிறகு, பாரிக்குக் கால்கள் பூமியில் பதியாமல் ஓரடி மேலேயே அந்தரத்தில் நடப்பதுபோல் இருந்தது. மைதானத்தைக் கடந்தபோது, நாகுவும் அவன் தம்பியும் தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதைப் பார்க்க முடிந்தது. ஆனால், இப்போது அவர்கள் மீது வன்மமோ, கோபமோ பீறிடவில்லை. இந்த மனநிலையில் கையைத் தூக்கிக் கன்னத்தில் அடிக்கக்கூட முடியுமா என்று சந்தேகமாக இருந்தது.
பாரி பேருந்தில் இருந்து இறங்கி, தெருவைக் கடந்து, மேன்ஷன் இருந்த சந்தில் நுழையவிருந்த நேரம், 'எக்ஸ்கியூஸ்மீ...' என்று ஒரு பெண் குரல் அவனை நிறுத்தியது.

- தடதடக்கும்...




பாரி திரும்பினான். அழகான இளம்பெண் ஒருத்தி நின்றிருந்தாள்.
'நீங்க அந்த மேன்ஷன்லயா இருக்கீங்க..?'
'ஆமா...'
'ஒரு சின்ன ஹெல்ப்... எனக்குத் தெரிஞ்சவரு அங்க இருக்காரு. போன் பண்ணா, சுவிட்ச் ஆஃப்னு வருது. தனியா மேன்ஷன்ல போய் விசாரிக்கக் கூச்சமாயிருக்கு. பேரு செந்தில். ரூம் நம்பர் 218. இருந்தார்னா, ரோட்டு முனைல தீபா வெயிட் பண்றானு சொல்லுங்களேன்.'
'சொல்றேன்.'
'தேங்க்ஸ்.'
இன்றைக்கு என்ன அடுத்தடுத்துப் பெண்களுடன் சந்திப்பு! சின்னதாகச் சிரித்துக்கொண்டே, பாரி மேன்ஷனை அடைந்து, இரண்டாவது மாடி ஏறி, கதவைத் தட்டினான். ஸ்கிப்பிங் செய்துகொண்டிருந்த செந்தில், நிறுத்திவிட்டு கதவைத் திறந்தான். பாரியைப் பார்த்ததும், சட்டென்று பின்வாங்கினான்.
'ஓ... நீங்கதான் செந்திலா?'
'ஏன்..?'
'உங்களைத் தேடி தீபானு ஒருத்தங்க ரோட்டு முனைல வெயிட் பண்றாங்க.'
"என்னது..?" செந்திலின் கண்கள் விரிந்தன.
'தேங்க்ஸ்.'
ஸ்கிப்பிங் கயிற்றை எறிந்துவிட்டு, பர்ஸை அள்ளிக்கொண்டு, செருப்புகளை மாட்டியபடி, கதவைச் சாத்திவிட்டு, பரபரவென்று ஓடி படிகளில் இறங்கினான். தீபாவைப் பார்த்தான். ஓடிப்போய் அண்டினான்.



'ஏய்... என்ன இது சர்ப்ரைஸ்?'

'அரை மணி நேரமா இங்கயே வெயிட் பண்றேன். ஏண்டா போனை ஆ:ப் பண்ணியே வெச்சிருக்க? ஏதாவது கடன்காரன் தொல்லையா?'

'அதெல்லாம் இல்ல, தீபா. அஞ்சு நிமிஷம்கூட சார்ஜ் நிக்க மாட்டேங்குது... பொட்டுபொட்டுனு ஆ:ப் ஆயிருது. சர்வீஸுக்குக் குடுத்திருக்கேன்.'

'வாடா எங்கூட'- அவன் கையைப் பிடித்து இழுத்துப் போன தீபா, பிரதான சாலையில் இருந்த ஒரு அலைபேசி விற்பனைக் கடைக்குள் நுழைந்தாள்.

'தீபா, இப்ப எதுக்கு புது போன்..?'

'வாயை மூடு... எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த லெவலுக்கு வந்திருக்க... முக்கியமான கால் ஏதாவது வந்தா?'

பல்வேறு மாடல்களில் கண்ணியமாகத் தெரிந்த ஒன்றை 2,700 ரூபாய் கொடுத்து வாங்கினாள். அவனுடைய சிம்கார்டை அதில் பொருத்தினாள். செந்தில் கூச்சத்துடன் போனை வாங்கிக்கொண்டான்.

'என்னால உனக்கு எவ்ளோ செலவு?'

'மொதல்ல புலம்பலை நிறுத்து... ஊர்லேர்ந்து ஒருத்தி உன்னைப் பார்க்கணும்னு திடுக்குனு புறப்பட்டு வந்திருக்காளே... அவள ஜாலியா எங்கயாவது கூட்டிட்டுப் போலாம்னு தோணுதா உனக்கு?'

'எங்க போகணும் சொல்லு?'

'நீ எந்த மெஸ்ல சாப்பிடுவ? எங்க பஸ் ஏறுவ? எந்த சாமியைக் காக்கா பிடிப்பே? எல்லா எடமும் காட்டு' என்று அவனுடன் கை கோத்துக்கொண்டாள்.

'அதுக்காகவா வந்த?'

'நாளைக்குத்தான கடைசி ஆடிஷன்னு சொன்ன..? நேர்லயே ஆல் தி பெஸ்ட் சொல்லணும்போல இருந்தது. அரை நாள் லீவு போட்டேன்... பஸ் பிடிச்சேன்... வந்துட்டேன்.'

அவளோடு நடந்தபோது, உலகமே கருணையாக மாறிவிட்டதுபோல் அவனுக்குத் தோன்றியது. குறுக்குச் சந்தில் இருந்த மெஸ்ஸைக் காட்டினான். தேநீர் அருந்தும் இடத்தைக் காட்டினான். போட்டோக்களை அச்சிட்ட கடையைக் காட்டினான். எல்லாவற்றையும் ஆவலுடன் பார்த்தாள்.

'தகவல் சொல்லி அனுப்பினியே, அவன் பேரு பாரி. ஆபத்தானவன் தீபா.'

'பார்த்தா உன்னைவிடக் கம்பீரமா, கண்ணியமா இருந்தான்..?' என்று கண்ணடித்தாள்.

செந்திலின் புதிய புகைப்படங்களைக் காட்டியபோது, இரண்டைப் பறித்துக்கொண்டாள்.

'இதுல அவனவிட அழகா இருக்கடா... கண்ணுல குறும்பு தெரியுது. என்கிட்டயே இருக்கட்டும். உன்கூடப் பேசணும்னு தோணிச்சுன்னா, இதுகூடப் பேசுவேன்' என்று கைப்பையில் வைத்துக்கொண்டாள்.


'செந்தில், எனக்கு உன் கையைப் பிடிச்சுக்கிட்டு, அலையில நிக்கணும்... நீ கடிச்ச மாங்கா பத்தையைப் பிடுங்கிக் கடிக்கணும்... மணல்ல முழங்காலைக் கட்டி உட்கார்ந்து நீ பேசறதைக் கேக்கணும்... கொஞ்ச நேரம் உன் மடில படுத்து கடல் காத்தை அனுபவிக்கணும்.'

'இன்னிக்கேவா..?'
'இப்பவே...'
மாங்காய் பத்தை, மசாலாக் கடலை, சுட்ட சோளம், கால் நனைக்கும் அலைகள், கூந்தல் கோதும் கடற்காற்று என்று எல்லாம் அனுபவித்து முடித்தபோது, இருள் சூழ்ந்திருந்தது.
'வீட்டுல என்ன சொல்லிட்டு வந்த தீபா?'
'ஃப்ரெண்டு அக்காவப் பொண்ணு பார்க்க வராங்க, ஹெல்ப்புக்குக் கூப்பிட்டிருக்கா... சென்னை வரைக்கும் போயிட்டு வரேன்னு ஒரு பொய்.'
'இந்த சுடிதார்ல ரொம்ப அழகா இருக்கடி.'
'இந்த வசனம்தான் கொடுத்தாங்களா?' என்று குறும்பாகச் சிரித்தாள். அவன் மடியில் படுத்தபடி நிமிர்ந்து முகம் பார்த்தாள்.
'இப்ப ஆடிஷன்ல செஞ்சத அப்படியே நடிச்சுக் காட்டு.'
'இங்கயா?'
'அவுட்டோர்ல ஆயிரம் பேருக்கு முன்னால நடிப்பே. எனக்காகச் செய்ய மாட்டியா?'
'வம்புக்காரிடி நீ.'
அவன் நடித்துக் காட்டியபோது, சத்தம் இல்லாமல் கைகளைத் தட்டினாள்... 'பின்றடா!'
ஆனந்தத்தில், செந்திலுக்கு நெஞ்சு விம்மி மூச்சு முட்டியது.
'எதுக்குடி எம் மேல இவ்ளோ அன்பைக் கொட்டுற?'
'எல்லாம் சுயநலம்தான்...' என்றாள்.

- தடதடக்கும்...




செந்தில் தீபாவைக் குழப்பத்துடன் பார்த்தான்.
'சுயநலமா, என்ன சொல்றே?'
'நாளைக்கு நீ பெரிய ஸ்டாரா ஆயிட்டா, என்கூட இப்படி பீச்சுக்கு வர முடியுமா..? துரத்தித் துரத்தி ஆட்டோகிராஃப் கேப்பாங்களே... அதான் டப்புனு இப்பவே தள்ளிட்டு வந்துட்டேன்.'
'ச்சீ... நாயி...' என்று அவள் பின் கழுத்தில் கைகொடுத்துத் தூக்கி, நெற்றியால் செல்லமாக முட்டினான். எழுந்தாள். கடற்காற்று அவள் உடையில் படபடத்தது.
'நைட் உன் ரூம்லதான் ஸ்டே!'
அவன் தவிப்புடன் பார்க்க, குபீர் என்று பொங்கிச் சிரித்தாள்.
'பயந்துட்டியா? கடைசி பஸ்ல ஏத்திவிடு... போயிடறேன்.'
அவளுடன் கைகோத்து, மணலில் கால்கள் புதையப் புதைய நடந்து, பல்லவனில் அருகருகே அமர்ந்து, கைகளைப் பின்னிக்கொண்டு, கோயம்பேடு வரை பயணம் செய்து, ஊருக்குச் செல்லும் பேருந்தில் ஜன்னலோரம் இடம் பிடித்துக்கொடுத்தான்.
இருக்கையில் அமர்ந்ததும், சட்டென்று அவன் கையைப் பற்றி புறங்கையில் முத்தமிட்டாள். 'ஜெயிச்சதும், என்னை மறந்துர மாட்டியே..?'



'அடி செருப்பால...' என்றான். சந்தோஷ மாகச் சிரித்தாள். பேருந்து புறப்பட்டபோது, தன் பர்ஸ் திறந்து கற்றையாகப் பணம் எடுத்து, அவன் பாக்கெட்டில் திணித்தாள். 'நல்லா சாப்டு...' என்றாள்.

பேருந்துடன் முட்டாள்தனமாகச் சற்று தூரம் கூடவே ஓடினான். ஓர் அங்கத்தை வெட்டி அனுப்புவதுபோல் உணர்ந்தான். கண்கள் நனைந்து நின்றான்.

பாரி தூக்கம் வராமல் மொட்டைமாடியில் அலைந்தான். அங்கிருந்து பார்த்தபோது, கூவத்தை ஒட்டி அடர்ந்திருந்த பல குடிசைகளின் வாசலை மூடிய கோணித்திரைகளின் ஊடே, உள்ளே தொலைக்காட்சிப் பெட்டிகளின் நீல வெளிச்சம் ஆட்டம் போடுவது தெரிந்தது. தகரக் கூரைகளில் நிலா வெளிச்சம் சிதறியிருந்தது.

திடீரென்று ஏன் இன்றைக்கு இப்படி மனம் அலைமோதுகிறது? தேவியைச் சந்தித்த பின், நாகுவைப் பார்த்தபோது ஏன் வெறி அடங்கிப்போயிற்று?

வேண்டாம் பாரி... நீ அயர்ந்தால் அடுத்தவன் முந்திக்கொள்வான். உயர்த்திய வாளை வீசாமல் தழைக்காதே!

பின்னந்தலையில் தட்டிக்கொண்டான்.

'ஆதிமூலம்! குறிச்சுக்கடா... உனக்குப் பதினெட்டாம் தேதி முகூர்த்தம்'' என்று சற்றே உரக்கச் சொன்னதும், இழந்த சக்தி மீண்டு வந்ததுபோல் உணர்ந்தான்.

தீபாவுடன் செலவான சந்தோஷத் தருணங்களை அசைபோட்டபடியே கண்ணயர்ந்திருந்த செந்தில், அகாலத்தில் செல்போன் ஒலித்ததும், திடுக்கிட்டு எழுந்தான்.

'ஹலோ' என்றான் தூக்கக் கலக்கத்துடன்.

'செந்தில், குணா பேசறேன்...'
தூக்கம் எகிறியது.
'நாளைக்கு டைரக்டர் ஹைதராபாத் போறாரு. அதுக்கு முன்னால உங்களப் பாக்கணும்னு சொன்னாரு. காலைல ஏழரை மணிக்குள்ள ஆபீஸ் வந்திருங்க.'
'வந்துருவேன் சார்...' என்றான் பரபரப்பாக.
'ஸாரி... தூக்கத்தக் கெடுத்திருந்தா...'
தூக்கம் அறுந்துதான் விட்டது. ஆனால், இரவு எவ்வளவு உற்சாகமானதாக மாறிவிட்டது. தீபா வாங்கிக்கொடுத்த போனில் வரும் முதல் இன்கமிங் கால். இந்த போன் இல்லாவிட்டால், இந்த அழைப்பையே தவறவிட்டிருப்பான். நினைப்பு அதிரடித்தது. இரவு முழுதும் விழித்திருந்து, குளித்து உடை மாற்றி, தயாரிப்பாளர் அலுவலகத்தின் வாசலில் அவன் காத்திருந்தபோதுதான், வானம் கறுப்பை உதிர்க்க ஆரம்பித்தது. ஒரு குவாலிஸ் வந்து கதவு திறந்தது.
'வண்டில ஏறுங்க...' என்றது குணாவின் குரல். செந்தில் ஏறியதும் கார் புறப்பட்டது.
'இவர்தான் டைரக்டர்...'
'வணக்கம் சார்...'
'ஜோச்ப் தங்கராஜ்...' என்று புன்னகையுடன் கையை நீட்டிய இளைஞன், விளிம்பில்லாத கண்ணாடி அணிந்திருந்தான். அவனிடம் கும்மென்று ஒரு சுகந்த வாசம்!
'செந்தில்... வாழ்த்துக்கள். உங்க பெர்்பார் மன்ஸ் சூப்பர். நீங்கதான் என் படத்து ஹீரோ. ஏன் கை நடுங்குது?'
செந்திலுக்கு மூச்சு அடைத்தது. 'தேங்க்ஸ் சார்...'
'உங்க பேர இளைய செந்தில்னு மாத்தலாம் இல்லியா?'
'மாத்திக்கிறேன் சார்...'
'ஹீரோயினை முடிவுபண்ண ஹைதராபாத் போயிட்டிருக்கேன். உங்களுக்கு மட்டும் இல்ல... எனக்கும் இது மொதல் படம். நாம சேர்ந்து கலக்கணும்.'
'கலக்குவோம் சார்...'
'அப்புறம் முக்கியமான விஷயம்... எங்க டைரக்டர் ஷங்கர் சார், இதப் பெரிய பப்ளிசிட்டியோட ஆரம்பிக்கணும்னு பிளான் பண்ணியிருக்கார். அவரா செய்தி கொடுக்கறவரைக்கும் மீடியாவுக்கு லீக் ஆகக் கூடாது. உறவுக்காரங்க, நண்பர்கள்கிட்டகூடச் சொல்ல வேண்டாம்.'
'சரி சார்...'
'நம்ம படம் முடியற வரைக்கும் வேற படத் துக்குக் கமிட் ஆகக் கூடாது.'
'ஓ.கே. சார்.'
'எத்தன சார்? ஜோச்ப்னே சொல்லுங்க...'
வெளியே வானத்திலும் வெளிச்சம்.
'ஜோச்ப் சார்... நான் ஜெயிக்கணும்னு உண்மையா ஆசைப்படற ஒருத்தர்கிட்ட மட்டும் சொல்லலாமா?'- தயக்கத்துடன் செந்தில் கேட்டான்.
'அம்மாவா..?'
'இல்ல...'
'லவ்வரா?'
'ஆமா... சத்தியமா அவ வேற யார்கிட்டயும் சொல்ல மாட்டா.'
ஜோச்ப் சிரித்தான். 'சொல்லிக்கோ' என்பதுபோல் கையை அசைத்தான்.
விமான நிலையத்தில் இறங்கியபோது, 'பெரும்பாலும் பதினெட்டாம் தேதி பூஜை இருக்கும்...' என்றான்.


- தடதடக்கும்...

**யட்சன்**

**எக்ஸ்பிரஸ் தொடர் 13**

சுபா, ஓவியம்: ஸ்யாம்

தீபா உலர்ந்த வார்த்தைகளில் ஒரு கடிதத்தை டைப் செய்துகொண்டிருந்தபோது, செந்திலிடம் இருந்து போன் வந்தது.
'தீபா... உன் கை அதிர்ஷ்டக் கை. புது போன்ல வந்த முதல் கால் என் வாழ்க்கையை மாத்தப்போவுது!'
தீபா, சூழ்நிலை மறந்து துள்ளினாள்.
'சொன்னேன்லடா... ஜெயிச்சுட்ட பாரு! எப்ப பூஜை?'
'பதினெட்டாம் தேதி. ஆனா, யார்ட்டயும் சொல்லக் கூடாதுனு சொல்லியிருக்காங்க.'
'சொல்லாத!'
'அம்மாகிட்ட மறைக்கறது மனசுக்குக் கஷ்டமா இருக்கு.'
'வெயிட் பண்ணு. இப்ப சொல்லி அவங்ககிட்ட சாபம் வாங்கறதைவிட, அ்பீஷியலா அறிவிப்பு வந்ததும் சொல்லி, ஆசீர்வாதம் வாங்கலாம்.''
'நாளைக்கு மறக்காம தினத்தந்தி பாரு, தீபா.'
'டேய், பணம் அனுப்பறேன். நல்லதா நாலு டி-ஷர்ட், ஜீன்ஸ், ஷூலாம் வாங்கிக்க.'
பேசி முடித்து போனை வைத்த பிறகும் மகிழ்ச்சி அடங்காமல், தீபா அலுவலகத்தை விட்டு வெளியில் வந்தாள். தெருவைக் கடந்து, அங்காடிக்குள் நுழைந்தாள். இனிப்பு ஒரு கிலோ வாங்கிக்கொண்டாள். அலுவலகம் திரும்பி சக பணியாளர்களிடம், முதலாளியிடம் இனிப்புகளைப் பகிர்ந்தாள்.
'என்ன விஷயம் தீபா? கல்யாணம் நிச்சயம் ஆயிடுச்சா?'
'எதுக்குன்னு பதினெட்டாம் தேதி சொல்றேன்' என்று தீபா புன்னகையுடன் சொன்னாள்.



பாரி, அடுத்த சில நாட்கள் நிழலாக வேலை செய்தான்.
ஆதிமூலமும் அவனுடைய அடியாட்களும் எந்த நேரத்தில் எங்கெங்கே காணப்படுகிறார்கள்? எவ்வளவு பேர் பாதுகாப்பு வளையமாக வலம்வருகிறார்கள்? அதில் யார் யாரிடம் என்னஎன்ன ஆயுதங்கள் இருக்கின்றன? எந்தெந்த வாகனங்கள் யார் யாரிடம் இருக்கின்றன?
அத்தனைத் தகவல்களும் அவனுக்கு அத்துப்படியானதும், பூமணியையும் கிருபாவையும் சில முறை சந்தித்தான். தேவைப்பட்ட கூடுதல் விவரங்களைக் கேட்டுப் பெற்றான்.
'எனக்கு ஒரு புது செல்போன் வேணும். புது நம்பர் வேணும்.'

கிடைத்தது. அதன் பின், தன் திட்டத்தைக் கச்சிதமாகத் தயார்செய்தான். பாரிமுனை வீதியில், மூன்று கத்திகளை வாங்கிக்கொண்டான்.

கடைசியாக ஒரு முறை கிருபாவைச் சந்திக்க முடிவுசெய்தான்.

இந்த முறை சந்திப்பு, கோட்டூர்புரம் ரயில் நிலையத்தின் பயன்படுத்தாத கீழ்த்தளத்தில் நிகழ்ந்தது. பிளாஸ்டிக் குப்பைகளும், எப்போதோ பெய்த மழைத் தண்ணீரும், காலி மது பாட்டில்களும், பயன்படுத்தி வீசிய காண்டம் உறைகளும், சுருண்டுபடுத்திருந்த நான்கு நாய்களும் மட்டுமே காணப்பட்டன.

கிருபா செய்தித்தாளில் சுற்றிய ஒரு பொட்டலத்தை அவனிடம் நீட்டினான்.

'பேசிய முன்பணம்...'

பாரி அவனிடம் கத்திகளைக் காட்டினான்.

கிருபா முகத்தில் அதிருப்தி. 'அவங்க கூட்டமா சூழ்ந்துக்கிட்டா, கத்தி வேலைக்காவாது, பாரி... ஒரு துப்பாக்கி வெச்சுக்க.'

'ஆயுதமும் சத்தம் போடக் கூடாது, அடிபடறவனும் சத்தம் போடக் கூடாதுனு நெனைக்கறவன் நான்!'

'பதினெட்டாம் தேதின்னுதானே சொன்னே? சென்னைக்குப் பழக்கமான புதுப் பையனை வண்டியோட அனுப்பறேன்... அவன்ட்ட எதுக்கும் ஒரு துப்பாக்கி குடுத்துஅனுப்பறேன்.'




செந்தில் அந்த செய்தித்தாளை ஆயிரமாவது தடவையாக எடுத்துப் பார்த்தான். கால் பக்க விளம்பரம்.

டைரக்டர் ஷங்கரின் நல்லாசியுடன்,

புத்தம் புதிய கூட்டணியில்

'யட்சன்'

படப்பிடிப்பு துவக்கம்... பதினெட்டு.

சதுரமாக ஒரு கட்டம் கட்டப்பட்டு, அதற்குள் பெரிய கேள்விக் குறி. அதன் கீழே நாயகன் என்ற வார்த்தை. பக்கத்தில் இன்னொரு சதுரக் கட்டத்தில் கேள்விக்குறிக் குக் கீழே நாயகி என்ற வார்த்தை. புதுமுகங்களின் புகைப்படங்களை வெளியிடாமல், வித்தியாச மான முறையில் ஒரு விளம்பரம்.

காலிச் சதுரத்தில் தன் புகைப்படத்தை வெட்டிப் பொருத்திப் பார்த்தான். கீழே, 'அறிமுகம்: இளைய செந்தில்' என்று அழகாக எழுதிப் பார்த்தான். மகிழ்ச்சி மனதை நிறைத்து வழிந்தது.

குணாவிடம் இருந்து 17-ம் தேதி இரவு போன் வந்தது.

'காலைல ரெடியாயிருங்க... வண்டி அனுப்பறேன்.'

செந்தில் ஏன் தூங்கப்போகிறான்?

'அம்மா கீழ விழுந்து கைய முறிச்சிக்கிட்டாங்க செந்தில். விட்டுட்டு வர முடியல...' என்று தீபா அழுதபோது, நள்ளிரவு வரை போனில் பேசி அவளைச் சமாதானம் செய்தான்.

18-ம் தேதி. வெள்ளிக்கிழமை. அதிகாலை.

இரண்டு வெள்ளை நிறக் கார்கள், அந்த மேன்ஷன் இருந்த சந்தில் நுழைய முடியாமல், முனையில் காத்திருந்தன.

புதிய ஜீன்ஸ் அணிந்திருந்த செந்தில் தீபாவுடன் செல்போனில் பேசியபடியே, படிகளில் வேகமாக இறங்கினான். படிக்கட்டுத் திருப்பத்தில், பாரியுடன் மோதிக்கொள்ள இருந்து, கடைசி நொடியில் தவிர்த்தான். அவனைப் பார்த்துப் புன்னகைத்தான். வெளியே விரைந்தான்.

பாரி தன் ஆயுதங்களைத் தொட்டுப் பார்த்தபடி, பதில் புன்னகையை வீசினான். வெளியே வந்தான். செந்தில் ஒரு க்வாலிஸில் ஏறுவதைக் கவனித்தான். காத்திருந்து அடுத்த காரில் ஏறினான்.

இரு கார்களும் தவறான பயணிகளை ஏற்றிக்கொண்டது தெரியாமல், எதிரெதிர் திசைகளில் விரைந்தன.

- தடதடக்கும்...


# சுபா
ஓவியம்: ஸ்யாம்

# யட்சன்

தொடரும் முன்...

இந்தக் கதையில் இடம்பெறும் திரைத்துறைப் பிரபலங்களின் பெயர்கள் மட்டுமே உண்மை. அவர்கள் பங்குகொள்ளும் சம்பவங்கள் கற்பனை... கற்பனை... கற்பனையே! - சுபா

---



கார் வாலாஜா சாலையில் இருந்து அண்ணா சாலைக்குள் திரும்பியது. இரு பக்கமும் நெடிதுயர்ந்த கட்டடங்களின் உச்சிகளில் இளம் வெயில். பாரி ஓட்டுநர் பக்கம் திரும்பினான்.

'உங்க பேரு..?'

'முத்து...'

'சென்னை நல்ல பழக்கமா..?'

'பொறந்து வளர்ந்ததே இங்கதான்.'

ஜெமினி மேம்பாலம் அருகில் வரிசையாக ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் பாரியின் கவனத்தை ஈர்த்தன.

'டைரக்டர் ஷங்கரின் நல்லாசியுடன்,

சூப்பர் ஸ்டார் முதல் க்ளாப் அடிக்க...

யட்சன்

பூஜையுடன் இன்று AVMல் படப்பிடிப்பு தொடக்கம்.'

டைரக்டர் ஷங்கரின் புகைப்படமும் சூப்பர் ஸ்டாரின் புகைப்படமும் பெரிய அளவில் சுவரொட்டியில் காணப்பட்டன. சகுனமே எவ்வளவு நன்றாக இருக்கிறது. பாரிக்கு ஜிவ்வென்று ஏறியது.

''முத்து, சூப்பர் ஸ்டார் இப்ப சென்னைலதான் இருக்காரா?''

''ஆமா சார்... ஷங்கர் சார் கேட்டதும் பிகு பண்ணாம உடனே ஓ.கே. சொல்லிட்டாரு. நீங்க ரொம்ப லக்கி!'

பாரிக்கு வியப்பாக இருந்தது.

'எனக்கு சூப்பர் ஸ்டாரைப் பிடிக்கும்னு உங்களுக்குத் தெரியுமா?'

'அவரை யாருக்குத்தான் பிடிக்காது?'

கார் கோடம்பாக்கம் நெடுஞ்சாலைக்குள் திரும்பியதும், 'படீர்...' என்று ஒரு சத்தம். கார் இடதும், வலதுமாக அல்லாடியது. அவசரமாக பிரேக் அடிக்க, கார் ஒதுங்கி நின்றது. ஓட்டுநர் இறங்கினார்.

'சார்... தப்பா நினைச்சுக்காதீங்க. லெஃப்ட் வீல் பஞ்ச்சர். நீங்க வேற வண்டி பிடிச்சுப்போறீங்களா?'

'எதுக்கு முத்து? உங்களுக்குத்தானே கரெக்டான இடம் தெரியும்? டயரை மாத்திருவோம். நானும் ஹெல்ப் பண்றேன்.'

பாரியும் இறங்கினான்.

'ரொம்ப டேங்க்ஸ் சார்.'

ஏவி.எம்.

நுழைவாயிலில் இருந்து பிள்ளையார் கோயில் வரை, இருபுறமும் சூப்பர் ஸ்டாரின் பேனர்கள். அலங்காரத் தோரணங்கள். எங்கும் பரபரப்பான மனிதர்கள். கறுப்பு ஜீன்ஸும், கட்டம் போட்ட நீலச் சட்டையுமாக டைரக்டர் ஷங்கர். அவர் அருகில், கைகளைக் கட்டியபடி மரியாதையுடன் புது டைரக்டர் ஜோசஃப் தங்கராஜ், குணா.

'ஹீரோயின் நல்ல செலெக்ஷன். அந்தப் பையன் எங்கே?' என்று ஷங்கர் கேட்க...

'வந்துட்டிருக்கான் சார்.'

குணா அவசரமாக விலகி, போன் செய்தான்.

மாற்றிய சக்கரத்தை இறுதியாக முடுக்கிக்கொண்டிருந்தபோது, டிரைவர் முத்துவின் போன் ஒலித்தது.

'என்னய்யா இன்னும் காணும்?'

'சின்ன ட்ரபிள் சார். வண்டி பஞ்ச்சர் ஆயிடுச்சு. வீல் மாத்திட்டிருக்கேன்.'

'யோவ், நல்ல வண்டியா எடுத்துட்டு வரமாட்டே? மொத மொதல்ல ஷூட்டிங் கிளம்பறான். வண்டி பஞ்ச்சராகி நின்னா, அந்தப் பையன் மனசு எப்படித் தவிக்கும்? வேற வண்டி அனுப்பவா?'

'வீல் மாத்தியாச்சு சார். பத்து நிமிஷத்துல அங்க இருப்போம்.'

போனை அணைத்துவிட்டு, பாரியிடம் திரும்பினார் முத்து.

'லேட்டாயிருச்சினு குணா சார் கத்தறாரு.'

'குணா யாரு? பூமணியோட ஃப்ரெண்டா?'

'உங்ககூட தொடர்புல குணா இல்லியா? பூமணி யாரு?' என்று முத்து கேட்ட அதே நேரம்...

பூமணி சென்னைக்குச் சற்று ஒதுக்குப்புறமாக, போரூரின் உள்சாலை ஒன்றில், ஒரு காரின் பின்னிருக்கையில், வாட்ச்சைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

'எங்க வரணும்னு கரெக்டா சொல்லிருக்கியா?' என்று கேட்டான் முன்னால் அமர்ந்திருந்த நாகு.

'சொல்லியிருக்கேன்.'

'உஷாராகிப் போயிடமாட்டாங்களே?'

'இல்லண்ணே... புது ஆளு வேணும்னு பாரினு ஒருத்தன மதுரையிலேர்ந்து வரவழைச்சிருக்காங்க. இந்த ரூட்ல வரச் சொல்லி, டிரைவருக்கு இருபதாயிரம் வெட்டியிருக்கேன்.'

''உன்னைப் போல ரெண்டு பக்கமும் காசு வாங்கறவங்க இருக்கறவரைக்கும் இந்தத் தொழில் ரிஸ்க்குதாண்டா.'

'என்னண்ணே இப்படிச் சொல்லிட்டீங்க? எப்பவுமே நான் உங்களுக்குத்தான் விசுவாசி. அவங்க மேட்டரலாம் தெரிஞ்சுக்கதான அங்க பொய்யா ஒட்டிட்டிருக்கேன்?'

'டிரைவர் போய் உளறிடமாட்டானே?'

'வர்றவனைப் போட்டுத்தள்ளும்போது, அவனையும் சேர்த்து போட்டுட்டாப் போச்சு.'

'என்ன பொருள்டா கொண்டுவரான்?'

'டிரைவர் கைல ஒரு சாதா ரிவால்வர் குடுத்துருக்கேன். உங்க பிஸ்டலுக்கு முன்னால அது தீபாவளித் துப்பாக்கிண்ணே!' என்று பூமணி கைகளைக் கட்டி, பக்தியுடன் சொன்னான்.

'ஆதிமூலத்தை அவ்வளவு சுலபமா நெருங்க முடியாதுன்னு கைலாசம் குரூப் நல்லாப் புரிஞ்சுக்கணும்டா' என்று ஆவேசமாகச் சொன்னான் நாகு.

அதே நேரம்...

பிரமாண்டமான சுவரொட்டிகளைப் பார்த்து, செந்திலுக்கு மார்பு விம்மியது.

தீபாவுக்கு போன் செய்தான்.

'கிளாப் அடிக்கப்போறது யார் தெரியுமா? ரஜினி சார்!'

'பின்றா...'

டிரைவர் வண்டியை ஜெமினி மேம்பாலத்தில் திருப்பாமல் நேராகச் செலுத்தியவுடன், 'ஷூட்டிங் வடபழனில இல்ல..?' என்றான்.

இந்தக் கேள்விக்குத் தயாராக இருக்கச்சொல்லியிருந்தான் பூமணி.

'அங்க தோதா இல்லனு, போரூருக்கு மாத்திட்டாங்கண்ணே...'

கார் போரூர் நோக்கிப் பயணப்பட்டது.

அங்கு காத்திருக்கும் ஆபத்துபற்றி எதுவும் தெரியாமல் சாய்ந்து அமர்ந்துகொண்டான் செந்தில்.

- தடதடக்கும்...

சுபா

ஓவியம்: ஸ்யாம்

# யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் 15

டிரைவர், செந்தில் பக்கம் திரும்பினான்... "கொஞ்சம் டீசல் போட் டுட்டுப் போயிடலாம்ணே...'
டீசல் நிரம்பும் நேரத்தில், கீழே இறங்கி ரகசியமாக போன் செய்தான்.
"பூமணிண்ணே... வந்துட்டே இருக்கோம்!"
"டேய்... சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கில்ல..? அவனா கேக்காமத் துப்பாக்கி யைக் கொடுக்காத!"
'சரிண்ணே.'
'சந்தேகம் வந்து கிருபாகிட்ட அவன் பேசிட்டா ஆபத்து. சரியான சமயமாப் பாத்து அவனோட போனை வாங்கித் தூக்கிப் போட்டுரு.'
'சரிண்ணே.'
அதே நேரம்... காரில் இருந்த செந்திலின் போனும் ஒலித்தது. மறுமுனையில் குணா.
"செந்தில், தடங்கல் ஆயிருச்சுனு யோசிக்காதீங்க... இதுகூட நல்ல சகுனம்தான். ராஜா சார் மொத பாட்டுக்கு மியூஸிக் போட்டப்போ, கரன்ட் போயிடுச்சுனு சொல்வாங்க. அவர் சாதிக்காததா?'
படப்பிடிப்பு இடம் மாறியதற்கு எதற்கு இந்தச் சமாதானம் என்று எண்ணியபடி, 'அப்படிலாம் நெனைக்கல... போஸ்டரைப் பார்த்து மெரண்டுபோயிருக்கேன்... ரஜினி சார்லாம் வர்றாரு. இதைவிட வேற என்ன வேணும்?' என்றான் செந்தில் குரல் விம்ம.
'சீக்கிரம் வந்து சேருங்க...' என்று குணா போனை கட் செய்தான்.



கார் வடபழனி பேருந்து நிலையத்தைத் தாண்டும்போதுதான் பாரி சற்றே குழப்பத்துடன் கேட்டான்.
'முத்து... நாம எங்க போறோம்?'
'ஏன் சார்..? ஏவி.எம்-லதான பூஜை.'
நிகழ்ந்துவிட்ட தவறு பாரிக்குப் புரிந்தது. புதிய படத்தின் பூஜைக்காக யாரையோ அழைத்துப் போக வந்த காரில் தான் ஏறிவிட்டோம். ஆனால், அந்தக் கணத்தில் அதை வெளியில் சொல்ல அவனுக்கு மனம் இல்லை. கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு பெரிய சக்தியின் வேலை அல்லவா இது? தன் உயிரைவிட அதிகமாக நேசிக்கும் சூப்பர் ஸ்டார் துவக்கிவைக்கும் படப்பிடிப்பில் கலந்துகொள்ளக் கிடைத்த மாபெரும் சந்தர்ப்பம் அல்லவா இது..? பாரிக்குப் புல்லரித்தது.
கத்திப்பாரா சந்திப்பில் திரும்பியபோது, டிரைவர் செந்திலிடம் கை நீட்டினான்.
'அண்ணே... என் போன்ல சுத்தமா சார்ஜ் இல்ல. கொஞ்சம் போனைக் குடுங்க.'
செந்தில் தன் போனைக் கொடுத்தான். அதில் ஏதோ எண்ணை டயல் செய்வதுபோல் விரல்களை ஓட்டி, சுவிட்ச் ஆ்ப் செய்தான் டிரைவர். ஆனால், காதில் பொருத்தி ஏதோ பேசிக்கொண்டே வந்தான். கார் போரூர் எல்லைக்குள் நுழைந்தது.
டைரக்டர் ஷங்கர், தன் ஐபோனில் பேசி முடித்து, பக்கத்தில் நின்ற ஜோசப் தங்கராஜிடம் திரும்பினார்.
'ரஜினி சார் புறப்பட்டாச்சு... அவர் லேட்டா வந்ததா சரித்திரம் இல்ல... ஹீரோ பையன் எங்கடா?'
'இதோ சார்...' என்று ஜோசப் ஓடினான்.
தீபா அவனுக்காக ரீ சார்ஜ் பண்ணியதை எல்லாம் இந்த டிரைவரே பேசித் தீர்த்துவிடுவான் போலிருக்கிறதே! செந்திலுக்குத் தாங்கவில்லை.
'என்னை யாராவது அர்ஜென்டா
கான்டாக்ட் பண்ணா, பேச முடியாமப் போய்ரும்... போனைக் குடுங்க டிரைவர்!' என்று கை நீட்டினான். டிரைவர் கோண லாகச் சிரித்தான்.
"இனிமே இது உனக்குத் தேவைப்படாதுரா!" என்றபடி போனைச் சட்டென்று காருக்கு வெளியே தூக்கிப்போட்டான்.
'ஏய்...' - செந்தில் பதறினான். காரின் பின் டயர் போன் மீது ஏறி கர்ரக் என்று அதை நொறுக்கும் சத்தம் கேட்டது. அவன் இதயமே நொறுங்கினாற்போல் இருந்தது.
முத்துவின் போன் ஒலித்தது.
எடுத்துப் பேசி, 'சார், உங்களுக்கு...' என்று பாரியிடம் நீட்டினான்.
'செந்தில், உங்க போன் சுவிட்ச் ஆ்ப்னே வருது? அசிஸ்டென்ட் டைரக்டர்ஸ் உங்களை ரிசீவ் பண்ணி, காஸ்ட்யூம் தருவாங்க. சட்டுனு ரெடியாகுங்க.'
'சரி...' என்றான் பாரி.
இது செந்திலுக்கு வந்த கார் என்று இப்போது தெளிவாகப் புரிந்தது. அப்படியானால், தனக்கு வந்த காரில் செந்தில் போயிருக்கிறானா? ஐயோ, நாகுவிடம் அவன் மாட்டிக்கொண்டுவிட்டால்? அதைப் பற்றி அவன் யோசிக்கக்கூட நேரம் வைக்காமல் கார், ஏவி.எம். ஏ.சி. ்ப்ளோர் அருகில் நின்றது.
பரபரவென்று உதவி இயக்குநர்கள் இருவர் ஓடிவந்தனர். கதவைத் திறந்து பாரி இறங்கியதும், அவர்கள் முகத்தில் அதிர்ச்சி. காருக்குள் எட்டிப் பார்த்தனர்.
'என்ன முத்து... செந்தில் எங்க?'
'இவர்தான கார்ல ஏறி வந்தாரு? ஏன்... இவர் செந்தில் இல்லியா?'
'சொதப்பிட்டியே முத்து?'
உதவி இயக்குநர் உதறலுடன் குணாவுக்கு போன் செய்தான்.
போரூர்...
ஆள் அரவமற்ற அந்த மண் சாலையில் புழுதியைக் கிளப்பிக்கொண்டு கார் நுழைந்தது.
'ஏய்... கேக்கறேன் இல்ல? ஏன் என் போனை வெளிய தூக்கிப்போட்ட?' என்று செந்தில் டிரைவரின் தோளை உலுக்கிய அதே கணம்...


'டிஷ்யூங்...' என்று எங்கிருந்தோ சீறி வந்த ஒரு தோட்டா, காரின் முன் கண்ணாடியைச் சிதறடித்தது. செந்தில் மிரண்டு தலைகுனிந்தான்.
- தடதடக்கும்...

சுபா
ஓவியம்: ஸ்யாம்

# யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் 16

முதலில் படப்பிடிப்புத் தளத்துக் குள் நுழைந்துவிட்டதாகத்தான் செந்தில் நினைத்தான். ஒத்திகை பார்க்கும்போது துப்பாக்கி வெடித்து, கார் கண்ணாடி உடைந்திருக்கும் என்று சற்றே தலையை நிமிர்த்தினான். வாழ்க்கையின் மாபெரும் அதிர்ச்சி அவனுக்குக் காத்திருந்தது. டிரைவர் வலியில் முகம் சுளித்தாலும், சட்டென்று தொடைக்கு அடியிலிருந்து ஒரு ரிவால்வரை உருவினான். வெளியே பார்த்துச் சுட்டான். என்ன நடக்கிறது இங்கே? செந்தில் மிரண்டுபோனான்.
அதே நேரம்...
ஏவி.எம்.
டைரக்டர் ஷங்கரின் நெற்றி சுருங்கியது.
'என்னடா சொல்ற..?'
'சார், தப்பு நடந்திருச்சு. டிரைவர் ஆள் மாத்தி அழைச்சிட்டு வந்துட்டாரு. செந்திலும் போனை எடுக்க மாட்டேன்றான்' என்று தலை குனிந்தான் அறிமுக இயக்குநர் ஜோசப் தங்கராஜ்.
'ரெண்டு நிமிஷத்துல ரஜினி சார் வந்துருவாரே... அவரை வெயிட் பண்ணவைக்க முடியுமா? வந்திருக்கிற பையன் எங்கே?'
பாரி, ஷங்கரைப் பார்த்ததும் கையெடுத்துக் கும்பிட்டான்.
'சார், நான் உங்க ரசிகன்!'
'இப்ப அதுக்கெல்லாம் நேரம் இல்ல... செந்தில் எங்க?'
'அவருக்குப் பதிலா நான் நடிக்கிறேன் சார்!'
'வெளையாடறியா? இதென்ன காலேஜா, அவனுக்குப் பதிலா நீ அட்டென்டன்ஸ் கொடுக்க? சூப்பர் ஸ்டார் வர்றாரு... பெரிய லெவல்ல
அறிமுகம் பண்ணலாம்னு நினைச்சுட்டு இருக் கோம்... இப்பப் போய்...' என்று முகம் சிவந்த ஷங்கர் சற்றே யோசித்தார்.
'உன் பேரென்ன..?'
'பாரி...'
'நீயும் நடிக்க ட்ரை பண்றவனா?'
'அ... ஆமாம் சார்' என்று பச்சையாகப் பொய் சொன்னான் பாரி.
ஷங்கரின் போன் ஒலித்தது. பேசினார். திரும்பினார்.
'ஜோசப், ரஜினி சார் கோடம்பாக்கம் பிரிட்ஜ் தாண்டிட்டாரு... சட்டுனு இவனை ரெடி பண்ணுங்க... என்ன சீனோ அவனுக்குச் சொல்லி அனுப்புங்க... பூஜை நல்லபடியா முடியட்டும்! சரியா வரலைன்னா, அப்புறம் இவன மாத்திடலாம்.'
பாரியின் கைகளை ஜோசப் பற்றிக்கொண்டான்.
'பிரதர், என்னோட எதிர்காலமே இப்ப ஒங்க கைல... கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்க.'
'கவலைப்படாதீங்கண்ணே... சொல்லிக் குடுக் கறதை ஒழுங்கா பண்ணுவேன்.'
அறைக்குள் உடை மாற்றும்போது, பாரி தன் கத்திகளை அங்கே ஒரு இடுக்கில் மறைத்தான். வெளியில் வந்த பாரியை குணா ஆச்சர்யமாகப் பார்த்தான்.
'செந்திலோட சைஸுக்கு எடுத்த காஸ்ட்யூம் உங்களுக்கு சூப்பரா ஃபிட் ஆவுதே!'



பூஜை நடக்கவிருந்த இடத்தை நோக்கி பாரியுடன் நடந்துகொண்டே குணா கேட்டான்.

'உங்களுக்கும் செந்திலுக்கும் என்ன உறவு?'

'ஒரே மேன்ஷன்... ரெண்டு பேரும் நடிக்க வந்தவங்க. மத்தபடி நேரடியான பழக்கமில்ல.'

'ஆடிஷன் டெஸ்ட்டுக்கு நீங்களும் வந்திருந்தீங்களா?'

பாரிக்குப் புரியவில்லை. ஆனால், 'அந்தச் சமயம் வெளியூர் போயிருந்தேன்' என்றான். எக்காரணம் கொண்டும் சூப்பர் ஸ்டாரை அருகில் பார்க்கும் வாய்ப்பை அவன் தவறவிடத் தயாராயில்லை. திடீரென்று எங்கும் பரபரப்பு. பரபரவென்று ஒரு கார் வந்து நின்றது.

சூப்பர் ஸ்டார்!

ரஜினி காரிலிருந்து இறங்கினார். வெள்ளை நிற பைஜாமா, ஜிப்பா. சற்றே பக்கவாட்டில் திரும்பியபடி, வேகமாக அவருடைய ஸ்டைலில் நடந்து வந்தார். ஷங்கர் அவரை எதிர்கொண்டார்.

'ஆஹ்... ஷங்கர்!' என்று ரஜினி அவர் கைகளைப் பற்றிக்கொண்டார்.

'எங்க ஜோசப்?' என்றார் கண்களைச் சுருக்கி. ஜோசப் ஓடி வந்து நின்றான்.

'ஞாபகம் வெச்சிருக்கீங்களா, சார்?'

' 'எந்திரன்' டப்பிங்ல நீங்க பண்ணத மறக்க முடியுமா? ஹா... ஹா...' என்று சிரித்தவர், அவன் கையைக் குலுக்கினார்.

'நல்லாப் பண்ணுங்க...'

ஷங்கர் திரும்பினார். 'சார், இவன்தான் புதுப் பையன்!'

'பேரு?' என்றார் ரஜினி அவன் பக்கம் திரும்பி. பல யுகம் தவம் செய்து, கடவுளைச் சந்தித்த முனிவனைப் போல் பாரி அந்தக் கணத்தில் உணர்ந்தான். பரவசத்தில் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது. வாயைத் திறக்க வரவில்லை.

'பாரி...' என்று குணா பதில் சொன்னான்.

'நைஸ் நேம்...'

பாரி சட்டென்று ரஜினியின் கால்களில் விழுந்தான். பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டான்.

'நான் உங்க அடிமை!' என்றான்.

'நோ... நோ... இந்த உலகத்துல யாரும் யாருக்கும் அடிமை இல்ல... நாம எல்லாருமே முதலாளிதான்... எல்லாருமே அடிமைதான்.'

'அண்ணா... பூஜை ஆரம்பிக்கலாமா?' என்று ஐயர் எதிரில் வந்து கும்பிட்டார்.

அதே நேரம் போரூரில் செந்திலின் முகத்திலும் சட்டையிலும் கண்ணாடித் தூள்களுடன் சூடாக ரத்தம் தெறித்தது.

'ஐயோ, வெளியிலிருந்து யார் சுடுகிறார்கள்? எதற்காக?'

டிஷ்யூங்...

இந்த முறை தோட்டா டிரைவரின் கழுத்தில் பாய்ந்தது. அந்தக் கணமே, டிரைவர் உயிரிழந்து ஸ்டியரிங் மீது குப்புறச் சரிந்தான். ஹாரன் விடாமல் அலறியது. கார் கட்டுப்பாடின்றி சீறிப் பாய்ந்தது.

- தடதடக்கும்...

சுபா
ஓவியம்: ஸ்யாம்

# யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் 17

செந்தில் நடுங்கும் இதயத்தை அழுத்திக்கொண்டான். அவனுடைய செல்போன் வெளியில் தூக்கி எறியப்படுகிறது ஒருவரை ஒருவர் சுட்டுக்கொள்கிறார்கள். மொத்தத்தில் தனக்குச் சற்றும் தொடர்பு இல்லாத ஒரு சதியில் சிக்கிக்கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். பிணமான டிரைவரின் கால் ஆக்ஸிலரேட்டரை அழுத்திக்கொண்டிருந்ததால், கார் தறிகெட்டுப் பாய்ந்தது. ஸ்டியரிங்கைத் திருப்ப இயலாமல் டிரைவரின் பாரம் தடுத்தது.

வெளியிலிருந்து துப்பாக்கிகள் ஓயாமல் சுட்டன. தோட்டாக்கள் காரின் பக்கவாட்டிலும் துளைத்தன. நொறுங்கிய கண்ணாடித் துண்டுகள் கிழித்து, அவன் முகத்தில் ரத்தக் கோடுகள் இறங்கின. ஒரு தோட்டா உராய்ந்து இடுப்பருகிலும் ரத்தம். இனி வேடிக்கை பார்ப்பதில் அர்த்தம் இல்லை. செந்தில் துணிந்தான். இறந்துபோன டிரைவரின் துப்பாக்கி யைக் கைப்பற்றினான். ஒரே எத்தில் விரையும் காரில் இருந்து அவனை வெளியில் உந்தித் தள்ளினான். பாய்ந்து டிரைவரின் சீட்டுக்கு மாறினான்.

ஸ்டியரிங்கைத் திருப்பி, காரை நிலைப்படுத்தி நிமிர்ந்தான். கண்ணெதிரில் சுடுபவர்களைப் பார்த்தான். அவனுக்கு முன்பின் அறிமுகம் இல்லாத இருவர்.

ஏற்கெனவே குழுமியிருந்த கே.வி.ஆனந்த், லிங்குசாமி, பாலாஜி சக்திவேல், காந்தி கிருஷ்ணா, வசந்த பாலன் போன்ற பெரிய பெரிய இயக்குநர்களை பாரி தொலைக்காட்சியில்தான் பார்த்திருந்தான்.

ஒருபுறம் சூர்யா, விஜய், விக்ரம், ஜீவா, சந்தானம், த்ரிஷா, ஸ்ரேயா, அமலா பால், எமி ஜாக்சன் என்று ஜொலிக்கும் நட்சத்திரப் பட்டாளம். இன்னொரு புறம், பி.சி.ஸ்ரீராம், எம்.எஸ். பிரபு, ரத்தினவேல், திரு போன்ற ஒளிப்பதிவு சூரர் கள். எல்லோரும் சூப்பர் ஸ்டாரைப் பார்த்ததும் மலர்ந்து பரபரப்பானார் கள்.

'யாரு கேமரா..?' என்று கேட்டார் சூப்பர் ஸ்டார் வேகமாக நடந்துகொண்டே.

'ரிச்சர்டு நாதன்! 'கோ' படம் பண்ணாரே...'

'ஓ...கோ! நல்லாப் பண்ணீங்க... நல்லாப் பண்ணீங்க..!' என்று அந்தக் கறுப்பு இளைஞனை ரஜினி தட்டிக்கொடுத்தார். விளக்கேற்றி, கேமரா வுக்குத் திருஷ்டி சுற்றி, தேங்காய் உடைத்ததும், ரஜினி கிளாப் போர்டுடன் தயாரானார்.

பாதையின் குறுக்கில் நின்றபடி, பூமணியும் நாகுவும் ஆளுக்கொரு துப்பாக்கியால் செந்திலை நோக்கிப் படபடவென்று சுட்டார்கள். தோட்டாக்கள் கண்ணாடிகளை உடைத்தன. காருக்குள் சரக் சரக் என்று நுழைந்து, எங்கெங்கோ தைத்தன. செந்தில் முன்பின் துப்பாக்கியைக் கையாண்டதுஇல்லை. ஆனால், உள்ளுணர்வு செலுத்த, தன்னிடம் இருந்த ரிவால்வரின் விசையை இழுத்தான். தோட்டா ராக்கெட் வேகத்தில் வெளியில் பாய்ந்தது. விரிந்த கண்களுடன் அதை மார்பில் எதிர்கொண்ட பூமணி பின்னால் தூக்கியெறியப்பட்டான்.

என்றோ ஒரு நாள், சினிமாவில் இப்படி ஒரு ஸ்டன்ட் காட்சியில் நடிக்க நேரும் என்று செந்தில் நினைத்திருக்கக்கூடும். ஆனால், நிஜத்தில் அது அரங்கேறிக்கொண்டிருந்தது. குறுக்கில் நின்று சுட்டுக்கொண்டிருந்தவனை 90 கி.மீ. வேகத்தில் செந்தில் மோதித் தூக்கினான். நாகு, காற்றில் பறந்து இறங்கி, தரையில் மோதினான். காரின் பின் டயர் அவன் மீது ஏறி இறங்கியது.

காட்சி பாரிக்கு விளக்கப்பட்டிருந்தது. படத்தில் அவன் ரவுடி. அது தெரியாத பணக்கார நாயகி அவன் மீது காதல் வயப்பட்டிருக்க... ஒரு கட்டத்தில், யாரையோ அசுரத்தனமாகத் தாக்கிவிட்டு, பற்களில் கத்தியுடன் அவன் திரும்பினால், எதிரில் காதலி.

சண்டையின் ஆவேசம் நழுவி, கண்களில் தர்மசங்கடத் திடுக்கிடல் காட்ட வேண்டும். பாரி நடித்தான். முதல் டேக்கே ஓ.கே. ஆனது.

ரஜினி பாரியை அணைத்து, 'சூப்பர்... சூப்பராப் பண்ணீங்க' என்று சொல்ல... பாரி மீண்டும் அவர் கால்களில் விழுந்தான்.

'ஒரே கவனத்தோட இருங்க... பெரிய நடிகனா வருவீங்க' என்று அணைத்து எழுப்பினார். பாரிக்கு அது தெய்வ வாக்கு. வாழ்நாளில் முதல்தடவையாக உணர்ச்சிவசப்பட்டதில், கண்களில் நீர் இறங்கியது.


செந்தில் காரிலிருந்து இறங்கினான். அவன் உடம்பில் உதறாத அங்குலமே இல்லை. சுற்றிலும் பார்த்தான். சுமார் 200 மீட்டர் விட்டத்துக்குள் சுடச்சுட மூன்று பிணங்கள். யார் பெயரும் அவனுக்குத் தெரியாது. துப்பாக்கிச் சத்தம் கேட்டு யாரும் ஓடிவருகிறார்களா என்று பார்த்தான். இல்லை.

முதலில் குணாவிடம் பேச ஒரு போன் வேண்டும். கீழே ரத்தமும் சதையுமாகச் சிதறிக்கிடந்த நாகுவிடம் குனிந்தான். குமட்டி யது. அவன் பாக்கெட்டில் கை விட்டான். கையெல்லாம் குருதி படிந்தது. நாகுவின் செல்போன் தோட்டாவால் துளைக்கப்பட்டுஇருந்தது. தூர எறிந்தான். தன்னிச்சையாகக் கறை படிந்த கையைக் கீழே கிடந்தவனின் சட்டையிலேயே துடைத்தான். உடனே தவறை உணர்ந்தான். முட்டாள்! உன்னுடைய கைரேகை இறந்துகிடப்பவனின் உடல்மீது பதிந்துவிட்டது. இந்த இடத்தைவிட்டு உடனடியாக விலகு.

தடக் தடக் தடக் என்று குதித்தது இதயம்.

செந்தில் காரில் பாய்ந்தான். தடுமாறி ரிவர்ஸ் எடுத்தான். தலையைச் சுற்றியது. மயக்கம் இமைகளை இழுத்தது. ஆனால், கியர் மாற்றி காரை வெகுவேகமாகச் செலுத்தினான்.

- தடதடக்கும்...



செந்திலின் இடுப்புக் காயத்திலிருந்து ரத்தம் பொங்கிப் பொங்கி வெளியேறிக்கொண்டுஇருந்தது. களைப்பும், அச்சமும், எதிர்பாராத அதிர்ச்சியும் சேர்ந்து சுழற்றியடித்தன. இமைகள் தாமாக மூட, பக்கவாட்டில் சாய்ந் தான்.

கார் கட்டுப்பாடின்றி ஓடியது. மண் சாலையின் ஓரத்தில் இருந்த ஒரு மைல் கல்லில் சக்கரம் மோதித் தூக்கி, ஒருக்களித்துக் கவிழ்ந்தது. சற்று தூரம் தேய்த்துக்கொண்டே போய்... புகை சூழ நின்றது. அந்த அதிர்ச்சியில் செந்தில் விழித்தான். கவிழ்ந்துகிடக்கும் காருக்குள் சிறைப்பட்டிருக்கிறோம் என்பது புரிந்ததும், சக்தியை எல்லாம் திரட்டி, நசுங்கிய கதவின் ஜன்னல் வழியே தவழ்ந்து வெளியே வந்தான். ஏதோ ஒரு கார் விரைந்து வரும் ஒலி கேட்டது. அங்கிருந்து விலகிச் சென்றுவிட வேண்டும் என்று தடுமாறி நடந்தான். மைதானத்தில் ஓரமாக இருந்த ஒற்றைத் தென்னை மரத்தை நெருங்கியபோது, மயக்கம் தாக்கியது. உடல் கீழே சரிந்தது.

ரஜினியை வழியனுப்பிவிட்டு, டைரக்டர் ஷங்கர் பாரியின் கைகளைக் குலுக்கினார்.

'இன்னும் நாம பண்ணாதது என்னவோ இருக்குன்னு தாகத்தோட இருக்கிறதாலதான் சூப்பர் ஸ்டார், கமல்ஹாசன் இவங்கல்லாம் இன்னும் ஃபீல்டுல ரூல் பண்ணிட்டு இருக்காங்க. தொடர்ந்து நல்லாப் பண்ணு. உன் எதிர்காலம் உன் கையிலதான் இருக்கு.'

'சார், என் வாழ்க்கையே புதுசா மாறியிருக்கு. உங்களுக்குப் பெருமை யைத் தேடித் தருவேன்.'

'அப்புறம், மீடியாவுல சிம்பிளா நாலு வார்த்தை சொல்லிட்டு, விலகிடு. படம் ரிலீஸாகும்போது, பேட்டி எல்லாம் குடுத்துக்கலாம்..'

'சரி சார்...'

சூர்யா, விக்ரம், அரவிந்த்சாமி என்று யார் யாரோ கைகொடுத்து வாழ்த்தினார்கள். ஜோசப் அதே படத்தில் அறிமுகமாகும் நாயகியை பாரிக்கு அறிமுகம் செய்தான். கயல்விழி எல்லா அளவுகளிலும் கச்சிதமாக இருந்தாள். ஆனால், முதலில் கவர்ந்து இழுத்தது, அவளுடைய பெரிய, கரிய, வட்ட விழிகள். அவள் கைகுலுக்கியபோது கூச்சமாக இருந்தது.

'பாரி, நாளைக்கு அவுட்டோர் போறோம்... முப்பது நாள் ஷெட்யூல். குணா உங்களுக்கு புரொகிராம் சொல்வார்...' என்றான் ஜோசப்.

திடீரென்று தோளில் கை தட்டியது.

'என்னை ஞாபகம் இருக்கா..?'

'தேவி... நீங்க..?'

'நானும் சினிமாவுல இருக்கிறவதான்... தொழில்னு சொன்னீங்களே... இதானா?'



மையமாகப் புன்னகைத்தான் பாரி.

'சூப்பர் ஸ்டார்கிட்டயே ஆசீர்வாதம் வாங்கிட்டீங்க. பெரிய ஆளானதும், மறந்துற மாட்டீங்களே?'

'வெய்ட் பண்ணுங்க. சேர்ந்துபோலாம்...' என்று அவளிடம் சொல்லிவிட்டு, காத்திருந்த மைக்குகளை நோக்கி பாரி நடந்தான்.

செந்தில் கண்களை மறுபடியும் விழித்தபோது ஒரு காரின் பின் இருக்கையில் கிடப்பதை உணர்ந்தான். இரண்டு வலுவான கைகள் அவனை அழுத்திப் பிடித்திருந்தன. எழுந்திருக்க முயற்சி செய்தான். 'சுரீர்...' என்று வலி உச்சந்தலை வரை தாக்கியது.

'அசையாத...' என்று முரட்டுத்தனமான குரல் கேட்டது. கண்கள் தாமாக மறுபடி மூடின.

மயக்கமாயிருந்த அம்மாவை ஸ்ட்ரெச்சரில் வைத்துத் தள்ளியவர்களுடன் தீபா நடந்தாள்.

'பிளேட் வெச்சுத் தெச்சிருக்கேன்... ரெண்டு நாள் இங்கயே இருக்கணும்...' என்றார் டாக்டர் தன் முகத்திரையை இறக்கி. வார்டில் அம்மாவைக் கட்டிலுக்கு மாற்றும் வரை, தவிப்புடன் இருந் தாள் தீபா.

'இந்நேரம் பூஜை முடிந்திருக்குமா? ரஜினி கிளாப் அடித்து முதல் ஷாட் எடுக்கப்பட்டுஇருக்குமா? செந்திலின் புதிய பயணம் ஆரம்ப மாகியிருக்குமா?'

'தண்ணி கேட்டா கொடுக்காதீங்க. சும்மாப் பஞ்சுல நனைச்சு உதட்டுல தடவுங்க.'

'சிஸ்டர்... இங்க டி.வி. எங்கே இருக்கு?'

மலையாள நர்ஸ் மோகனமாகப் புன்னகைத்தாள்.

'ஓபி வார்டுல இருக்கு... 'யட்சன்' பூஜை பாக்கணுமா? எல்லாம் அதான் பாத்துட்டிருக்காங்க. போங்க... அம்மா கண்ணைத் தொறக்க மூணு மணி நேரம் ஆகும்.'

தீபா வெளியே விரைந்தாள். ஹாலில் காத்திருந்தவர்கள் எல்லோருடைய கவனமும் தொலைக்காட்சிப் பெட்டியில்தான் இருந்தது. புதிய நாயகனும் நாயகியும் இயக்குநரால் அறிமுகம் செய்யப்படும் கட்டம்.

'கெடைக்க முடியாத அரிய வாய்ப்பு எனக்குக் கிடைச்சிருக்கு... அதை நான் முழுமையாப் பயன்படுத்திப்பேன்...' என்று சூழ்ந்திருந்த மைக்குகளில் பேசிக்கொண்டிருந்தவனைப் பார்த்ததும் தீபா அதிர்ந்தாள்.

இவன் செந்தில் இல்லை. செந்தில் எங்கே? அவசரமாக போனை எடுத்து டயல் செய்தாள். 'வாடிக்கையாளர் தொடர்பு எல்லைக்கு வெளியே உள்ளார்' என்றே மறுபடி மறுபடி பதில் வந்தது. கடைசி நிமிடத்தில் செந்திலை மாற்றிவிட்டு வேறு யாரையோ போட்டுவிட்டார் களா? சினிமாவில் இது சகஜம் என்று அவனுக்கு ஆறுதலாகச் சொல்லலாம் என்றால், எங்கே போய்விட்டான் அவன்?

ஐயோ, மனம் உடைந்து விபரீதமான முடிவு ஏதாவது எடுத்துவிட்டானா? உடனே சென்னைக்கு ஓடி அவனை மடியில் போட்டுக்கொள்ள வேண்டும்போல் இருந்தது. இந்த நேரம் பார்த்து அம்மா கையை முறித்துக்கொள்ள வேண்டுமா என்று அநாவசியமாக அவள் மீது கோபம் புரண்டது.

செய்வதறியாது தீபா தவித்தாள்.

- தடதடக்கும்...

# சுபா யட்சன் எக்ஸ்பிரஸ் தொடர் 19

ஓவியம்: ஸ்யாம்

சம்பவம் நடந்த இடத்தை போலீஸ் வாகனங்கள் மொய்த்திருந்தன. இன்ஸ்பெக்டர் துரை யரசன் சரமாரியாக உத்தரவிட் டுக்கொண்டிருந்தார். இறந்து கிடந்த மூவரும், கவிழ்ந்துகிடந்த காரும் வெவ்வேறு கோணங்களில் டிஜிட்டல் பிம்பங்களாக போலீஸ் கேமராவில் சிறைபட... தடயவியல் நிபுணர்கள் சுறுசுறுப்பாக இயங் கிக்கொண்டிருந்தனர்.

"இங்க ஒரு காரு கவுந்துகெடக்கு... அங்க ஒரு காரு எந்தச் சேதமும் இல்லாம நிக்குது... ரெண்டு வண்டிக்கும் ஓனர் யாரு? எங்கேர்ந்து வந்தாங்க? விவரம் விசாரிங்க."

கவிழ்ந்துகிடந்த காருக்குள் இருந்து கான்ஸ்டபிள் ஒருவர் மெள்ள வெளியே வந்தார்.

"சார், உள்ள கிடந்துச்சு..." என்று ஒரு கைக்குட்டையைப் பிரித்துக் காட்ட, ரத்தம் தோய்ந்த ஒரு ரிவால்வர். மெருகு தேய்ந்த ஒரு பர்ஸ். துணியோடு வாங்கினார் துரையரசன். தன் விரல் ரேகைகள் படாமல் பர்ஸைக் கவர்ந்து, திறந்து பார்த்தார். 256 ரூபாய். ஒரு பெண்ணின் புகைப் படம். புகைப்படத்தை உருவித் திருப்பினார். 'செந்திலுக்கு ஆயிரம் முத்தங்களுடன்... தீபா' என்று அழகான கையெழுத்து.

"செந்தில் யாரு? செத்துக்கிடக்கறவன்ல ஒருத்தனா..? இல்ல, சாகடிச்சுட்டு ஓடினவனா..? இந்த தீபா யாருன்னு கண்டுபிடிங்க."

மேற்கு மாம்பலம். ஆட்டோவிலிருந்து அவர்கள் இறங்கியபோதே, வாசல் கதவைத் திறந்தாள் சாவித்திரி. அவள் முகத்தில் உண்மையான சந்தோஷம்.

"டேய் பாரி... டி.வி-ல பார்த்தேன். ஷங்கர் தயாரிப்புல படம். சொல்லாமலே வெச்சிருந்து பெரிய ஆளாயிட்ட?"

"நடக்கற வரைக்கும் எனக்கே தெரியாதுக்கா..." என்றபடி உள்ளே நுழைந்தான் பாரி. "எனக்குன்னு யாரும் இல்ல... ஆசீர்வாதம் பண்ணுக்கா..." என்று தரையில் நெற்றிபட விழுந்தான்.

சாவித்திரி பதறி அவனை எழுப்பி னாள். "நல்லா வருவடா..." என்றாள் கண்கள் பனிக்க.

"இன்னிக்கெல்லாம் இதே பொழப்பு இவருக்கு. ரஜினி திரும்பினா, நிமிர்ந்தா, கால்ல விழுந்துடு வாரு இவரு..." என்று நக்கலடித்தாள் தேவி.



"உக்காரு, காபி கொண்டுவரேன்..."
சாவித்திரியும் தேவியும் உள்ளே போய்விட, பாரி ஜன்னலை அண்டி, தெருமுனையில் இருந்த உடற்பயிற்சி மையத்தை நோட்டமிட்டான். நிறையத் தலைகள் தெரிந்தன. அங்கு ஒரு பரபரப்பு தொற்றியிருந்தது. நாகுவைக் காணவில்லை. நாகுவின் தம்பி லோகு, தன் தோழர்களுடன் மும்முரமாக எதையோ விவாதித்துக்கொண்டுஇருப்பது தெரிந்தது.
'செந்தில் இப்போது எங்கே இருக்கிறான்? ஆதிமூலத்திடம் சிக்கிக்கொண்டானா? அல்லது தப்பித்துவிட்டானா? ஒருவேளை செந்தில்திரும்பி விட்டால், டைரக்டர் மனம் மாறிவிடுமா?'
ஜோசப், டைரக்டர் ஷங்கரின் முன் பணிவுடன் நின்றான்.
"சார், செந்திலை கான்டாக்ட் பண்ணவே முடியல. ஏதாவது காரணம் சொல்லிட்டு, நாளைக்கு வந்தா என்ன செய்யறது?"
"பாரி நல்லாத்தான் பண்றான். மீடியாவுக்கெல் லாம் பப்ளிசிட்டி குடுத்தாச்சு. குழப்பம் வேண் டாம் ஜோசப். அந்தப் பையன் அப்படி வந்தா, அடுத்த படத்துல வாய்ப்பு தர்றோம்னு சொல்லி அனுப்பிரு" என்றார் ஷங்கர் உறுதியான குரலில்.
"என்னடா ஆச்சு..?" என்றார் ஆதிமூலம், கரகரத்த குரலில். ஐந்தடி உயரம். மடித்துக் கட்டிய வேட்டி. கையில்லாத பனியன். கழுத்தில் அடர்த்தியான தங்கச் சங்கிலி. மூக்குக்குக் கீழ் ஆரம்பித்து, கன்னத்தில் பெரும் பகுதியை ஆக்கிரமித்த வீரப்பன் மீசை.
"நாகுவைப் போட்டுத் தள்ளிட்டாங்கண்ணா!" என்றான் எதிரில் மரியாதையுடன் நின்ற லோகு. அவனது கண்கள் ஆத்திரத்தாலும், அவசரமாக உள்ளே இறக்கிய சரக்காலும் சிவந்திருந்தன.
"ஒரே கேரா இருக்குதுண்ணா... கைலாசம் நம்ப தலைக்குக் குறிவெச்சிருக்கான். அவனையே முடிச்சிட்டு வரேன்னுதான் அண்ணன் காலைல பூமணியோட புறப்பட்டுப் போனாரு. அந்தத் துரோகிதான் கைலாசம் குரூப்கிட்ட எங்க அண் ணனை வித்திருப்பான். அவனையும் அவங்க விட்டுவைக்கல. எங்க அண்ணனைக் கொன்னவங்களைச் சும்மா விடக் கூடாதுண்ணா!"
ஆதிமூலம் பக்கத்தில் கையை நீட்டினார். ஒரு செல்போன் வந்தது. டயல் செய்தார்.
"என்ன எத்திராஜ், என்ன செய்யுது உங்க டிபார்ட்மென்ட்? என் தளபதியைப் போட்டுத் தள்ளியிருக்காங்க. யாரு, என்னன்னு கண்டுபிடிச்சீங்களா, இல்லையா..?"
மறுமுனையில் குரல் ரகசியமாக ஒலித்தது.
"விசாரிச்சுட்டு இருக்கோம். குவாலிஸ் காரை ஓட்டிவந்தவன் பேரு மாரிமுத்து. பூமணியோட ஆளு. டிராவல்ஸுக்கு ஓட்டறவன். இன்னொரு கார் நாகு பேர்லதான் ரெஜிஸ்டர் ஆயிருக்கு..."
அவன் அங்க கோயிலுக்கு வந்தான்னு சொல்லிக் கலாம். எதிர் பார்ட்டி யாரு? கைலாசம் குரூப் ஆளா?"
"நாகுவோட சட்டை, அவனைக் கொன்ற துப்பாக்கி, குவாலிஸ் காரு, ஒரு பர்ஸ் எல்லாத் திலேயும் ஒரு கைரேகை தெளிவா கிடைச்சிருக்கு. செக் பண்ணிட்டிருக்கோம். வந்தவன் பேரு செந்திலு. திருவல்லிக்கேணி மேன்ஷன்ல தங்கிஇருக்கான்னு விவரம் கிடைச்சிருக்கு. இன்ஸ்பெக்டர் விசாரிக்கப் போயிருக்காரு. முழு விவரமும் கிடைச்சஉடனே நானே போன் பண்றேண்ணே!'
"அந்த செந்தில் எனக்கு உயிரோட வேணும், ஞாபகம் வெச்சுக்க!" என்று உறுமினார் ஆதிமூலம்.

- தடதடக்கும்

சுபா

ஓவியம்: ஸ்யாம்

# யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் 20

"எவனோ பாரினு சினிமால நடிக்கிற பயலைக் கூட்டிட்டு வந்து பூமணி என்னை ஏமாத்திட்டான். பூமணி டபிள் க்ராஸ் பண்றான்னு சந்தேகம் வந்து, காரை ஃபாலோ பண்ணோம். ஒளிஞ்சிருந்து பார்த்தா, திடீர்னு ஒருத்தனை ஒருத்தன் சுட்டுக்கிறானுங்க. ஆனா, இந்தப் பய அசரலியே... பூமணியைப் போட்டுத்தள்ளிட்டான். நாகுவையும் கார் ஏத்திக் கொன்னுட்டான். பாரியா இருக்கும்னுதான் கிட்ட போய்ப் பார்த்தேன். வேற பையன். விசாரிப்போம்னு தூக்கிட்டு வந்துட்டேன்' என்றான் கிருபா மன்னிப்பு கோரும் குரலில்.

'நல்லது பண்ண...' என்றார் கைலாசம். தேக்குக் கதவுபோல் நல்ல உயரம், அகலம்.

'எங்க அவன்?'

'நம்ம எடத்துலதான் வெச்சிருக்கேன். நம்ம டாக்டர்தான் பாத்திட்டிருக்காரு!'

இனிப்பை ஒரு விள்ளல் எடுத்து பாரி வாயில் இட்டான்.

'இனிமே உன்னைப் பாக்க நெறையப் பேரு வருவாங்க... மேன்ஷன் ரூம் சரிப்படாது. ஒரு வீடு எடுத்துத் தங்கிக்கப்பா' என்றாள் சாவித்திரி.

'சென்னை எனக்குப் புதுசுக்கா.'

'தேவி, அகத்தியர் தெருவுல ஏதோ வீடு காலியாயிருக்குன்னு பேப்பர் போடற பையன் சொல்லல..? அந்த வீட்டை இவனுக்குக் காட்டேன்.'

'சரிம்மா...' என்று தேவி சந்தோஷமாகப் புறப்பட்டாள்.

படபடவென்று சுட்டுக்கொண்டிருக்கும் இயந்திரத் துப்பாக்கிகள், 'க்ரீய்ய்ச்...' என்று டயர் தேயத் திரும்பும் கார்கள், 'ஸ்டார்ட் கேமரா...' என்று ஒரு குரல், 'அவனை விடாத... பிடி...' என்று துரத்தும் காலடிகள்... என்று கதம்பமாக இரைச்சல்கள் செந்திலின் மண்டைக்குள் ஒலித்துக்கொண்டு இருந்தன. மயக்கத்திலிருந்து வெளியே வர முயன்று, அவனுடைய மூளை குழம்பித் தவித்தது. யாரோ கன்னத்தில் பட்பட்டென்று தட்ட, கனத்த இமைகளைச் சில மில்லிமீட்டர்கள் திறந்தான்.

தன் மீது குனிந்திருந்த நபரைப் பார்த்தான். கட்டம் போட்ட வெள்ளைச் சட்டை. உருண்டையான முகம். முகத்தில் தழைத்திருந்த பச்சை முகமூடி.

'உன் பேரென்னப்பா..?'



'செந்தில்...' என்று பதிலை முணுமுணுப்பதற்குள் கண்கள் தாமாக மூடிக்கொண்டன.

'உடம்பு பூராக் காயம்... நிறைய ரத்தம் போயிடுச்சு. இடுப்புல எட்டுத் தையல். ரெண்டு முழங்காலுக்குக் கீழயும் ஆறேழு தையல் போட்டிருக்கேன். நல்லவேளை எலும்பு எதுவும் முறியலை" என்றார் டாக்டர் கிளவுஸ்களைக் கழற்றிக்கொண்டே. கைலாசம் ஓரடி முன்னால் வந்து படுக்கையில்கிடந்த செந்திலைப் பார்த்தார்.

'கண்ணு அசையுது பாரு... கிருபா...'
செந்தில் இமைகளை உயர்த்தி, விழியை மட்டும் உருட்டிப் பார்த்தான். டாக்டருக்குப் பின்னால் நின்றிருந்தவன் ஒல்லியாக இருந்தான்.
'யாருடா நீ..? பூமணியோட ஆளா?' என்று மிரட்டலாகக் கேட்டான்.
'கிருபா... அவனை அதட்டாத!' என்று சொல் லியபடி இன்னொரு தலை அவன் பார்வைக்குள் வந்தது. கறுப்பான முகம். நிறைய முரட்டுத் தனத்துடன் இருந்த அவருடைய குரலில் பரிவு இருந்தது.
'தம்பி, என் பேரு கைலாசம்! கேள்விப்பட்டுஇருப்ப... ரொம்ப மோசமானவன். ஆதிமூலத் தோட தளபதி நாகு. உன் கையால அவன் செத் திருக்கான். அதனால நீ எனக்கு வேண்டப்பட்ட வன். எங்க எடத்துல நீ பத்திரமா இருக்க... பயப் படாம உண்மைய மட்டும் சொல்லு... பூமணி யோட திட்டம் என்ன?'
செந்தில் கண்களில் நீர் திரண்டு வழிந்தது. நாக்கு நுனியால் உதடுகளை ஈரப்படுத்திக்கொண்டான்.
'பூமணி யாரு? நாகு யாரு? நீங்க யாரு..? எனக்கு ஒண்ணும் புரியல...' என்று சொல்வ தற்குள் தொண்டையே உலர்ந்துபோயிற்று. 'யட்சன் பூஜைக்குப் போக வேண்டியவன் நான்...'
'நாடகம் போடறான்... தட்டிக்கேட்டாதான் உண்மையைக் கக்குவான்.'
'இல்ல கிருபா... தட்டினா செத்துருவான்!' என்றார் டாக்டர்.
என்னவோ செய்துகொள்ளுங்கள் என்பதுபோல் களைப்பில் செந்திலின் கண்கள் மறுபடி மூடிக்கொண்டன.
தேவியுடன் நடக்கையில் பாரி யின் பார்வை தெருமுனையை மேய்ந்தது. கை இல்லாத நாற்காலி ஒன்றில் நாகுவின் புகைப்படம் சாய்த்துவைக்கப்பட்டிருந்தது. பெரிய மாலைகள் போட்டு, மெழுகுவத்தி ஏற்றிவைக்கப்பட்டிருந்தது. ஆக, நாகு செத்துவிட்டானா?
நாகுவின் தம்பி லோகு பக்கத்தில் இருந்தவனிடம் ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்தான். 'கைலாசம் குரூப்போட வேலை. எங்க அண்ணனைப் போட்டுத் தள்ள, புதுப் பையனை அனுப்பியிருக்காங்க. அவனை இதே கையால 30 நாளைக்குள்ள இந்த மண்ணுல சாய்க்கல, என் பேரு லோகு இல்ல!'
சுற்றியிருந்த நண்பர்கள் இந்த வேலைக்காகவே வளர்க்கப்பட்டது போன்ற வலுவான உடல்களுடன், அவன் சொல்வதைக் கேட்கத் தயாராக இருந்தார்கள்.
அன்றைக்கு மட்டும் தேவியைச் சந்திக்கவில்லையென்றால், நாகுவைத் தீர்த்துக்கட்டிவிட்டு, இன்றைக்கு இவர்களால் தேடப்படுபவன் தானாகத்தான் இருப்போம் என்று பாரிக்குத் தோன்றியது.
இன்றைக்கோ அவன் நடிகன்!
'தேங்க்ஸ் தேவி' என்றான்.
திருவல்லிக்கேணி.
போலீஸ் வாகனம் நிழலில் நின்றிருந்தது. மேன்ஷன் மேனேஜருக்கு எதிரில் நின்றிருந்தார் இன்ஸ்பெக்டர் துரைஅரசன்.
'இனிமே காத்திருக்க முடியாது. செந்தில் ரூமைத் திறந்து விடுங்க...' என்றார் உத்தரவிடும் குரலில்.

- தடதடக்கும்

சுபா
ஓவியம்: ஸ்யாம்

# யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் 21

செந்திலின் அறை நேர்த்தியாக இருந்தது. கட்டிலுக்கு அடியில் செருகப்பட்டிருந்த சிறு பயணப் பெட்டியைத் திறந்தார் இன்ஸ் பெக்டர் துரைஅரசன். துவைத்து, மடித்து ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்த துணி வகைகளுக்குக் கீழே, ஒரு டைரி கிடைத்தது. புரட்டினார்.
'கெடைச்சிருச்சய்யா! அந்த தீபாவோட போன் நம்பர், இவனோட வீட்டு அட்ரஸ்... எல்லாம் இதில் இருக்கு'' என்று எழுந்தார் துரை அரசன்.
ஒற்றைப் படுக்கையறை. அகலமான ஹால். குட்டியான சமையலறை. வெளிச்சமும் காற்றோட்டமும் தரும் ஜன்னல்கள். அந்தச் சிறிய போர்ஷனைப் பாரிக்குப் பிடித்திருந்தது. மாடி போர்ஷனில் வீட்டுச் சொந்தக்காரர். ஓய்வூதியத்தில், மனைவியுடன் நிம்மதியாக வாழ்பவர்.
''பசங்க ரெண்டு பேரும் அமெரிக்கால இருக்காங்க. தேவி சொன்னதுக்காகத்தான் தரேன். கூட்டம் சேர்க்கிறது, தண்ணியடிக்கிறது, கலாட்டாப் பண்றதெல்லாம் இல்லாமப் பார்த்துக்க.''
''அதெல்லாம் பாரிக்குத் தெரியவே தெரியாது'' என்றாள் தேவி.
ஒரு மாதத்துக்கு முன்பு இப்படி ஒரு அழகான பெண் தனக்காக வீடு பிடித்துக் கொடுப்பாள் என்று, பாரி கற்பனைகூடச் செய்தது இல்லை. கனவுக்குள் இருப்பதைப் போல இருந்தது.
முன்பணத்துடன் வருவதாகச் சொல்லி விட்டு, தேவியுடன் வெளியே வந்தான். தெரு முனையில் நாகுவுக்காகக் கூடியிருந்தவர் களைத் திரும்பிப் பார்த்த பாரியின் கையைப் பற்றி, தேவி தன் பக்கம் இழுத்தாள்.
''அங்கே பாக்காதே...''
அவள் தானாக எடுத்துக்கொண்ட உரிமை, பாரிக்குப் பிடித்திருந்தது.



"செந்தில் தப்பானவன் இல்ல சார். சினிமாதான் அவன் கனவு. நான் எடுத்த போட்டோவைத்தான் ஷங்கர் சார் ஆபீஸ்ல குடுத்தான்..." என்றான் கோபிசந்த்.

"உங்களுக்கு செந்திலை எத்தனை நாளாத் தெரியும்?"

"இந்த மேன்ஷனுக்கு அவன் வந்ததுலேர்ந்து நல்ல பழக்கம் சார்."

"24 வயசு அவனுக்கு. மூணு, நாலு மாசம் பழகினதைவெச்சு ஒருத்தனை எடை போடாதீங்க. ஒருத்தனை நெத்திப் பொட்டுல சுட்டிருக் கான். எவ்ளோ பயிற்சி இருக்கணும்?"

அதற்கு மேல் செந்திலுக்கு ஆதரவாகப் பேசி, தன் நிலையை ஆபத்துக்கு உள்ளாக்கிக்கொள்ள கோபிசந்துக்கு விருப்பம் இல்லை.

'உடனடியாகத் தொடர்புகொள்...' என்று 100-வது முறையாக மெசேஜ் செய்தாள் தீபா. அதுவும் வீணானது.

அம்மாவை விட்டு நகர முடியாமல் தவித்தாள். நிழலாடியது. நர்ஸ்.

"தீபா உங்களைத் தேடி போலீஸ் வந்திருக்கு..."

அதிர்ந்தாள். பரபரப்பாக வெளியே வந்தாள். காத்திருந்த சப் இன்ஸ்பெக்டர் புன்சிரிப்பு இல்லாமல் பேசினார்.

"சென்னை இன்ஸ்பெக்டர் உங்ககிட்ட செந்தில் பத்தி விசாரிக்கணும்னு சொல்றார்..."

"செந்திலுக்கு என்ன ஆச்சு..?" என்றாள் தொண்டை அடைக்க.

"செந்திலுக்கு எதுவும் ஆகலை. மூணு பேரைக் கொலை பண்ணிட்டு, அந்த ஆளுதான் தலைமறைவாயிட்டாரு."

அதிர்ச்சியில் நிலைகுலைந்த தீபா, ஆதரவுக் காகச் சுவரைப் பற்றிக்கொண்டாள். சப் இன்ஸ் பெக்டர் தன் போனில் டயல் செய்து, "சார், தீபா சார்..." என்று அவளிடம் நீட்டினார்.

"தீபா, செந்தில் எங்க..?" என்றார் மறுமுனை துரை அரசன்.
"நானும் அவன் போனுக்காகத்தான் தவிப்போட காத்திருக்கேன்."
"பொய் சொல்லலியே?"
"சத்தியம் சார். செந்தில் கொலை எல்லாம் பண்ண மாட்டான்."
"அழாதீங்க... போலீஸுக்கு
ஒத்துழைப்பு கொடுங்க."
தீபா மெள்ள அங்கு இருந்த நாற்காலியில் சரிந்தாள்.

பாரி தெருமுனையில் நின்றிருந்த போலீஸ் வாகனத்தைப் பார்த்தான். மேன்ஷன் வாசலில் கான்ஸ்டபிள் சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தார்.
பாரி கற்றுக்கொண்ட பாடங்களில் ஒன்று, 'காவல் துறையைக் கண்டு பயப்படக் கூடாது' என்பது. விரல்கள் நடுங்கி, வார்த்தைகள் குழறி, முகம் வியர்த்தால், செய்யாத குற்றத்துக்குக் கூடப் பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள்.
பல சந்தர்ப்பங்களில் காவலர்களை நேருக்கு நேர் சந்தித்து நெருக்கமாகக் கடந்துபோயிருக்கிறான். கான்ஸ்டபிளைக் கடக்கும்போது, இயல் பான தோர் ஆச்சர்யத்தை மட்டும் முகத்தில் காட்டிவிட்டு பாரி நுழைந்தான்.
"பாரி... உன்கிட்ட பேசணும்னு இன்ஸ்பெக்டர் வெயிட் பண்றார்..." என்றார் மேனேஜர்.

கிருபாவின் வீடு இருந்த பகுதி, கோட்டூர்புரத்தில் கால்வாயை ஒட்டிக் கிளை பிரியும் ஒரு அம்மன் கோயில் வீதி. வழக்கமான இடத்தில் காரை நிறுத்திவிட்டு, மகனுக்காக வாங்கி யிருந்த ஜெம்ஸ் பாக்கெட்டைக் கையில் எடுத்துக்கொண்டு கிருபா தன் வீடு நோக்கி நடந்தான்.
ஒன்றிரண்டு வீடுகளில் கிரிக்கெட் மேட்ச்சின் இரைச்சல். மற்றபடி சந்தடி இல்லை. பத்தடிகூட நடந்திருக்க மாட்டான். சட்சட்டென்று நிழலில் இருந்து நான்கு பேர் வெளிப்பட்டனர். நால்வரும் கண்களை மட்டும்விட்டு, முகத்தைத் துணியால் மூடியிருந்தனர்.
உடனே, கிருபாவின் மூளை உஷார் சிக்னல் அனுப்ப, இடுப்பிலிருந்த துப்பாக்கியை உருவினான். ஆனால், முதல் வெட்டு கையில் விழுந்து துப்பாக்கி எகிறியது. தொடர்ந்து கத்திகள், அரிவாள்கள் சரமாரியாக அவனை வெட்டின. தீனமாகக் குரல் கொடுத்தபடி, தார் ரோட்டில் ரத்தம் பாய, கிருபா மயங்கி விழுந்தான்.
வந்தவர்கள் சடுதியில் இருளில் மறைந்தார்கள்.

- தடதடக்கும்


# யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் 22

பாரியின் அறை முழுவதும் நிறைந்திருந்த ரஜினிகாந்தின் புகைப் படங்களைப் பார்த்து, இன்ஸ்பெக்டர் துரை அரசன் வியந்துபோனார்.
"ரஜினிக்கு இவ்வளவு பெரிய விசிறியா..?' என்றார்.
"விசிறி இல்ல... வெறியன்! அதனாலதான் நடிக்க வந்தேன். அவர் கலந்துக்கிற பட பூஜைக்குப் போகணும்னு கார் வரச் சொல்லியிருந்தேன். போன இடத்துல ஜாக்பாட் மாதிரி நடிக்கிறதுக்கு வாய்ப்பு கிடைச்சது. கார் மாறி ஏறிப் போனது எனக்குத் தெரியாது. செந்தில் நடிக்கிறதுக்காக செலெக்ட் ஆகியிருந்ததும் எனக்குத் தெரியாது. செந்திலோட எனக்குப் பழக்கமில்ல... அவர் ஏன் போரூர் போனாருன்னும் தெரியாது.'
துரை அரசனின் கேள்விகளுக்கு அயராமல் அவர் கண்களைப் பார்த்து பாரி பதில் அளித்தான்.
'விசாரணைக்குத் தேவைப்பட்டா, மறுபடியும் கூப்பிடுவேன்...' என்றபோது, ஒரு காகிதத்தில் எண்ணை எழுதி நீட்டினான்.
'சார், முப்பது நாளைக்கு அவுட்டோர் ஷூட்டிங்ல இருப்பேன். அவசியம்னா, இந்த நம்பருக்குக் கால் பண்ணுங்க. இந்த ரூமைக் காலி பண்ணிட்டு, மேற்கு மாம்பலத்துல ஒரு வீட்டுக்குக் குடிபோறேன். அந்த அட்ரஸும் தரேன்.'
எந்தத் தயக்கமும் இல்லாமல், கேட்காத விவரங்களைக்கூடக் கொடுத்த பாரியின் மீது இன்ஸ்பெக்டருக்கு அந்தக் கணமே சந்தேகம் அற்றுப்போனது. கிருபா வெட்டுப்பட்டதுபற்றி கோட்டூர்புரத்திலிருந்து வந்த போன் அவரை அங்கிருந்து புறப்படவைத்தது.

ஆதிமூலம் கோபமாகக் கத்தினார். 'என்ன வேலைடா பண்ணிட்டு வந்தீங்க? இப்ப எதுக்கு கிருபாவைப் போட்டுத்தள்ளின?'
எதிரில் கைகளைக் கட்டி, தலைகுனிந்து நின்றான் லோகு.
'மனசு ஆறலண்ணா. உங்க தளபதிய கைலாசம் சாய்ச்சா... அவன் தளபதிய நான் வெட்ட வேணாமா?'
'டேய், நமக்கு ஆதரவாக் காயை நகர்த்தறதுக்கு போலீஸ்கிட்ட பேசிட்டு இருக்கேன். இப்ப அவசரப்பட்டா, எல்லாம் கெட்டுடும். கொஞ்ச நாளைக்கு எல்லாத்தையும் என்கிட்ட விட்டுரு. புரியுதா?'
'சரிண்ணா!' என்றான் லோகு மனசில்லாமல்.

தனக்கு எதிரில் இருந்த சிற்றுண்டியை வெறித்துப் பார்த்தான் செந்தில்.
'தமிழ் சினிமால பேர் வாங்கணும்னு நினைச்சேன். முடியலையா, ஊருக்கே போய் சைக்கிள் கடையில கணக்காவது எழுதறேன்... எனக்கு இந்த வெட்டுக் குத்தெல்லாம் பிடிக்கல.. வெளிய விடுங்க... நான் போகணும்.'
'எங்கடா போவ..?' என்றார் கைலாசம் சற்றே கோபமாக. 'நேத்து ராத்திரி ஆதிமூலம் ஆளுங்க ஆத்திரத்துல கிருபாவைப் போட்டுத்தள்ளிட்டாங்க. இப்ப வெளிய காலைவெச்சா, உன் கழுத்தைச் சீவிட்டுதான் மறு வேலை பார்ப்பாங்க. இன்னொரு பக்கம், போலீஸ் உன்னைக் கொத்திட்டுப் போகக் கழுகு மாதிரி காத்துட்டு இருக்காங்க. சேனல் சேனலா உன் பேர் நாறிட்டு இருக்கு.'
'போலீஸ்கிட்ட நடந்ததைச் சொல்றேன்...'
'நீ நாகு மேல காரை ஏத்திட்டு வந்ததைச் சொல்லுவியா? ஆதிமூலம் பேச்சைக் கேட்டுக்கிட்டு, உன்னைத் தூக்கி உள்ள போட்டு, என்கவுன்டர்னு சொல்லிக் காலி பண்ணிடுவாங்க.'
'போனாவது குடுங்க... என் தீபாகிட்ட பேசணும்.'
'முட்டாளாடா நீ..? ஏற்கெனவே உன்னோட சம்பந்தப்பட்டவங்க அத்தனை பேரையும் போலீஸ் விசாரிச்சுட்டு இருக்காங்க. அவங்க போனெல்லாம் இந்நேரம் ஒட்டுக் கேட்டுட்டு இருப்பாங்க. நீ தீபாவுக்கு போன் பண்ணாலோ, உங்க அம்மா, அப்பாகிட்ட பேசினாலோ, அவங்களைப் போட்டுக் குடாய்ஞ்சுடுவாங்க... அவங்க நிம்மதி போயிடும்.'
'ஐயோ! நான் என்ன பண்ணுவேன்?'
'நீ இந்த வேலைக்குப் புதுசு. இருபத்தஞ்சு வருஷமா வெட்டு, குத்து, போலீஸ், தலைமறைவுனு அலைஞ்சிட்டு இருக்கறவன் நான். என் பேச்சைக் கேளு... கொஞ்ச நாள் அடங்கியிரு. காயம்லாம் ஆறட்டும். அப்புறம் எல்லாம் சொல்லித்தரேன்... கிருபா இடம் உனக்குத்தான்!'
'ஐயோ, யார் எடமும் வேண்டாம்!'



'ஆரம்பத்துல அப்படித்தான் இருக்கும். போவப்போவ எல்லாம் பழகிரும். டேய், கவனிச்சுக்குங்கடா!' என்று சொல்லிவிட்டு, கைலாசம் அந்த அறையிலிருந்து வெளியே வந்தார்.
செந்தில் ஆத்திரத்துடன் டிபன் தட்டை தூரத் தள்ளினான்.
இயற்கை கொஞ்சும் பொள்ளாச்சி.
பாரி, வெகுஇயல்பாகப் படப்பிடிப்புக் குழு வினரோடு ஒன்றிப்போனான். டைரக்டர் ஜோசப் அவனை நண்பனாகவே நடத்தினான். மூன்றாவது நாள் அவனை அழைத்துத் தோளில் கை போட்டான்.
'நீ சினிமாவுக்கு வந்தது ஒரு விபத்தா இருக்கலாம். ஆனா, உன் ரத்தத்துல கலை இருக்கு. அநாவசியமா டேக் வாங்கறதில்ல. நீ பெரிய இடத்தைப் பிடிக்கப்போறே!'
பாரி பணிவுடன் புன்னகைத்தான்.
'அடுத்தது, சவுக்குத் தோப்புல ஒரு ஃபைட் இருக்கு. நாளைக்கு உனக்கு ஒத்திகை தர ஸ்டன்ட் ஆளுங்க வருவாங்க.. பயிற்சி எடுத்துக்கோ!'
'சரி ஜோ..!'
மறுநாள் காலையில், மைதானத்தில் அவனுக்குப் பயிற்சி கொடுப்பதற்காகக் காத்திருந்தவனைப் பார்த்ததும், பாரி அதிர்ந்தான்.
அது, நாகுவின் தம்பி, லோகு!


- தடதடக்கும்...

யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் - 23

சுபா, ஓவியம்: ஸ்யாம்

லோகுவை அங்கே சற்றும் எதிர்பார்த்திராததால், பாரியுடைய நரம்புகள் முறுக்கேறிக்கொண்டன. ஆனால், தன்னுடைய உணர்வுகள் வெளிப்பட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.
பாரியின் தோளில் கைபோட்டிருந்த ஜோசப், 'மாஸ்டர் வர்ல..?' என்று கேட்டான்.
'மாஸ்டர் லண்டன் போயிருக்காரு. இந்திப் படம். நாளைக்கு வர்றாரு... டிரெய்னிங் குடுக்கறதுக்கு என்னை அனுப்பினாரு' என்றான் லோகு பணிவுடன்.
அறிமுகங்கள் முடிந்தன. ஜோசப் விலகினான். பயிற்சி துவங்கியது.
'அடிக்கறதுல பவர் இருக்கணும். ஆனா, எதிராளி மேல கை வேகமா விழக் கூடாது. அடி வாங்கும்போது, மூஞ்சில வலியைக் காட்டணும். உடம்பு பின்னால போகணும். ஃபைட்ல, ஆக்ஷனைவிட ரியாக்ஷன்தான் முக்கியம்.'
லோகு சொல்லிக்கொடுத்த மூவ்களை, பாரி உன்னிப்பாகக் கவனித்தான்.
மாலையில், 'பாரி எப்படி..?' என்று கேட்டான் ஜோசப்.
'சூப்பராப் பண்றாரு... புதுசுனு நம்பவே முடியல!'
'ஒரு சின்ன டெமோ பண்ணிக் காட்ட முடியுமா?'



பாரியும் லோகுவும் ஒருவரை ஒருவர் தாக்குவதுபோல் கைகளை வீசியும் கால்களால் கொக்கி போட்டும் நடித்துக்காட்டினர். கடைசி வீச்சில், பாரி வேண்டுமென்றே கையில் அதிக வலுவைச் சேர்த்துக்கொண்டான். மூன்று அங்குலம் உடலை முன்தள்ளி, கையைக் காற்றில் வீசினான். குவிந்த முஷ்டி

லோகுவின் முகத்தில் மோதியது. கடைசித் தருணத்தில், லோகு முகத்தைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டும்கூட, அவனுடைய மூக்கு உடைந்தது. குபுகுபுவென்று ரத்தம் பெருகியது. யாரோ ஐஸ் கொண்டுவர ஓடினார் கள்.

'ஐயோ, ஸாரி!' என்று பாரி பொய்யாகப் பதறினான். கைக்குட்டையைத் தவிப்புடன் எடுத்து நீட்டினான். லோகு கைக்குட்டையால் மூக்கைப் பொத்திக்கொண்டான். அவன் மண்டைக்குள் வலி தெறித்தது. வலியில் கண்களில் தானாகவே வழிந்த நீருடன் புன்னகைத்தான்.

'இவரோட ஒவ்வொரு பஞ்ச்லயும் சூப்பர் பவர் இருக்குது சார். நான் ரொம்பப் பிரியமா இருந்த எங்க அண்ணன் இறந்துட்டாரு. அவரு நெனப்புல இருந்ததால மிஸ் பண்ணிட்டேன். இல்லாட்டி சுதாரிச்சிருப்பேன். ஆனாக்கூட, பாரி சாரோட நடிக்கிறவங்க கொஞ்சம் உஷாரா இருக்கணும்.'

'நண்பா, இவங்க ஸ்டன்ட் ஆளுங்க. அடிச்சா தாங்குவாங்க. வில்லனா நடிக்கிறவங்க மூக்கை நீ பேத்துட்டா, ஷெட்யூலே கெட்டுப்போயிடும்!'

'ஸாரி ஜோ! அடியில பவர் இருக்கணும்னு சொன்னாரு. கொஞ்சம் மிஸ் பண்ணிட்டேன். இன்னொரு தடவை இந்தத் தப்பு நடக்காது.'

'லவ் சீன்ல அவ்ளோ மெரள்றே... அடிதடில கில்லாடியா இருக்க..?' என்று ஜோசப் சிரித்தான்.

அம்மாவுக்கு வாங்கிய மருந்துகளுடன் வீட்டுக்குத் திரும்பிய தீபா, வாசலில் செந்திலின் அம்மாவைப் பார்த்ததும் பரபரப்பானாள்.

'உள்ள வாங்க!'

'உன்கிட்ட சொந்தம் கொண்டாடிக்கிட்டு வரல' என்று சொல்லும்போது, செந்திலின் அம்மா உடைந்து அழுதாள்.

'என் பையன் எங்க இருக்கான்னு சொல்லு போதும்.'

'சத்தியமா எனக்குத் தெரியாதும்மா!'

''அவன் இங்க வேலைக்குப் போயிட்டு, ஒழுங்கா இருந்திருப்பான். ஏதோ ஒரு நாள் உங்க காதலை ஒப்புக்கிட்டு, கல்யாணம் பண்ணிவெச்சிருப்போம். அதை விட்டுட்டு, சினிமா அது இதுனு அவன் மனசுல விஷத்தை ஏத்தி வழியனுப்பிவெச்சியே, அவனை எங்க கொண்டுபோய் நிறுத்தியிருக்கு பார். தலைமுறை தலைமுறையா கௌரவமா வாழ்ந்த குடும்பத்தை போலீஸ் தேடி வருது. செந்திலோட கைரேகை வேணும்னு அவன் படித்த புஸ்தகத்தையெல்லாம் எடுத்துட்டுப்போறாங்க. செந்தில் எனக்குத் திரும்பக் கிடைக்கலைன்னா, என் சாபம் உன்னைச் சும்மாவிடாது!'

அழுதபடி அவள் புறப்பட்டுச் சென்ற பின், தீபா தலையைப் பிடித்துக்கொண்டாள்.

'செந்தில், உன் கனவுகளை உடனிருந்து நிறைவேற்ற நினைத்தது என் குற்றமா? என் வேதனை புரியாமல் எங்கேடா போய் ஒளிந்துகொண்டாய்? எதுவும் செய்யாமல், ஐந்து நாட்களாக இப்படிப் புலம்பிக்கொண்டிருப்பது பொறுப்பாகுமா?'

தீபா ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

துரை அரசன் முன் சப் இன்ஸ்பெக்டர் நின்றார்.

'நாம சந்தேகப்படற செந்தில் பத்தி போலீஸ் ரெக்கார்ட்ஸ்ல ஒரு தகவல்கூட இல்ல சார். விசாரிச்ச வரைக்கும் சாதுவான பையன்னுதான் தெரியுது. செத்துப்போனவங்க எல்லாமே தப்பான ஆளுங்கதான். ரெண்டு பக்கமும் எப்படி யும் இன்னும் பலி விழும். விட்டுப் பிடிக்கலாம்னு தோணுது.'

'ரவுடிங்க தலை குறையுதுனு நாம கையைக் கட்டிக்கிட்டு வேடிக்கை பாக்க முடியாது' என்றார் துரை அரசன் கவலையோடு.

'வெட்டினவன் யாருன்னு விசாரிச்சீங்களாடா..?' என்றார் கைலாசம்.

'நாகுவோட தம்பி லோகு. இங்க இருந்தா பிரச்னைனு ஷூட்டிங் குக்குக் கிளம்பிப் போயிருக்கான்... அங்கேயே அவன் கதையை...'

'அவசரப்படாதீங்கடா...' என்றவர், தன் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தார். 'செந்திலைக் கூட்டிட்டு வாங்க...' என்றார்.

- தடதடக்கும்...

சுபா

ஓவியம்: ஸ்யாம்

# யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் 24

செந்தில் தெளிவடைந்திருந்தான். காயங்கள் ஆறி, தழும்புகளாகக் காயத் தொடங்கியிருந்தன. கைலாசத்தை எரிச்சலுடன் பார்த்தான்.

'என்னை என்ன செய்றதா உத்தேசம்..?'

'அடிதடிக்கெல்லாம் தயாராயில்லேனு சொல்ற... கொஞ்ச நாள் எங்க பாதுகாப்புல இரு.'

'இதுக்குப் பேரு பாதுகாப்பா... ஜெயிலா?'

அவருடைய போன் ஒலித்தது.

'இப்ப வெளிய கொஞ்சம் சூடா இருக்கு... பத்து நாள் போவட்டும்' என்று துண்டித்தார். முகத்தில் சோர்வு தெரிந்தது.

'பொம்பளைங்கனு பாக்காம எல்லாரையும் தூக்கணும்போல இருக்கு!'

'வெட்டுக் குத்து தவிர, வேற யோசனையே வராதா உங்களுக்கு?'

'என் நிலைமைல நீ இருந்தா என்ன பண்ணுவ, சொல்லு? கேளம்பாக்கத்துல நாலு ஏக்கர் வாங்கிப் போட்டிருந்தேன். அங்க நல்லா விலை போகுதுனு தெரிஞ்சதும், அந்த இடத்துல ஆறேழு குடிசைங்க வந்திருச்சு. காலி பண்ணுங்கடான்னா, இருபது லட்சம் கொடு, முப்பது லட்சம் குடுனு அடாவடித்தனம் பண்றாங்க. பொம்பளைங்க, குழந்தைங்க இருக்காங்களேனு பாக்கறேன்... பேசாம பசங்களை அனுப்பி ஒரே நாள்ல ஆம்பளைங்களைப் போட்டுத் தள்ளிட்டு, குடிசைங்கள எரிச்சிரலாம்னு ஆத்திரம் வருது.'

'நான் வேற ஒரு வழி சொன்னா, என்னை விடுதலை பண்ணுவீங்களா?'

'சொல்லு செந்தில்...'

'பெருச்சாளியும் விஷம் இல்லாத பாம்பும் கிடைக்குமா..?'

கைலாசம் அவனை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தார்.

சவுக்குத் தோப்பு சண்டையை முடித்துவிட்டு, நாயகியுடன் பைக்கில் வருவதாகக் காட்சி அமைப்பு. பாரியின் முதுகில் ஒன்றிச் சாய்ந்து, பைக்கில் கயல்விழி கண்களை மூடியிருந்தாள். இரண்டாவது டேக் ஓ.கே. ஆனது.

'பேக்அப்...' என்றான் ஜோ.



புழுதியில் புரண்ட அழுக்கு உடையை காஸ்ட்யூமரிடம் ஒப்படைத்துவிட்டு, 'கயல்... ஒரு நிமிஷம்'' என்றான் பாரி.
கயல்விழி திரும்பினாள்.
'நீ இங்கிலீஷ் கத்துக்கறதா சொன்னாங்க...'
'ஆமாம் பாரி... நான் தமிழச்சி. எட்டாவதோட படிப்பை நிறுத்திட்டாங்க. வடநாட்டு மீடியா ஆளுங்கல்லாம் இங்கிலீஷ்லதான் கேள்வி கேக்கறாங்க. அதான் ஒரு டீச்சரை ஃபிக்ஸ் பண்ணியிருக்கேன்.'
'நீயாவது பரவால்ல... எட்டாவது. நான்... ஸ்கூலே போகல. அவர் உனக்கு கிளாஸ் எடுத்து முடிச்சப்புறம் எனக்கு எடுப்பாரானு கேக்கணும்.'
'தனித்தனியா எதுக்கு? சேர்ந்தே கத்துப்போம்...' என்றாள் கயல்விழி.
'நானும் இவங்ககூடப் போலாமா?' என்று ஏக்கத்துடன் கேட்டான் செந்தில்.
'உன் ஐடியாவாச்சே... போயிட்டு வா!' என்றார் கைலாசம்.
வெளிக் காற்றைச் சுவாசித்ததிலேயே செந்திலின் ரத்தம் புத்துணர்ச்சி பெற்றது. கார் எஃப்.எம்மில் இளையராஜா 'ராத்திரியில் பூத்திருக்கும் தாமரை'யால் காதில் தேன் பாய்ச்சினார். இருபுறமும் அணைத்து அமர்ந்திருந்த ஆட்கள் துப்பாக்கிகளை மடியிலும் கவனத்தை வெளியிலும் தயாராக வைத்திருந்தனர்.
இருட்டையும் ஆங்காங்கே செங்குத்தாக எழும்பிக்கொண்டிருந்த ராட்சஸக் கட்டடங்களையும் செந்தில் ஆர்வத்துடன் கவனித்தான். கிட்டத்தட்ட ஒரு மணி நேரப் பயணம். நெடுஞ்சாலையை ஒட்டிப் பிரிந்த பாதையில், வேலியற்ற அந்த நிலம் இருந்தது.
ஒன்பது குடிசைகள். செந்தில் காரிலேயே அமர்ந்திருந்தான். ஆட்கள் இறங்கினார்கள். துள்ளித் திமிறிய சிறு கோணிப்பைகளை எடுத்துச் சென்று குடிசைகளின் அருகில் திறந்துவிட்டார்கள். விடுபட்ட பெருச்சாளிகள் சந்தோஷமாகக் குடிசைகளுக்குள் புகுந்தன. பாம்புகள் நெளிந்து ஓலைக் கிழிசல்களில் நுழைந்தன.
ஆசிரியருக்கு எழுபது வயது. தடித்த கண்ணாடி. வரிவரியாகத் தளர்ந்த முகம். குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்கும் பொறுமையோடு ஆங்கிலத்தை அறிமுகப்படுத்தினார். வகுப்பு முடிந்து வெளியே வந்தபோது, 'வணக்கம் தம்பி...' என்று அகலமாகச் சிரித்தாள் கயல்விழியின் அம்மா. ஐந்தடி உயரம். பீப்பாய் போன்ற அகலம். தடித்த தங்கச் சங்கிலி. தங்க ஜிமிக்கி. திருத்திய புருவங்களும், கண்களின் மையும், கன்னத்து ரூஜும் நாற்பத்தைந்து வயதை இளமையாகக் காட்ட இயலாமல் தோற்றிருந்தன.
'தெலுங்குல ஒரு பையன், இடுப்பைப் பிடிச்சாலும் நெஞ்சோட கட்டிப்பிடிச்சாலும் முரட்டுத்தனமா அழுத்துறான். பாப்பாவுக்குச் சிவந்துபோயிடுது. ஆனா, நீங்க என் பொண்ணைப் பூ கணக்காத் தொடறீங்க... தேங்க்ஸ்!'
பாரி புன்னகைத்தான்.
'ஏன் தம்பி, புரொடக்ஷன்ல பேசி கேரவன் ஏற்பாடு செய்யக் கூடாது? சின்னப் பொண்ணு... பாத்ரூம் கீத்ரூம் வந்தா என்ன செய்யும்?'
'அம்மா...'
'நீ சும்மா இரு பாப்பா... ஹைதராபாத்ல ஸ்டார் ஹோட்டல்ல நமக்கு மூணு ரூம் கொடுக்கல? புதுப் பசங்களோட நடிச்சா அவ்வளவுதான் மரியாதை!'
பாரி தலை குனிந்தான்.
''பாரி, எங்க அம்மா எப்பவும் அப்படித்தான். மனசுல வெச்சுக்காத...' என்று கயல்விழி தனியே மன்னிப்பு கோரினாள். எதிர்பாராத நிமிடத்தில் அவன் கன்னத்தில் முத்தம் பதித்தாள்.
பெண்களுடன் பழகிப் பழக்கம் இல்லாத பாரி சட்டென்று விலகி, ''குட் நைட்...'' என்றான்.
அவனுக்கான அறை இருந்த ஹோட்டலுக்கு நடந்தே போனான். ரிசப்ஷனில் சாவி வாங்கும்போது, 'உங்களுக்காக ஒரு பொண்ணு ரொம்ப நேரமா காத்திட்டிருக்கு' என்று காட்ட...
'என்னை ஞாபகம் இருக்கா..?' என்று கேட்டபடி எழுந்தாள் தீபா.

யட்சன்

சுபா, ஓவியம்: ஸ்யாம்

# யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர்

25

உணவு விடுதியின் மெலிதான வெளிச்சம், தீபாவின் கண்கள் ஈரத்தில் பிரதிபலித்தன. குரலில் இயலாமையில் எழுந்த கோபம் இருந்தது.
'சென்னைல ஷங்கர் சார் ஆபீஸ்ல விசாரிச்சிட்டு வரேன்... பூஜை நேரத் துல செந்தில் போனே எடுக்கலை. அதனால பாரிக்கு வாய்ப்பு கெடைச்சுதுனு சொன்னாங்க. செந்திலை என்ன பண்ணீங்க?'
'சத்தியமா செந்திலுக்கு என்ன ஆச்சுனு எனக்குத் தெரியாது' என்று பாரி, பொறுமையாக வாகனம் மாறி ஏறியதை விவரித்தான்.
'சினிமாங்கறது எனக்குத் தானா அமைஞ்ச வாய்ப்பு. விதியோட விளையாட்டு. சூப்பர் ஸ்டார் கையால ஆசீர்வாதம் கிடைச்சது. இனி, இதான் என் வாழ்க்கை. உங்களுக்கு உதவ முடியல. மன்னிச்சிருங்க.'
பாரியின் கண்களில் பொய் இல்லை என்பதை தீபா கவனித்தாள்.
'வரேன்...' என்று எழுந்தாள்.
'பஸ் ஸ்டாண்ட் வரை துணைக்கு வரேன்...' என்று பாரியும் எழுந்தான்.
பேருந்தில் ஏறி அமர்ந்ததும், 'என் காதல் உண்மைன்னா, செந்தில் சீக்கிரமே எனக்குக் கெடைப்பார்' என்று உறுதியான குரலில் தீபா கூறினாள்.
இன்ஸ்பெக்டர் துரை அரசன், தன் முன்னால் நின்றவனை நிமிர்ந்து பார்த்தார். கலைந்த கூந்தல். திருத்தாத தாடி. குட்கா வாசம் வீசும் பேச்சு.
'சார், போரூர் கேஸ்ல சரண்டர் ஆக வந்திருக்கேன்!'
தனக்காக ஒதுக்கப்பட்ட அறையில் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்த செந்திலை, கைலாசம் கட்டிப்பிடித்தார்.
'உன் பிளான் வொர்க்அவுட் ஆயிடுச்சு! அத்தனை குடிசைங்களும் காலி ஆயிடுச்சு.'
'அப்ப நான் போலாமா?'

கைலாசம் அவன் தோளில் அன்புடன் கை வைத்தார்.

'செந்திலு, நீ சினிமால என்ன சம்பாதிச்சு இருப்பியோ, அதே அளவுக்குச் சம்பாதிக்க வழி பண்ணித் தரேன். கூடவே இருந்துரு!'

'ப்ச்...'

'அடிதடிலாம் வுட்டுட்டு, ரியல் எஸ்டேட் பிசினஸ் பண்றேன். நீ கூட இருந்து பிசினஸைக் கவனிச்சிக்கிறியா?'

'போலீஸ் வேடிக்கை பாக்குமா?'



'போலீஸும் ரவுடியும் சும்மா பேருக்குத்தான் மொறைச்சிக்கும். மத்தபடி ஒருத்தருக்கொருத்தர் வேண்டப்பட்டவங்கதான். நாங்க போலீஸுக்காக எவ்வளவோ செஞ்சிருக்கோம். போலீஸும் எங்களுக்காக எவ்வளவோ செஞ்சிருக்கு. நம்பு... உம்மேல இருக்கற கேஸ் டிராப் ஆயிடும்.'

'எப்படி?'

'நம்ம பையன் ஒருத்தன் சரண்டர் ஆயிட் டான்.'

'ஐயோ, எனக்காக யாரோ ஒருத்தன் எதுக்கு மாட்டிக்கணும்?'

'பாரு... உடனே யாருக்காகவோ மல்லுக்கட்றத! அவனையும் வெளில எடுத்துருவோம். தொழில்ல இதெல்லாம் சகஜம்பா.'

'ஆனா, துப்பாக்கில என் கைரேகை இருந்ததே?'

'அதெல்லாம் அவன் வாக்குமூலத்துல பார்த் துப்பான்.'

செந்திலின் கண்களில் முதல்முறையாக நம்பிக்கை துளிர்த்தது.

துரை அரசன் பென்சிலை உருட்டிக்கொண்டே தனக்கு எதிரில் நின்றவன் பேசியதைக் கேட்டார்.

'சார் நாகு மேல எனக்கு தீராப் பகை. அவனைப் போட்டுத்தள்ள ஸ்கெட்ச் போட்டேன். போரூருக்கு அவனைக் கூட்டிட்டு வர்றதா, பூமணி சொன்னான். போற வழில ஒருத்தன் காரைத் தவறவிட்டுட்டதா லிஃப்ட் கேட்டான். அவன்ட்ட காசு அடிக்கலாமேனு ஏத்திக்கிட்டோம். துப்பாக்கியைக் காட்டி, கழுத்துல இருக்கற செயின், பர்ஸ் எல்லாம் புடுங்கினோம். பார்ட்டி டப்னு துப்பாக்கியை எங்கிட்டேர்ந்து புடுங்கிட்டான். ஆனா வெத்து ஜபுரு. சுடுற தெகிரியம்லாம் இல்ல. அதையும் புடுங்கினு, அவன அடிச்சுத் தூக்கிப் போட்டுட்டோம். போன இடத்துல பிரச்னை ஆயிருச்சி. கொலை பண்ணிட்டு எஸ்கேப் ஆவுற சமயத்துல, கார் கல்லுல மோதித் தூக்கிருச்சி. பர்ஸையும் துப்பாக்கியையும் போட்டுட்டு ஓடிட்டேன். அஞ்சாறு நாள் தலைமறைவா சுத்துனேன். தாக்குப்புடிக்க முடில... அதான் வந்துட் டேன்.'

துரை அரசன் அவனை வெறுப் புடன் பார்த்தார்.

'யாருக்காகடா தலை குடுக்கற..?'

'சத்தியமா நான்தான் சார் கன்விக்ட்டு.'

'கன்விக்ட்டா? ம்ஹும்... எல்லாம் மேல் இடத்துல ஆள் வெச்சிருக்கீங்க...' என்று முணுமுணுத்துக்கொண்டே, துரை அரசன் அந்தக் காகிதத்தை அவன் பக்கம் திருப்பினார்.

'வாக்குமூலத்துல கையெழுத்துப் போடு...'

தீபா அலுவலகம் முடிந்து, நடைப் பிணமாக சாலையோரம் வந்து கொண்டிருந்தபோது, அருகில் ஒரு வேன் வந்து நின்றது. அதன் கதவு திறந்த வேகத்திலேயே, உள்ளிருந்து கைகள் நீண்டன. அவளை உள்ளே இழுத்துப்போட்டன. நடந்தது புரியாமல் தீபா திகைக்க, வேன் வேகம் எடுத்தது.

செந்தில் அந்த வாழ்க்கைக்குப் பழகிவிட்டான். காலையில் எழுந்ததும் உடற்பயிற்சி. இணையதளம், செய்தி சேனல்கள். மற்றபடி, ரியல் எஸ்டேட் பற்றிய புத்தகங்கள், செய்திகள், குறிப்புகள், விதிமுறைகள். அவற்றில் விரைவிலேயே நிபுணத்துவம் பெற்றுவிட்டான்.

'செந்தில்ணா... ஒன்னப் பாக்க யாரோ வந்திருக்காங்க.'

செய்தித்தாளை மடித்துவைத்துவிட்டு, செந்தில் எழுந்தான். கைலாசத்தைத் தவிர, வேறு யார் தேடி வரப்போகிறார்கள்?

அறையிலிருந்து வெளிப்பட்டவன் அப்படியே திகைத்து நின்றுவிட்டான். அங்கே ஈரமான விழிகளுடன் காத்திருந்தவள்... தீபா!

- தடதடக்கும்...

யட்சன்

சுபா, ஓவியம்: ஸ்யாம்

யட்சன் எக்ஸ்பிரஸ் தொடர் 26

செந்திலைப் பார்த்த தீபா, இரண்டே எட்டில் அவனை அடைந்தாள்.

"இருக்கியா... செத்தியானு ஒரு போன்கூடப் பண்ண மாட்டியா?' என்று கேட்ட படி, 'சுளீர்... சுளீர்...' என்று அவன் கன்னங்களில் அறைந்தாள். அடித்த அதே கையால் இழுத்து அணைத்தாள். தோளில் முகம் புதைத்து விம்மினாள். செந்தில், மெள்ளத் தனது கைகளை அவள் முதுகில் வைத்து அணைத்தான். ஒருவருக்குள் மற்றவர் கரைவதுபோல் இருவருடைய உடல்களும் நெருக்கமாக அழுத்திக்கொண்டன.

"என்னைத் தூக்கிட்டு வரச் சொல்லியிருக்கே? என்னடா ஆச்சு உனக்கு?" என்று தீபா குமுறினாள்.

செந்தில் அவளைச் சற்றே விலக்கி நகர்த்தி, முகம் பார்த்து, மீண்டும் இழுத்து அணைத்துக்கொண்டான்.

"விவரமா சொல்றேன்... வா..." - அவளை அணைத்தபடியே தனது அறைக்குள் அழைத்துச் சென்றான்.

உணவு இடைவேளையில் அந்தப் பரந்த தென்னந்தோப்புக்குள் பாரி நடந்தான். பசுமையும் ஆரோக்கியமான காற்றும் கிறங்கடித்தன. இளம் பெண் கூந்தலைச் சிலுப்பு வதுபோல, தென்னை ஓலைகள் சிலுப்பிக்கொண்டு சிணுங்கின. பாரி, ஒரு சிறு பாறையில் அமர்ந்தான். மனம் அலைபாய்ந்தது. 'எங்கோ குப்பைத் தொட்டியில் வீசப் பட்டுத் துவங்கிய வாழ்க்கை, இப்போது இங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறதே..! யார் வேலை இது?'

கண்களை மூடினால், தீபா கண் முன் வந்து நின்றாள். 'அந்தப் பெண் செந்திலை எவ்வளவு ஆழமாக நேசித்திருந்தால், ஊர்விட்டு ஊர், இரவு என்றுகூடப் பாராமல் தன்னைத் தேடி வந்திருப்பாள். அவளுக்கு செந்தில் கிடைக்க வேண்டும்!'

திடீரென்று மருதாணி வாசத்துடன், தளிர் விரல்கள் பின்புறமிருந்து அவன் கண்களைப் பொத்தின.

பாரி திடுக்கிடலுடன், "கயல்... என்ன விளையாட்டு இது?" என்று கேட்டதும், சட்டென்று அந்த விரல்கள் பிரிந்து விலகின.

"ஓ..! ஒரு வாரத்துக்குள்ள கயல்விழிகூட அவ்வளவு நெருக்கமாயிட்டியா?"

பாரி திரும்பினான்.

"ஏய் தேவி... நீயா?"
"ஏன்... ஏமாத்தமா இருக்கா?"
"ச்சீ... லூஸு... கயல்கூடத்தான தினம் நடிச் சிட்டு இருக்கேன். அதான் அவளோனு நினைச் சுட்டேன். வா... வா... இப்படி உட்காரு!"
தேவி எதிரில் அமர்ந்தாள். கருநீல ஜீன்ஸும், வான் நீல டாப்ஸும் அவளுக்கு மெருகூட்டின.
"நீயும் கயலும் சேர்ந்துதான் ஹோம்வொர்க்லாம் பண்றீங்களாம்..?" என்று முகத்தைச் சாய்த்து ஓரக் கண்ணால் பார்த்துக் கேட்டாள்.
"உண்மையைச் சொல்லணும்னா, உன்னைப்பத்திதான் இப்ப நெனைச் சேன்."
"அய்... நம்பறேன்..."
"சத்தியமா தேவி... நாளைல இருந்து பாட்டு எடுக்கப்போறாங்களே... தேவி வந்தா, நாலு ஸ்டெப் கத்துக்கலாமேனு நினைச்சேன்."
"தனியாவா... கயலோடயா?"
"கண்ல பாரு பொறாமைய..." என்று சிறு கல்லை எடுத்து சிரித்தபடி அவள் மீது வீசினான் பாரி. தேவியுடன் பேசியபோது, இறுக்கம் உதிர்ந் தது. பல நாள் பழகியது போன்ற இயல்பு வந்தது.
"ஃபைட்டுனா சமாளிச்சுடுவேன்... டான்ஸ்லாம் சுட்டுப்போட்டாலும் வராது. சாவுக்குக்கூட ஆடினது இல்ல. இன்னிக்கு இங்லீஷ் கிளாஸைக் கட் பண்ணிடறேன். உடம்பை எப்படி வளைக்கணும்னு சொல்லித்தர்றியா?"
"நான் வளைச்சபடி வளையறதுக்கு ஹீரோ ரெடியா?"
பாரி வாய்விட்டுச் சிரித்தான்.



தீபா உள்ளங்கைகளில் முகத்தை ஊன்றி, செந்திலையே வெறித்தாள்.
"எப்பவுமே யாரையாவது சார்ந்தே இருந்துட்டேன் தீபா. நல்லவனா இருந்தா மட்டும் பத்தாது, வல்லவனாவும் இருக்கணும்னு புரிஞ்சுக்கிறதுக்குத்தான் போரூர்ல பாரிக்குப் பதிலா நான் போய் மாட்டிக்கிட்டேன்னு இப்பத் தோணுது."
"இவங்களைப் போல, பாரி அடிதடிக்கெல்லாம் போறவன் மாதிரி தெரியலை செந்தில். அவனைத் தீர்த்துக்கட்ட யார் பிளான் பண்ணியிருப்பாங்க?" என்றாள் தீபா.
'இவங்கள்லயும் நல்லவங்க இருக்காங்க தீபா. ஆனா, புலி வாலைப் பிடிச்சிட்டாங்க."
'டேய்... இந்த க்ரூப்ல சேர்ந்துட்டியா என்ன?"
"நாகு செத்ததுக்கு நான்தான் காரணம். ஆனா, எனக்காகத் தலை யைக் கொடுக்க ஒருத்தனை அனுப்பி இருக்காங்க. இவங்களுக்கு நான் விசுவாசமா இருக்க வேண்டாமா தீபா? அடிதடியை நம்பாம, ஒரு நியாயமான வாழ்க்கையை இவங்க ளாலயும் வாழ முடியும். இவங்களை வெச்சு ரியல் எஸ்டேட் பிசினஸ்ல சாதிச்சுக் காட்டறேன் பார்.'
தீபா கண்களில் நீருடன் அவனை ஏக்கத்தோடு பார்த்தாள்.
"நாம கை கோத்துட்டு பீச்ல நடந்தோமே... உன் மடில படுத்துக் கதை கேட்டேனே... அந்த சுகத்தை மனசுக்குள்ளயே எத்தனை தடவை மறுபடி மறுபடி வாழ்ந்து பார்த்துட்டு இருக்கேன் தெரியுமா செந்தில்..? அதெல்லாம் இனிமே கெடைக் காதாடா?"
"சட்டப்பூர்வமா, சுத்தமான மனுஷனா நான் வெளிய வர்ற வரைக்கும் பொறுத்துக்கோ தீபா!"
தீபா கண்ணீருடன் சிரித்தாள்.
லோகு தன் நண்பர்களிடம் ரகசியக் குரலில் சொன்னான்:
"கைலாசம் ஆளு ஒருத்தன் செந்திலுக்குப் பதிலா போலீஸ்ல சரண்டர் ஆயிருக்கான். எங்க அண்ணனைக் கொன்ன செந்தில் எப்படியும் வெளிய வருவான். உஷாரா இருந்து அவனை மடக்கணும்... என் கையால அவன் சாகணும்!"

- தடதடக்கும்...

**யட்சன்**

ஒலிபெருக்கிகளில் மறுபடி மறுபடி ஒலித்த பாடல் வரிகள். மீண்டும் மீண்டும் அதே நடன அசைவுகள். அந்தத் தோப்பில் இருந்த பறவைகள் சலித்துப் பறந்தன. பேக்கப் ஆனதும், ஜோசஃப் பாரியை ஆச்சரியத்துடன் பார்த்தான்.
"டான்ஸ்கூட நல்லா வருது உனக்கு!'
'சாருக்கு இங்கிலீஷ் கத்துக்கொடுக்க ஒருத்தங்க, டான்ஸ் சொல்லிக்கொடுக்க ஒருத்தங்கன்னு லேடீஸ் போட்டி போடறாங்களே! அப்றம் என்ன?' என்று இணை இயக்குநர் குணா கண்ணடித்தான்.
'உங்களைத்தான் சொல்றாரு, புரியுதா?' என்று பாரி சொன்னதும், கயல்விழியும் தேவியும், குணாவை அடிப்பதற்குத் துரத்தினார்கள். பாரி அந்தக் காட்சியை சந்தோஷமாக ரசித்தான்.
'க்ளைமாக்ஸ் ஃபைட் மட்டும்தான் பாக்கி. அது முடிஞ்சதுன்னா, பூசணிக்கா உடைச்சிடலாம்..' என்றான் ஜோசஃப் நிறைவுடன்.
கதவைத் திறந்தது, செந்திலின் அம்மா. தீபாவின் முகத்தில் உற்சாகத்தைப் பார்த்ததும், குழம்பினாள்.
'அம்மா.. செந்திலைப் பார்த்தேன். பத்திரமா இருக்காரு. ஒரு சின்ன ஆக்சிடென்ட்... அதான் நம்மகூட அவரால பேச முடியலை.'
செந்திலின் அம்மாவுக்கு மூக்கு விடைத்தது.




'உன்னைப் பார்க்க முடியுது... பேச முடியுது. ஆனா, பெத்த அம்மா, அப்பாகிட்ட பேசணும்னு அவனுக்குத் தோணல இல்ல?'

'என்னை மாதிரி உங்களைத் தூக்கிட்டுப் போக முடியாதே!' என்று எப்படிச் சொல்வது?

'சீக்கிரமே பேசுவாரும்மா. அவர் நல்லாருக்காருன்னு சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்.' என்று சொல்லிவிட்டு தீபா திரும்பி நடந்தாள். செந்திலின் அம்மா கண்களை மூடி, கடவுளுக்கு நன்றி சொன்னாள்.

கைலாசம், செந்திலிடம் அந்தச் செய்தித்தாளைப் பிரித்துக் காட்டினார். மூன்றாவது பக்கத்தில் செய்தி வெளியாகியிருந்தது.

'குற்றம் சாட்டப்பட்ட செந்தில் போரூர் கொலைகளைச் செய்யவில்லை என்று போலீஸ் கமிஷனர் தெரிவித்தார். உண்மையான குற்றவாளி சரண் அடைந்துள்ளதால், செந்தில் மீது தொடுக்கப்பட்ட வழக்கு கைவிடப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.'

செந்தில், கைலாசத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டான். ஒரே வாரத்தில், ரியல் எஸ்டேட் பணிகளுக்காக தேனாம்பேட்டையில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட ஓர் அலுவலகத்தை செந்திலுக்காக ஒதுக்கினார் கைலாசம்.

'ஆபீஸ் அருமையா இருக்கு. ஒரு நியாயமான லாயரும், ஒரு நாணயமான கேஷியரும் நமக்குத் தேவை.'

'ஏற்பாடு பண்றேன்!'

மாலையில் தேவியுடன் தோப்பில் நடந்தபோது, 'இந்த ஹீரோவைப் பத்தி, அந்த ஹீரோயினைப் பத்தினு ஆயிரம் கிசுகிசுவை நம்பினவன் நான். இப்ப, என்னைப் பத்தியே கிசுகிசு வருதாமே!' என்று சிரித்தான் பாரி.

'அதப்பத்திலாம் கவலைப்படாத பாரி. இங்க தொழில்முறையா வேற வேற ஆளுங்களைக் கட்டிப்பிடிச்சு, காதலிச்சிட்டே இருக்க வேண்டியதுதான். நம்மளப் பத்திகூட கிசுகிசு வந்திருக்கு... தெரியுமா?'

'இந்தப் படம் ரிலீஸ் ஆனதும், அந்தக் கிசுகிசுவை மட்டும் உண்மையாக்கலாம்னு நெனைக்கறேன்' என்றான் பாரி, சற்றே ரகசியக் குரலில்.

கைலாசம் செந்திலின் முன் ஒரு ஃபைலை வைத்தார்.

'ஊட்டில ஒரு லாட்ஜ் விலைக்கு வருது. எதிர்க்கட்சி எம்.எல்.ஏ ஒருத்தர் டீலை முடிச்சிக் கொடுக்கச் சொல்றாரு. மூணு கோடி நமக்கு நிக்கும்..'

'இடத்தைப் பார்க்கணும்... டாகுமென்ட்ஸை செக் பண்ணணும்... ஓனர்கிட்ட பேசணும்.' என்றான் செந்தில்.

'நாளைக்கே போலாம்' என்றார் கைலாசம்.

லோகு தன் சகாக்களைக் கூட்டியிருந்தான்.

'எங்க அண்ணனைக் கொன்னவன் ஊட்டிக்குப் போறான்னு தகவல் வந்திருக்கு. அங்க வெச்சு, அவன் கதையை முடிக்கிறேன்!'

'எப்பண்ணே புறப்படணும்..?'

'தலைவரு அடக்கி வாசிக்கச் சொல்லியிருக்காரே! நீங்க வந்தா அவருக்கு சந்தேகம் வந்துரும். தனியாப் போறேன். கேட்டா, நான் ஷூட்டிங் போயிருக்கறதா சொல்லிருங்க.'

அவர்கள் தலை அசைத்தார்கள்.

ஊட்டி.

பேருந்து நிலையத்துக்குப் பின்னால் சரியும் சாலையில் இருந்தது அந்த லாட்ஜ். உடன் வந்த வழக்கறிஞர் பத்திரங்களைச் சரிபார்த்து, தன் ஆமோதிப்பைத் தெரிவித்தார். செந்தில் அதன் அறைகளைத் திறந்து பார்த்தான்.

'நான் இருந்த திருவல்லிக்கேணி மேன்ஷனைவிட நல்லாத்தான் இருக்கு. கொஞ்சம் ரிப்பேர் பண்ணா சூப்பராய்டும்!' என்று செந்தில் அதை ஒரு நியாயமான விலைக்குப் பேசி முடித்தான். வேலை முடிந்ததும், நிறைவாக இருந்தது.

'அண்ணே சென்னைல அடைஞ்சே கெடந்தேனா... காலாற ஒரு வாக் போகணும் போல இருக்கு.'

'பசங்களக் கூட்டிட்டுப் போ...' என்றார் கைலாசம்.

'இல்லண்ணே... டிரைவர் மட்டும் போறும்.'

காரை ஊட்டியின் வளைவுகளில் செலுத்தச் சொல்லி ஓர் இடம் வந்ததும் நிறுத்தச் சொன்னான். டிரைவரை அங்கேயே காத்திருக்கச் சொல்லிவிட்டு, மரங்களுக்கு இடையே புகுந்து சரிவில் இறங்கினான்.
கன்னி கழியாத அந்தச் சரிவில், ஆறாள் உயரத்துக்கு வளர்ந்திருந்த யூகலிப்டஸ் மரங்கள் குளிர் காற்றில் சலசலத்தன. மார்புக்குக் குறுக்கே கையைக் கட்டிக்கொண்டு, இலைச் சருகுகளைப் படபடவென்று மிதித்து நடந்தான்.
அவனைப் பார்வையிலேயே வைத்தபடி மரங்களுக்குப் பின்னால் ஒளிந்து ஒளிந்து லோகு மரண அமைதியுடன் பின்தொடர்ந்தான்!


- தடதடக்கும்...

யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் - 28

சுபா, ஓவியம்: ஸ்யாம்

செந்தில் அந்தச் சரிவின் விளிம்புக்கு வந்திருந்தான். நெஞ்சு நிறைய ஊட்டியின் ஆரோக்கியக் காற்றை இழுத்தான். அங்கிருந்து பார்த்தால், சரேல் என இறங்கும் பள்ளத் தாக்கு அடர்த்தியான புதர்கள். குத்திட்டு நின்ற மரங்கள். நீருண்ட குளிர் மேகங் கள். நினைவு தீபாவைத் தேடியது. போன் செய்தான்.
"தீபா, உன் ஸ்டெனோ வேலையை உடனே ராஜினாமா பண்ற..!"
"ஏன் செந்தில்..?"
"அழகான, அறிவான, அன்பான ஒரு உதவியாளர் எனக்குப் பக்கத்துலயே தேவைப்படுறாளே!"
"எனக்கு துப்பாக்கி சுடறதுலலாம் முன் அனுபவம் கெடையாதுப்பா. பரவாயில்லையா?" என்று தீபா மறுமுனையில் சிரித்தாள்.
திடீர் என்றுதான் உணர்ந்தான். வேறு யாருடைய கால்களோ சருகுகளை மெள்ள மிதிக்கும் ஒலி கேட்கவில்லை?
"அப்புறம் பேசறேன் தீபா..." என்று தொடர் பைத் துண்டித்து, சரேலெனத் திரும்பினான்.
"இப்படித் தனியா வந்து மாட்டிக்கிட்டி யேடா..!" என்றான் லோகு. அவன் யார் என்று செந்திலுக்குப் புரிய சில கணங்கள் ஆயின. போரூரில் தான் மோதித் தூக்கிய நாகுவின் அதே மூக்கு, அதே கண்கள்.
"ஓ... நீங்கதான் லோகுவா?"
"மரியாதை குடுத்துப் பேசிட்டா, திரும்பிப் போயிடுவேனா? உன் கழுத்தைச் சீவி, மண்ணுல புதைக்கிற வரைக்கும் எங்க அண்ணனோட ஆவி அமைதியாவாதுடா!" என்று கத்தியைக் காற்றில் வீசினான் லோகு. செந்தில் சட்டென்று பின்னால் நகர்ந்து மரத்தின் மீது மோதி நின்றான்.
"லோகு வேணாம்... மூலைக்குத் தள்ளிட்டா, பூனைகூட புலி ஆயிடும். என் உயிரைக் காப்பாத் திக்கத்தான் அன்னைக்கு அப்படி செஞ்சேன். மத்தபடி, உங்கண்ணனோட எனக்கு என்ன பகை?"
"ஏய் நான் கதை கேக்க வரலை... உன் கதையை முடிக்கத்தான் வந்திருக்கேன்!"



லோகு செந்தில் மீது பாய்ந்தான். செந்தில், கடைசிக் கணத்தில் நகர்ந்துவிட, லோகு வீசிய வேகத்தில் கத்தி மரத்தில் செருகி, முனை உடைந்தது. லோகு தளரவில்லை. செந்திலின் கண்களைக் குறிவைத்து விரல்களைச் செலுத்தினான். அவனுடைய நகங்களிலிருந்து தப்பிக்க செந்தில் போராட..
சருகுகளை உடைத்து இருவரும் கட்டிப் புரண்டனர். புரண்ட வேகத்தில், ஒரு மரத்தின் வேரில் செந்திலின் உடல் மோதி நிற்க, அவன் மீது அழுந்தியிருந்த லோகு, திடீரென்று சரிவின் விளிம்பைத் தாண்டிப் போனான். செந்தில் கடைசி விநாடியில், பூமியில் இருந்து வெளிப்பட்டிருந்த அந்த வேரைச் சுற்றித் தன் கையைக் கோத்துக்கொண்டான். அவனுடைய சட்டையைப் பிடித்தபடி, லோகு அபாயகரமாக விளிம் பில் தொங்கினான். செந்திலையும் அவனுடைய பாரம் இழுத்தது.
கீழே முடிவு புரியாத பள்ளம். செந்திலின் சட்டை டர்... என்று கிழிய ஆரம்பித்தது. செந்தில் புரண்டு, கையை நீட்டி, லோகுவின் மணிக்கட்டைப் பற்றினான்.
"லோகு, இப்ப நான் என்ன செய்யட்டும்?"

லோகுவின் கண்களில் கிலி.
"உங்க அண்ணனைக் கொன்னேன்னு நீ என்னைக் கொல்லுவ. பதிலுக்கு எங்காளு ஒருத்தன் ஒன்னைக் கொல்வான். இதுக்கு எப்பதான் முடிவு?"
லோகு செயலற்று அண்ணாந்து பார்த் தான். செந்தில் பூமியில் அழுந்தியபடி, அந்த வேரைப் பற்றிக்கொண்டு, லோகுவைக் கொஞ்சம் கொஞ்சமாக மேலே இழுத்தான். ஒரு கட்டத்துக்குப் பிறகு, லோகு இன்னொரு கையை உயர்த்தி, தட்டுப்பட்ட வேறு சில வேர்களைப் பற்றி, தன்னை மேலே இழுத்துக் கொண்டான். அந்த முயற்சியில் இருவரும் களைத்தனர். வானத்தைப் பார்த்தபடி, வீழ்ந்துகிடந்தனர். மரண விளிம்பைத் தொட்டுவிட்டு மீண்ட அதிர்ச்சி லோகுவின் மூச்சில் தெரிந்தது. செந்தில் அவனைத் திரும்பிப் பார்த்தான்.
"சுத்திப் பாரு... உலகத்துல ரசிக்கற துக்கு எவ்ளோ கோடி விஷயம் இருக்கு... அதை விட்டுட்டு, எந்தக் காலடி சத்தம் கேட்டாலும், பயந்து பயந்து சாகற வாழ்க்கையைத்தான் கடைசி வரைக்கும் வாழப் போறியா? எல்லாத்துகிட்டயும் அன்பா இருந்து பாரு... அந்த சுகமே தனி..."
லோகுவின் கண்களில் கிலி விலகியது. கண்ணீர் கரகரவென்று வழிந்தது.
"இதே பள்ளத்துல என்னைப் பிடிச்சு தள்ளினாதான் உனக்கு நிம்மதி கிடைக்கும்னா, செய்!" என்று செந்தில் சொன்னதும் லோகு வாய்விட்டு அழஆரம்பித்தான்.
ஆதிமூலத்தின் பார்வையில் கனல் பறந்தது.
"பசங்க என்கிட்ட சொல்லாம இருந்துருவாங்களா? என்னடா முட்டாள் தனம் பண்ணிட்டு வந்திருக்க?" என்று எகிறி, பொளேரென்று லோகுவை அறைந்தார்.
லோகுவின் சகாக்கள் அவன் கண் களைச் சந்திக்காமல் தவிர்த்தனர்.
"அவரு புத்தரு... இவரு சீடரு. அவரு அன்பா இருக்கச் சொன்னாராம். அதனால இனிமே கத்தியைத் தொட மாட்டாராம்..."
லோகு தலைகுனிந்து நின்றான்.
"டேய்... நாலு நாள் டயம் தரேன். உன் கையால கைலாசத்தோட தலை உருளணும். இல் லேனா, என் கையால உன் தலை உருளும்."

மறுநாள்.

அதிகாலைச் சூரியனை ரசித்தபடி, கைலாசம் தன் வீட்டு மொட்டை மாடியில் தொட்டிச்செடிகளுக்குத் தண்ணீர் விட்டுவிட்டுத் திரும்பினார். திடுக்கிட்டார். அங்கே லோகு நின்றிருந்தான்!

- தடதடக்கும்...

சுபா
ஓவியம்: ஸ்யாம்

# யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் 29

லோகுவைப் பார்த்ததும், கைலாசத்தின் கையில் இருந்த பூவாளி எகிறியது.
"அத்தனை பேரையும் தாண்டி எப்படி மேல வந்த..?" என்று பதறினார்.
"நான்தான் கூட்டிட்டு வந்தேன்..." என்று பார்வைக்குள் வந்தான் செந்தில். லோகு, கைலாசத்தின் முன் மண்டியிட்டான்.
"காலைல ஒரு கொலையைப் பண்ணிட்டு நேரா இங்க வர்றேன்."
கைலாசம் திடுக்கிட்டார்.
"என்னது..?"
"உங்க தலையை நாலு நாளைக்குள்ள கொண்டுவரணும்னு ஆதிமூலம் கண்டிஷனா சொல்லிட்டாரு. அவர் இருந்தா ரெண்டு பக்கமும் தலை விழுந்துட்டே இருக்கும்னு தோணுச்சு. காலைல தூர்தர்ஷன் ரோடுல வாக் போனாரு. கூட இருந்தேன். அவரப் போட்டேன். கூவத்துல உருட்டிவுட்டேன்!"
கைலாசம் நம்ப முடியாமல் பார்த்தார்.
'இதுக்கு முன்னாலயும் பன்னெண்டு பேரை போட்டுத் தள்ளிருக்கேன். ஆனா, செந்தில் என் கண்ணைத் தொறந்துட்டாரு. எல்லா உண்மை யையும் சொல்லி போலீஸ்ல சரண் டர் ஆவப்போறேன். என்கூட வளர்ந்த பசங்களை நீங்கதான் பெரிய மனசு பண்ணி, உங்க கம்பெனில சேர்த்துக்கணும்."
"மன்னிப்பு கேக்கும்போதே செஞ்ச குத்தத்துக்கு தீர்ப்பு கிடைச்சுருது. உதவி செய்வோம்..." என்றான் செந்தில்.
கைலாசத்தின் கண்களில் நம்பிக்கை ஒளிர்ந்தது.
"உன் பேச்சுக்கு மறு பேச்சில்ல..." என்றார்.
தலைமை இல்லாமல், ஆதிமூலத்தின் ஆட்கள் சிதறிப் போயினர். லோகு, போலீஸில் சரண் அடைந்தான். லோகுவின் நண்பர்கள், கைலாசத்தின் கம்பெனியில் சேர்க்கப்பட்டார்கள்.
தீபா தன் வேலையை உதறினாள். அம்மாவுடன் சென்னைக்குக் குடியேறினாள். செந்திலின் அன்றாட நிகழ்வுகளை நேர்த்தியாகத் திட்டமிடும் பொறுப்பை ஏற் றாள். செந்திலின் புத்திசாலித்தனத்தாலும் விடாமுயற்சியாலும் விரைவிலேயே சென்னையின் முக்கியமான நிறுவனமாக 'கைலாஷ்-செந்தில் பில்டர்ஸ்' உருவெடுத்தது.
'யட்சன்' தயாராகி, முதல் காட்சி திரைத்துறையினருக்குப் போட்டுக் காட்டப்பட்டது. படம் முடிந்ததும், அனைவரும் எழுந்து நின்று கைத்தட்டினர். டைரக்டர் ஷங்கர், ஜோசஃபின் கைகளைப் பற்றிக்கொண்டார். "நல்லாப் பண்ணியிருக்கடா! தேங்க்ஸ்..." என்றார்.
பிரத்யேகமான திரையரங்கில் படத்தைப் பார்த்து முடித்ததும், ரஜினிகாந்த் பாரியை இழுத்து அணைத்துக்கொண்டார்.
"சூப்பர்... சூப்பர்! முப்பது வருஷத்துக்கு முன்னால இருந்த என்னையே பார்க்கற மாதிரி இருக்கு!"
"இந்த வாழ்க்கையே நீங்க கொடுத்ததுதான்..." என்று பாரி அவர் பாதங்களைத் தொட்டான்.
"தப்பு... தப்பு... இது கடவுளோட பிச்சை. சந்தோஷமா ஏத்துக்கோ. உழைக்கிறத வுட்டுராதே... சிவாஜி படமோ, கமல் படமோ பாத்தாதான் தூங்குறதுனு வெச்சுக்கோ. அவங்ககிட்ட கத்துக்க ஆயிரம் இருக்கு. இன்னும் பெரிய உயரத்தைத் தொடுவே!"
சூப்பர் ஸ்டார் முன் பாரி நெகிழ்ந்து நின்றான்.



'யட்சன்' வெளியான முதல் வாரமே தியேட் டர்கள் கூடுதல் பிரின்ட்கள் கேட்டன. இரவோடு இரவாக பாரி, நட்சத்திர அந்தஸ்து பெற்றான். பத்திரிகைகள் மொய்த்தன. தயாரிப்பாளர்கள் முற்றுகையிட்டனர். யட்சனைத் தொடர்ந்து, 'புத்தன்' படத்திலும், அவனுக்கு இணையாக கயல்விழியே ஒப்பந்தமானாள்.
பாரி, தேவியின் வீட்டைத் தேடிப் போனான்.
"வா பாரி.! ராக்கெட் மாதிரி மேல போயிட்ட..' என்று சாவித்திரி நிஜமான சந்தோஷத்தோடு வரவேற்றாள்.
"இது எங்க போனாலும் பூமிக்குத் திரும்பி வர்ற ராக்கெட் அக்கா..." என்றபடி சமையலறை வரை போய் எட்டிப்பார்த்தான்.
"தேவியா? கோயிலுக்குப் போயிருக்கு!"
"அக்கா, நேரடியா விஷயத்துக்கு வரேன். தேவியை மனசார விரும்பறேன். அவளைக் கல்யாணம் பண்ணிக்க ஆசை."
சாவித்திரி திகைத்தாள்.
"முட்டாளாடா நீ? சினிமாவுல பயங்கர ஹிட் ஆயிருக்க. அத்தனை பொண்ணுங்களும் உன் போட்டோ போட்ட டி-ஷர்ட்டுக்கு அலை யுதுங்க. இப்ப கல்யாணம் பண்ணிக்கிட்டா, உன் இமேஜ் போயிடும்டா.'
"எனக்கு இமேஜ் பத்திலாம் கவலையில்ல... வாழ்க்கைதான் முக்கியம்."
சாவித்திரியின் கண்கள் கலங்கின. நெற்றியில் குங்குமத்தோடு நுழைந்தாள் தேவி.
"என்னம்மா கண்ல தண்ணி..?"
"ஒன்னைக் கட்டிக்குடுக்கச் சொல்றான் இந்தப் பய..."
தேவி தளர்ந்தாள். அவள் கண்களிலும் நீர் துளிர்த்தது.
"வேணாம் பாரி! நான் பாவம் பண்ணவ. சுதாகர்னு ஒரு பொறுக்கி ஹீரோயின் ஆக்குறேன்னு ஆசை காட்டினான். புதுப் படம் எடுக்கப் போறாங்கனு நம்பி டைரக்டரு, புரொடியூசரு, அவன், இவன்னு ரெண்டு, மூணு பேர்கூட..."
பாரி அவள் வாயைப் பொத்தினான்.
"பழசைலாம் கிளறினா, உன்னைவிடப் பெரிய பாவமெல்லாம் பண்ணவன்தான் நானும். இப்ப இருக்கற வாழ்க்கை, தானாத் தேடி வந்தது. இதுல பழைய பாரியோ, பழைய தேவியோ இல்ல. இந்தப் பாரிக்கு வாழ்க்கை முழுசாகணும்னா, இந்த தேவி கூட இருக்கணும்!"
தேவி தெளிந்தாள். கண்ணீருடன் அவனு டைய கன்னத்தில் முத்தமிட்டாள்.
தீபா, செந்திலிடம் அந்த அழைப்பிதழை மகிழ்ச்சியோடு நீட்டினாள்.
"பாரிக்குக் கல்யாணம். மறக்காம நமக்கு அனுப்பிருக்கான் பாரு..."
"நான் வரலை..." என்றான் செந்தில் அதைக் கையில் வாங்காமல்.
"இன்னுமா அவனை வெறுக்கற?"
"அவனை நானே தேடிப் போவேன். ஆனா..."
"ஆனா?"
"இப்ப எதுவும் கேக்காத, தீபா..." என்று செந்தில் தீர்மானமான குரலில் சொன்னான்.

- தடதடக்கும்...

சுபா
ஓவியம்: ஸ்யாம்

# யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் 30

பாரியின் எளிமையான திருமணம், ஊடகங்களுக்குச் சூடான செய்தி ஆயிற்று. அத்தனை பிரபல நட்சத்திரங்களும், இயக்குநர்களும், தயாரிப்பாளர்களும், இசையமைப்பாளர்களும், பத்திரிகையாளர்களும் வந்திருந்து வாழ்த்தினார்கள். மூன்று நாள் அந்தமானில் தேன்நிலவு.
திரும்பியதும், 'புத்தன்' பட பூஜை. தமிழ்நாடு முழுவதும் சுவரொட்டிகளில், பாரி - கயல்விழி.
மைசூரில் 'புத்தனி'ன் முதல்கட்டப் படப்பிடிப்பு. பாரியை எங்கே பார்த்தாலும், ரசிகர்கள் மொய்த்தார்கள். அவனுடன் போட்டோ எடுத்துக்கொள்ள அலைமோதினார்கள்.
பாரி அன்றைய படப்பிடிப்பு முடிந்து, அறைக்குத் திரும்பினான்; தேவியிடம் போனில் பேசினான்; அயர்ந்து படுத்தான். திடீரென்று கதவு படபடவென்று தட்டப்பட்டது. யாரென்று புரியாமல் திறந்தான்; திகைத்தான்.
கலவர முகத்துடன் கயல்விழி! சட்டென்று அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினாள். அழ ஆரம்பித்தாள்.
'பாரி, மன்னிச்சிரு.. இந்தப் படத்துல இனிமே நடிக்க முடியாது.. எங்கயாவது ஓடிப் போயிடப்போறேன்.'
'கயல்.. என்னாச்சு?'
'எங்கம்மான்னு சொல்வேனே... அது உண்மையில அம்மா இல்ல! எடுத்து வளர்த்த சித்தி. இப்ப, அவங்க தம்பியும் வந்து ஒட்டிக்கிட்டாரு. அவங்க என்னை வெறும் ஏ.டி.எம். மெஷினாத்தான் பாக்கறாங்க. அடிமையா நடத்த றாங்க. அடிக்கிறாங்க. பாம்பேல இருந்து வந்திருக்காருல்ல, டான்ஸ் மாஸ்டர்... இந்திப் படத்துல சான்ஸ் வாங்கித் தருவாருன்னு, அவரை நைட் என் ரூமுக்கு வரச் சொல்லிருக்காங்க. இவங்களுக்காக எத்தனை பேரோட படுக்கறது பாரி? செத்துடலாம் போல இருக்கு.'



'நீ இங்கேயே இரு...' என்று பாரி விருட்டென்று வெளியேறினான்.

பாரியைப் பார்த்ததும், கயல்விழியின் சித்தி 'வாங்க தம்பி...' என்று குழைந்தாள். 'என்ன சாப்பிடறீங்க? ஜூஸ் சொல்லவா..?'

அறையில் விஸ்கி வாசம். அவளும், மாமன் என்று சொல்லிக்கொண்டவனும் அவசரமாக பாட்டில்களை சோ ஃபாவுக்குப் பின்னால் தள்ளினார்கள்.

'தாஸ்.. சேட்டுகிட்ட வர வேணாம்னு சொல்லிரு.. பாப்பா ரூமுக்கு போன் போட்டு தம்பி வந்திருக்காருன்னு சொல்லு...' என்று முதலிரவு அறைக்குள் மகளை அனுப்புவது போல் சித்தி வெட்கப்பட்டாள்.

'சரி...' என்று எழுந்த மாமன்காரனை, பாரி தோளில் அழுத்தி உட்கார்த்தினான். பழைய பாரி அவனுள் தலைதூக்கினான்.

'ஏய், பொண்ணை வச்சி வியாபாரமா பண்றீங்க... பொளந்துருவேன்.'

திடுக்கிட்டார்கள். மாமன் முதலில் சுதாரித்தான்.

'நீ யார்ரா அதைக் கேக்க?'

கேள்வியை முடிக்கும் முன் அவன் கன்னத் தில் பாரியின் புறங்கை பாய்ந்தது. மாமன் உருண்டான். பாரி அவனை மடக்கி முழங் காலுக்குக் கீழ் அழுத்திக்கொண்டு, அங்கிருந்த பாட்டிலை உடைத்து, அதன் கூர்முனையை அவன் கழுத்தில் பொருத்தினான்.

'சங்கறுத்துருவேன். இன்னொரு தடவை கயல் இருக்கற ஏரியால உங்களைப் பார்த்தேன்... ஆட்டம் க்ளோஸ்.'

'என்னப்பா இப்படிலாம் மிரட்டற..?' என்று குறுக்கில் பாய்ந்த சித்தியையும் தள்ளினான்.

அவன் கண்களில் சீற்றம்.

'ஒன்னையுந்தான். வெட்டிக் கூறுபோட்டுக் கொளுத்திருவேன்.. ஃபீல்டுக்கு வர்றதுக்கு முன்னாடி என் தொழிலே அதான்டி!"

அவன் குரலில் வெறி. அவர்கள் முகங்களில் கிலி. அறையை விட்டு வெளியேறும் முன் நின்றான். திரும்பினான்.

'போலீஸ்கிட்டப் போவியா... போ. எங்க போனாலும் எதையும் ஆட்ட முடியாதுடா வெண்ணை. மினிஸ்டரு, மீடியா, மாஸுனு எல்லாம் என் பக்கம்தான்.' என்று உறுமினான்.

காலையில், படப்பிடிப்பு தொடங்க ஏற் பாடுகள் நடந்துகொண்டிருந்தன. பாரியுடன் சிற்றுண்டி சாப்பிட அமர்ந்தாள் கயல்விழி.

"நீ மட்டும் அவசரப்பட்டுக் கல்யாணம் பண் ணிக்காம இருந்திருந்தா, உன்கிட்ட ஐ லவ் யூ சொல்லிருப்பேன்..." என்றாள் ஆதங்கத்துடன்.

"இப்ப என்ன கெட்டுப்போச்சு? அத்தனைப் படத்திலயும் சொல்லிக்கோ..." என்று சிரித்தான் பாரி. சித்தியும் மாமாவும் பெட்டிகளோடு எதிர்ப்பட்டார்கள்.

"அவங்க அக்காவுக்கு ஹார்ட்அட்டாக்னு யூனிட்ல சொல்லிட்டுக் கிளம்பறாங்க. புரொடி யூசர்கிட்ட ரெண்டு லட்சம் வாங்கிக் குடுத் தேன்...' என்றாள் கயல்விழி.

"எதுக்கு?"

"திரும்பி வராம இருக்கறதுக்கு..."

பாரி எழுந்தான். மாமன் தோளில் கை போட்டு, கார் வரை நடந்தான்.

'மறுபடியும் கயலைத் தொந்தரவு பண்ணா, எப்ப, எங்க, யார் உங்களை வெட்டிப் போடு வாங்கன்னு தெரியாது...' என்று அடிக்குரலில் மிரட்டினான்.

சித்தி வன்மம் பொங்க, 'நல்லா இரு தம்பி.' என்றாள்.

குறுகியகாலத் தயாரிப்பான 'புத்தன்' நான்கே மாதங்களில் வெளியானது. இன்னொரு சூப்பர் ஹிட்!

பாரி தன் தேவைகளைக் குறுக்கி, பெற்ற ஊதியத்தில் பெரும்பகுதியைக்கொண்டு, ஏழைக் குழந்தைகளின் கல்விக்கென ஓர் அறக்கட்டளை தொடங்கினான்.

சாவித்திரி, சந்தோஷமாக அதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டாள்.

அண்ணா மேம்பாலத்தில் காரைச் செலுத்தியபடி வெளியே பார்த்தான், செந்தில்.

'புத்தன்' 50-வது நாளை அறிவிக்கும் சுவரொட் டிகள்.

"ஜெயிச்சிட்டே இருக்கான்ல? அவனை நான் சந்திக்க வேண்டிய நேரம் வந்தாச்சு தீபா...' என்றான் இறுக்கமான முகத்துடன்.

- தடதடக்கும்...

சுபா
ஓவியம்: ஸ்யாம்

# யட்சன்

எக்ஸ்பிரஸ் தொடர் 31

பாரி, தன் சிறிய காரை, நுங்கம்பாககத்தின் முக்கியச் சாலையில் இருந்த அந்தக் கட்டடத்துக் குள் நிறுத்தினான். நான்காவது மாடியில் இருந்தது இயக்குநர் விஷ்ணுவர்தனின் அலுவலகம். சதுரக் கண்ணாடி, தாடி... பொங்கும் உற்சாகத் துடன் கைகுலுக்கி உள்ளே அழைத்துப்போனார் இயக்குநர்.

''யட்சன், புத்தன்... ரெண்டுமே சூப்பர். உங் களை வெச்சு ஒரு படம் பண்ணணும்னு ஆசை...' என்றார்.

'காத்திட்டிருக்கேன் சார். உங்க படங்கள்ல யூத்ஃபுலா ஒரு கிக் இருக்கும். அது எனக்கு ரொம்பப் பிடிக்கும்.'' என் றான் பாரி.

'ஒரு கேள்வி கேக்கலாமா?'

'ஷூட்...'

'அதெப்படி சார் அஜித் சார் படத்தோட தலைப்பைச் சொல்லா மலே 15 மாசத்தை ஓட்டினீங்க?'

விஷ்ணுவர்தன் 'ஹே... ஹே... ஹே...' என்று உரக்கச் சிரித்தார்.

20 நிமிடங்கள் கழித்து, நிறைந்த மனதுடன் பாரி வெளியே வந்தபோது, தொலைபேசி அழைத்தது. பேசினான். அவன் நெற்றி சுருங்கியது.

'நிச்சயமா வர்றேன்.' என்றான்.



முன் இரவு.

திருவல்லிக்கேணியில் நிழல் படிந்த சந்து முனையில் காரை நிறுத்தினான் பாரி.

'இந்த சந்துலயா இருந்த?' என்றபடி இறங்கி னாள் தேவி.

'அந்த மேன்ஷன்ல..' என்று காட்டும்போதே, பாரிக்கு உற்சாகம் பீறிட்டது.

மேன்ஷன் வாசலில் கூடியிருந்த இளைஞர் களிடம் பாரி நட்புடன் கைகுலுக்கி, புகைப்படங்கள் எடுத்துக்கொண்டிருந்தபோது, தீபா எதிர்கொண்டாள்.

'ஹலோ பாரி...' என்றாள். தேவியுடன் நிமிடத்தில் நட்பாகி, கை கோத்துக்கொண்டாள்.

'மாடிக்குப் போலாமா?'

மொட்டை மாடியில், காற்று அள்ளிப்போனது. தேய்ந்த நிலா. கலையும் மேகங்கள்.

செந்தில் காத்திருந்தான். பாரியைப் பார்த்த தும், நெருங்கிக் கட்டிப்பிடித்தான்.

'இந்த மொட்டைமாடி எனக்கு ரொம்பப் பிடிச்ச இடம். அதான் இங்க மீட் பண்ணலாம்னு சொன்னேன்...' என்றான்.

'பழைய ஞாபகத்தை எல்லாம் கிளறுது...' என்றான் பாரி. எங்கோ அம்மன் கோயிலில் திருவிழா; வேட்டுச் சத்தம்.

'அவங்க பேசட்டும்...'' என்று தேவியை தீபா அழைத்துப் போனாள்.

'முதல்ல என்னை மன்னிச்சிருங்க.. உங்க இடத்துல நான் இருக்கேன்..' என்று பாரி பணிவான குரலில் சொன்னான்.

'நம்ம வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது எந்த யட்சன் விளையாட்டோ! ஆனா, ரெண்டு பேரும் வீணாயிடல...' இருவரும் மொட்டை மாடிச் சுவரில் அமர்ந்தனர்.

'எனக்கு நடந்ததெல்லாம் தீபா மூலமா உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். ஆனா, உங்களுக்கு என்ன நடந்ததுன்னு...'

'சொல்றேன், பாரி...'

செந்தில், தனக்கு நேர்ந்ததை எல்லாம் சொல்லி முடித்தான்.

'ஒவ்வொரு கட்டத்துலயும் தீபாதான் எனக்கு தைரியம் கொடுத்தா. ஒருவழியா, எங்க அப்பாவும் அம்மாவும் இப்ப சமாதானம் ஆயிட்டாங்க.'

'எதைச் செஞ்சாலும் நூறு சதவிகித ஈடுபாட்டோட செஞ்சா, அதுல ஜெயிக்கலாம்னு நம்ப ரெண்டு பேர் வாழ்க்கையும் சொல்லுது' என்றான் பாரி நிறைவுடன்.

'உங்க அடுத்த புராஜெக்ட் என்ன செந்தில்?'

'இந்த மேன்ஷனை வாங்கிட்டோம் பாரி. சென்னையைத் தேடி வர்ற இளைஞர்களுக்கு இது வேடந்தாங்கலா இருக்கணும். சல்லிசு வாடகையில இங்கே தங்கி, அவங்க கனவை நிறைவேத்திக்க வசதி பண்ணித் தரணும்.'

'மத்தவங்க கனவு இருக்கட்டும், உங்க கனவு?'

'சினிமாவை மறக்க முடியல... அதைப் பத்தி பேசத்தான் உங்களைக் கூப்பிட்டேன்.. ரியல் எஸ்டேட்ல ஓரளவுக்கு சாதிச்சாச்சு. இப்ப தமிழ்ல சின்னப் படங்கள்லாம் ஜெயிக்குது. நல்ல கதைஅம்சத்தோட ஒரு படம் எடுக்கணும்னு ஆசை. என் படத்துல நடிப்பீங்களா பாரி..?'
'பணம் வாங்காம நடிக்கிறேன். ஆனா, ஒரு கண்டிஷன்.'
'என்ன?'
'நீங்களும் அந்தப் படத்துல நடிக்கணும்.'
செந்தில், கண்களைச் சுருக்கிக்கொண்டு பாரி யைப் பார்த்தான்.
'டபுள் ஹீரோ சப்ஜெக்ட் பண்ணலாம். இந்த மேன்ஷன்ல ஆரம்பிச்ச நம்ம கதையே இருக்கே?'
செந்திலின் கண்களில் நம்பிக்கை துளிர்த்தது.
'டைரக்ஷன்?"
"இந்த சப்ஜெக்ட்டை விஷ்ணுவர்தன் ரொம்ப நல்லா ஹேண்டில் பண்ணுவார்னு தோணுது!'
பாரி, கலகலவெனச் சிரித்தான்.
'ஏன் சிரிக்கிறீங்க?'
'இன்னிக்கு காலைலதான் நாங்க மீட் பண் ணோம்.. மறுக்க மாட்டாரு.'
விஷயத்தைச் சொன்னதும், தீபாவுக்கும் தேவிக்கும் அத்தனை சந்தோஷம்.
'படத்துக்கு ஸ்க்ரிப்ட் யாரை எழுதச் சொல்ல லாம் பாரி?'
'ரெண்டு பேர் கதையாச்சே. சுபா கரெக்டா இருக்கும். என்ன, 'பிஸி... பிஸி'னு கொஞ்சம் அலட்டிக்குவாங்க. வெளியூருக்குத் தூக்கிட்டுப் போய் கையோட கதையை முடிச்சிட்டு வந்துரணும்.'
'இந்தப் பட பூஜையா, உங்க கல்யாணமா, எது முதல்ல?' என்று உரிமையுடன் கேட்டாள் தேவி.
'ரெண்டையும் ஒண்ணா வெச்சிக்கிட்டாப் போச்சு' என்றான் செந்தில்.
'ஆனா ஒண்ணு. பூஜைக்கு பஸ்ல போனாலும் போ. கார்ல ஏறிடாத...' என்று தீபா சொன்னதும்..
அனைவரும் பொங்கிச் சிரித்தார்கள்.
பின்னணியில் வாணவேடிக்கை; சிதறும் வண்ணப் பூக்களாக இருள் வானில் வெளிச்சம்.

- முற்றும் -